Received only one copy
20/9/83

672
―――
85

INFORMATION ...
FORT ST. GEORGE, MADRAS-9

# பாரதப் பழங்குடிகள்

எஸ். ஆர். வேங்கடராமன் B.A.B.L.

தமிழ்உறவு

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-5.

[விலை : ரூ. 10-00

தமிழுறவு 122]

1567.2
N83

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | BHARATA PAZAMKUDIGAL |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | May, 1983 |
| Author | : | S. R. VENKATARAMAN B.A.B.L., |
| Copyright Holder | : | Author |
| Paper used | : | 11. 6 Kg. S.S. |
| Printing Type | : | 10 Point |
| Size of the book | : | 18.5 c.m. × 12. 5 c.m. |
| No. of Pages | : | IV + 160 |
| Binding | : | Card Board |
| Prize | : | **Rs. 10-00** |
| No. of copies | : | 1200 |
| Printer | : | Sri Rajeswari Printing works 22, Gajapathy Street Ice House, Madras-5. |
| Publisher, Sales Right | : | 'TAMIL WRITERS' Co-op. Society Ltd, Madras-600 005. |
| Subject | : | About Tribes |
| Call Number | : | |

135231

# முகவுரை

**சி**றியதொரு புத்தகத்திற்குப் பெரியதொரு முகவுரை தேவையில்லை. தமிழ் நாட்டுப் பல மாவட்ட வாசிகள் அடிக்கடி வில்லி, இருளர், கோத்தர், காடர், மலசர், மலையாளி, குறவர், தொதவர், பனியர், பாளியர் என்ற பல பழங்குடிகளின் பெயரை அடிக்கடி கேட்டிருக்கலாம். ஆனால் அப்பழங்குடிகளின் வரலாறு, பழக்க வழக்கங்கள், பண்பு, கலாசாரம் முதலியன பற்றி ஒன்றுமே தெரியாமலிருக்கலாம். இந்தப் புத்தகம் ஒருவாறு அக்குறையை நீக்குமென்று எண்ணுகிறேன். இதில் கூறப்பட்டவையனைத்தும் நான் நேரில் அவர்களோடு பேசிப் பழகி அறிந்தவை. பிறர் எழுதிய நூல்களைப் படித்தும் அறிந்தவை உண்டு.

இப்புத்தகத்துக்குப் பெருமை சேர்க்கும் படங்களை உதவிய அன்பர்கள் :

1. திரு. ஜி. என். தாஸ், நிர்காஜிமந்து, நீலகிரி
2. குமாரி விக்டோரியா ஆர்ம்ஸ்ட்ராங், கோதகிரி, நீலகிரி
3. தர்ஸ்டன், (தென்னிந்திய ஜாதிகளும் பழங்குடிகளும்) சென்னை—1908.

இவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை அச்சிட்டு வெளியிடும் பணியை ஏற்றுக் கொண்ட தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய ஊழியர் சங்கம்
சென்னை—14
5—5—83

**சி. ரா. வேங்கடராமன்**

**நூலைப் பற்றி :**

84 வயது கொண்டு இன்று நம்மிடையே வாழ்ந்து வரும் இந்த நூலாசிரியர், 'காடுகளிலும் மலை களிலும் உள்ள பழங்குடி மக்களைச் சந்தித்து அவர்கள் வாழும் இடங்களிலேயே பல நாள் வாழ்ந்து பழகிப் பேசி அவர்களது வாழ்முறைகளைக் கண்டறிந்து எடுத் துரைக்கும் செய்திகளே இவை' என்று கூறியுள்ளார். இந் நூலின் பெருமைக்கு இது ஒன்றே போதும். இந்த நூல் தமிழுறவு வெளியீடாக வருவது எங்களுக்குப் பெருமை யைத் தருவதாகும். தமிழுறவு வெளியீட்டு நூல்களைத் தமிழன்பர்கள் ஆதரிக்க வேண்டுகிறோம்.

அழகிய அட்டைப் படம் வரைந்துதவிய ஓவியர் திரு. ஆனந்தன் அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுதவிய ஸ்ரீ ராஜேசுவரி பிரிண்டிங் ஒர்க்ஸூக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'தமிழுறவாளர்'

**நூலில் உள்ளவை :**


| | | |
|---|---|---|
| | பாரதப் பழங்குடிகள் | ... 1 |
| 1. | மலசர் | ... 5 |
| 2. | மலையாளிகள் | ... 12 |
| 3. | சோனகர் | ... 19 |
| 4. | காடர் | ... 26 |
| 5. | மண்ணான் | ... 42 |
| 6. | இருளர் | ... 47 |
| 7. | பளியர் | ... 61 |
| 8. | புலையர் | ... 64 |
| 9. | முதுகர் | ... 67 |
| 10. | ஏரவள்ளர் | ... 74 |
| 11. | தொதவர் | ... 83 |
| 12. | குறும்பர் | ... 133 |
| 13. | கோண்டர் | ... 138 |
| 14. | சில பொதுச் செய்திகள் | ... 149 |

# பாரதப் பழங்குடிகள்

பாரத நாட்டுப் பழங்குடிகள் எனப் பலர் உள்ளனர். இவர்கள் எப்படிப் பழங்குடிகளாயினர் என்று பார்ப்போம்.

பண்டைக் காலத்தில், கொள்ளைக்காரர்களும் சிற்றரசர்களும் இந்தியா மீது படையெடுத்து மக்களைக் கொன்று துன்புறுத்தி அடக்கி, அவர்களுடைய பூமிகளைக் கைப்பற்றியதோடு அவர்களை அடிமைகள் போல் நடத்தினர். இக்கொடுமைக்குப் பயந்து அநேக குடும்பங்கள் நாட்டை விட்டு விலங்குகள் வசிக்கும் காட்டிலும், மலைகளிலும் குடியேறி வேட்டையாடியும் விவசாயம் செய்தும் வாழ்ந்து வந்தார்கள். அதன் பிறகு இவர்கள் நாட்டின் பொதுமக்களோடு எந்த விதமான தொடர்புமில்லாமல், தனித்தே காட்டிலும் மலையிலும் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, விலங்குகள் இவற்றைக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்களைத்தான் இப்போது பழங்குடிகள் என்று அழைக்கிறோம். வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளின்றிப் பிற்போக்கடைந்து, ஆடு மாடுகள்போல் படிப்பின்றி, சுகாதார வழியின்றி, தரமான தொழிலின்றி, போதிய வருமானமின்றி வாழ்ந்து வருகிறார்கள்.

இப்பழங்குடிகள் இந்திய நாட்டில் ஹிமாசலம் முதல் கன்னியாகுமரி வரை ஆங்காங்கு மலைகளிலும் காடுகளிலும் இன்றும் வசிக்கின்றனர். இவர்களுள் சுமார் 300 வகுப்புகள் உண்டு. அவர்களின் ஜனத்தொகை 380 லட்சம். அதாவது இந்தியாவின் ஜனத்தொகையில் சுமார் 6.94 சதவிகிதம் பழங்குடிகளாவர் 1971-ஆம்

ஆண்டு ஜனகணிதப்படி (census). தமிழ் நாட்டின் ஜனத் தொகை 1971-ம் ஆண்டு ஜன கணிதப்படி 4, 11, 99, 168. அதில் பழங்குடிகளின் ஜனத்தொகை 3,11575. அதாவது தமிழ்நாட்டில் நூற்றுக்கு 0.76 நபர்தான் பழங்குடிகள். விளங்கச் சொன்னால் ஆயிரத்தில் 76 பேர்தான் பழங் குடிகள். இவர்கள் தமிழ் நாட்டில் எங்கெங்கே வசிக் கிறார்கள் என்ற விவரங்களைப் பின் சேர்க்கையில் காணலாம்.

தமிழ் நாட்டுப் பழங்குடிகளின் வரலாறு, பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு, கலாசாரம், நுண்கலை, இவற்றைப் பற்றி அநேக மேனாட்டு மானிட இயல்பு நூல் பண்டிதர்கள் (Anthropologists) எழுதியிருக்கிறார்கள். அவற்றிலிருந்து நம் நாட்டுப் பழங்குடிகளின் வாழ்க்கை யில் சில அரிய அம்சங்கள் இருப்பதை அறிகிறோம். நமது நாட்டுப் பண்பு அவர்களது வாழ்க்கையில் பிணைந்திருப் பதைப் பார்க்கலாம்.

சென்ற அறுபதாண்டுகளாகச் சமூகத்தொண்டில் ஈடு பட்டுள்ள இந்த நூலாசிரியர் தமிழ் நாட்டிலும், இந்தியா வில் பல பாகங்களிலும் உள்ள பழங்குடிகள் வசிக்குமிடங் களுக்குச் சென்று அவர்களது வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, தொழில், நுண்கலை இவற்றை நேரில் கண்டறிந்திருக்கிறார். மேலும்,இந்திய ஊழியர் சங்கத்தின் அங்கத்தினர் என்ற முறையில் சென்ற அறுபது ஆண்டு களாகப் பழங்குடிகளின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு உழைத்து வந்திருக்கிறார். இவருடைய கண் காணிப்பில் ஆந்திரப் பிரதேசத்திலும் தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் மாணவ மாணவி உறைவிடப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மதிய உணவுத் திட்டம், வைத்திய வசதி, குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள், மதுவிலக்குப் பிரசாரம், நுண்கலைப் பயிற்சி முகாம் போன்ற திட்டங் களைச் சென்றஐம்பதாண்டுகளாகக் கிராமப்புறங்களிலும்,

மலைப்பிரதேசங்களிலும் நடத்தி இந்திய ஊழியர் சங்கம் தொண்டாற்றி வருகிறது. ஆகவே இந்த ஆசிரியருக்கு இந்தியப் பழங்குடிகளின் வாழ்க்கை சுகதுக்கங்களை நன்கறிய வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பயனே இந்நூல்.

தமிழ் நாட்டில் மட்டும் பழங்குடிகள் என மொத்தம் 42 வகுப்பினர் உண்டு. அவர்களின் பட்டியலை இந்த நூலின் கடைசியில் பார்க்கலாம். ஆனால் இந்நூலில் சிறியதும் பெரியதுமான 12 பழங்குடிகளைப் பற்றித்தான் கூறப் படுகிறது. அந்தக் குடியினர் மலசர், மலையாளிகள், சோளகர், காடர், மண்ணன், இருளர், பனியர், புலையர், முதுகர், எராவளர், தொதவர், குறும்பர் என்பவராவர். எஞ்சி உள்ள 30 பழங்குடிகளின் வரலாறு பின்னால் பிரசுரிக்கப்படும்.

★



மலசர்

# 1. மலசர்

முதலில் மலசரைப்பற்றிக் கவனிப்போம். தர்ஸ்டன் என்பவர் (Edga Thurston) "தென்னிந்திய ஜாதிகளும், குழாம்களும் (South Indian Castes and Tribes) என்று ஏழு புத்தகங்களில் ஆதிவாசிகளைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

தமிழக அரசு ஆதிவாசிகளின் நிலைமையைப் பரிசீலனை செய்து அவர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டிற்குத் தக்க சிபாரிகளைச் செய்யும்படி ஒரு கமிட்டியை நியமித்தது. அக்கமிட்டியார் தமது சிபாரிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலும் இம் மலசர்களைப் பற்றிய விவரம் இருக்கிறது. ஆனால் அது தர்ஸ்டன் துரை எழுதிய புத்தகத்தில் உள்ள வரலாற்றின் சுருக்கமேயன்றிப் புதிதாக விசாரித்து எழுதியதாகத் தெரியவில்லை.

கோயமுத்தூர் ஜில்லாவில் 8441 பேரும், மலையாள ஜில்லாவில் 2161 பேரும் மொத்தம் 10602 மலசர்கள் இருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள மலசர்கள் ஆனை மலையைச் சேர்ந்த ரிசர்வ் காடுகளில் கூலிக்கு வேலை செய்கிறார்கள்; தனியார் பண்ணைகளிலும் விவசாயம் செய்கிறார்கள். இவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வசிப்பதில்லை. அற்பக் காரணத்தைக் கொண்டு மலசர் இடம் விட்டு இடம் மாறும் வழக்கமுடையவர்கள். மரம் வெட்டுவதில் சமர்த்தர். பளுவான மூட்டைகளையும் எளிதில் எடுத்துச் செல்லும் உடல் வலிவுள்ளவர்கள்.

மலசர் வசிக்குமிடத்திற்குப் பதி என்று பெயர். ஆனைப்பதி, மொண்டிப்பதி, சர்க்கார் பதி என்று மலசர் கிராமங்களெல்லாம் பதி என்ற ஈரெழுத்து வார்த்தையில் முடியும். பெரிய நிலக்கிழார்கள் மலசரைத் தமது பண்ணையில் கொத்தடிமைகளாக (Bonded Labour) வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறார்கள். ஒருவிதமான வாரமோ குத்தகையோ இன்றி நில உடைமைக்காரர்கள் ஒரு மலசனுக்கு வேண்டிய நிலத்தைக் கொடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக மலசன் நிலச்சுவான் உடைமைக்காரரின் மற்றைய பூமிகளை உழுது சாகுபடி பண்ண வேண்டும். இதில் மலசருக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பயிரிடும் காலம் மலசருக்கும், நிலச்சுவான்தாருக்கும் ஒன்றுதான். ஆகையால் நிலச்சுவான்தார், முதலில் தன் பூமியைச் சரிவரச் சாகுபடி செய்யும்படி மலசரை நிர்ப்பந்திப்பதும் சகஜம். இதனால் மலசன் பருவ காலத்தில் தன் பூமியைச் சரிவரக் கவனிக்க முடியாமற் போகிறது.

### குடியிருப்பு

மலசரின் குடிசை மூங்கிலினாலும் இலைகளினாலும் அமைக்கப்பட்டது. பார்ப்பதற்கு அழகாகவும் சுத்தமாகவும் இருக்கும். குடிசைகள் குடும்பத்திற்கு ஏற்றபடி பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கும். மிகச் சிறிய குடிசை இருபது அடி சதுரம். அதில் 5 முதல் 7 பேர் பெரியவர்கள் சிறியவர்கள் உள்பட வசிக்கலாம். இந்த இருபது அடி சதுரத்தில், வாயில் முன்புறத்தில் ஒரு தாழ்வாரமும் ஒரு சிறிய மறைப்பும் உண்டு.

பின்புறம் இருக்கும் அறை 12 அடி அகலமும் 20 அடி நீளமும் உள்ளது. இதுவே, அவர்கள் வசிப்பதற்கும், தூங்குவதற்கும் ஏற்ற இடம். மழைக்காலத்தில் தவிர மற்றைக்காலங்களில் வெட்ட வெளியில்தான் சமைப்பார்கள். குடிசையின் கூரையின் அடிப்பாகம் தேக்கு

இலைகளை பரப்பி மூடப்பட்டிருக்கும். அதற்கு மேல் மூங்கில் இலைகளைப் போட்டுக் கூரை வேயப்பட்டிருக்கும். குடிசையின் தளம் தரைமட்டத்திற்கு மேல் ஒன்றரை அடி உயரமும் இருக்கும். சிற்சில இடங்களில் தரையில் பல மூங்கில் கால்களை நாட்டி, அவற்றில் 10, 15 அடி உயரத்துக்கு மேல் குடிசைகளைக் கட்டி அதில் இரவில் தூங்குகின்றனர். அக்குடிசைகளின் மீதேறக் கணுவுள்ள மூங்கிலை நட்டு, அக்கணுக்களின் முடிச்சுகளில் காலைவைத்து மேலே ஏறுகிறார்கள். காட்டில் உள்ள கொடிய மிருகங்களினின்றும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள மலசர் இம்மாதிரி குடிசைகளைக் கட்டிக் கொள்ளுகிறார்கள்.

மதயானைகள், புலி கரடிகள் வந்தால், உயர்ந்த இக்குடிசைகளில் ஏறிக்கொண்டு பறை அடித்தும், அம்பு, வில் கொண்டும் அவற்றை விரட்டுவர்; இரவில் நெருப்பு வளர்த்தும் அம்மிருகங்களை விரட்டுவார்கள். மலசன் கையில் எப்போதும் ஒரு தடியும் அரிவாளும் உண்டு. அரிவாள் அவர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பது பின்வரும் சம்பவத்தால் தெரியும். ஒரு மலசன் காட்டில் மூங்கில் வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது அவனையறியாமல் பின்புறமாக ஒரு கரடி வந்து தனது நகங்களால் அவனது கழுத்தைப் பிடித்துக் கீறிவிட்டது. இரத்தம் கொட்டிற்று. அதனோடு பலத்த காயமும் கூட. இது நடந்ததெல்லாம் ஒரு இமைப்பொழுதில் எனினும் மலசன் தன் தைரியத்தை இழக்காமல், தன் கையிலிருந்த அரிவாளால், அக்கரடியின் முகத்தில் ஓங்கி இரண்டடி போடவும் அதன் மூக்கறுந்தது. கரடியும் சத்தம் போட்டுக் கொண்டு காட்டிற்குள் ஓடிப்போய் விட்டது. பிறகு அம்மலசனைப் பொள்ளாச்சி ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக அனுப்பினார்கள். பின்னர் அவன் குணமடைந்து விட்டான்.

**திருமணம்**

மலசர் தமது பெண்களை வயது வருவதற்கு முன்பே மணம் செய்விக்கின்றனர். அவர்கள் சாரதா சட்டமும் பிற சட்டங்களும் அறியார். தமது பரம்பரைப் பழக்கத்தின் படியே நடக்கின்றனர். ஆனால் பெண்களுக்கு மணம் பத்து வயதிற்கு மேல்தான் நடக்கிறது. பெற்றோர்கள் தான் பெண்ணுக்கு மணமகனைத் தேடி மணம் செய்விக்கின்றனர். கலியாணத்தில் பெண்ணின் மாமியார் பெண்ணின் கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறு கட்டுவாள். அது மணம் நடந்ததற்கு அறிகுறி. மணம் மகன் வீட்டில் தான் நடக்கும். மணமகனின் வீட்டார் கூறைப்புடவையுடன் மணப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று பெண்ணைக் கலியாணத்திற்கு அழைத்து வருவார்கள். பெண்ணின் பெற்றோர்கள் தம் பெண்ணை மணமகன் வீட்டாரிடம் ஒப்படைத்து விருந்துண்டபின் தம் வீடு செல்வர். பெண் தவருக நடந்து கொண்டால் கிராமப் பஞ்சாயத்தார் விசாரித்து, குற்றம் ருசுவானல் பெண்ணைக் கட்டி அடித்துப் பிறகு தகப்பன் வீட்டிற் கனுப்புவார்கள். புருஷன் மறுபடியும் அவளை ஏற்றுக் கொள்ள மாட்டான். வேண்டுமென்றால் அப்பெண் வேறொருவனை மணந்து கொள்ளலாம். விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆயின் தன் புருஷனின் குலத்தை விட்டு வேறு குலத்திலும், வேறு கிராமத்திலும் இருப்பவனை மணம் செய்து கொள்ளலாம். விதவையின் குழந்தைகளைப் புதிதாக மணம் செய்து கொள்பவன் ஏற்றுக் கொண்டு காப்பாற்ற வேண்டும்.

**மதம்**

மதவிஷயத்தைப் பொறுத்த மட்டில் மலசர் ஹிந்துக்கள் தான். பத்ரகாளி, வீரபத்ரன் போன்ற ஹிந்து தெய்வங்களை வழிபடுகின்றனர். மரத்தடியில் சில கற்களை நட்டு, அவற்றைக் கும்பிடுகின்றனர். இத்

தெய்வங்களுக்குக் கார்த்திகை முதல் தேதி முதல் மார்கழி 10—தேதி வரை பூசை, ஒரு மண்டலத்திற்குப் போடு கிருர்கள். ஒரு மண்டலம் என்பது நாற்பது நாட்கள்· துஷ்டப் பிராணிகளான யானே, சிறுத்தை தங்களைத் தொந்தரவு செய்யாமலிருக்க, 'மல்லன்' என்ற ஒரு தெய்வத்தை வழிபடுகின்றனர். கோழியையும், ஆட்டையும் பலியிடுகின்றனர். சங்கராந்தி, விஷு, ஓணம், பண்டிகைகளையும் கொண்டாடுகின்றனர். ஒருவனை வருத்தினால் அதனால் தனக்கும் வருத்தம் ஏற்படும் என்பது மலசனின் கொள்கை. ஆகையால் மலசன் ஒருவரையும் துன்புறுத்த மாட்டான். மலசர் ஹிந்துக்களின் பெயரையே வைத்துத் தம் குழந்தைகளை அழைக்கின்றனர். ராமன், அய்யப்பன், வேலாயுதன், கோபி, லக்ஷ்மி என்றும் பெயர் வைத்துக் கொள்கிருர்கள். மலசர் பல தாரங்களைக் கட்டிக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள்.

### பிற பழக்கவழக்கங்கள்

பிரசவம் ஒரு தனிக் குடிசையில்தான் நடக்கும். பதினைந்து நாட்களுக்குத் தீட்டுக் காப்பார்கள். மலசர்கள் நல்ல கட்டுமஸ்தான உடம்புடையவர்கள். பொறுமையும், அடக்கமும், நம்பிக்கையு முடையவர்கள். சிரித்த முகமுடையவர்கள். தலைமயிரை நடுவில் வகிடு எடுத்துப் பின்னல் கொண்டை போடும் வழக்கம் அவர்களிடையே உண்டு. பெண்கள் பார்ப்பதற்கு அழகாகவும் புத்திசாலித்தன முடையவர்களாகவும் தோன்றுகிருர்கள். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது களிமண்ணையும் சாணியையும் சீயக்காய்க்குப் பதிலாக உபயோகிக்கின்றனர்.

குழந்தை பிறந்த மூன்ரும் மாதம் நாமகரணம் செய்கிருர்கள். இறந்தவர்களைப் புதைக்கிருர்கள். அப்போது கள் குடிப்பது வழக்கமாம். "இப்போது கள்

கிடையாதே, என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு ''ஏதோ கிடைத்தவரை குடிக்கிறதுதான்'' என்று பதில் சொன்னுன் ஒரு மலசன்.

மலசர்களுக்குள் ஒரு நல்ல கட்டுப் பாடும் ஒழுக்கமும் உண்டு. காட்டில் குறிப்பிட்ட பாகத்தை, குறிப்பிட்ட கிராமங்களுக்கு எனப் பகிர்ந்து கொள்வார்கள். அந்தப் பாகத்தில் உள்ள மலைபடு பொருள்களை வேறு எந்தக் கிராமத்தாரும் வந்து எடுக்க மாட்டார்கள். ஒரு தேனீக் கூட்டையோ அல்லது அடையையோ வேறு ஒரு மலசன் கண்டு பிடித்திருந்ததாகத் தெரிந்தால் மற்ற மலசர்கள் அதைத் தொடமாட்டார்கள்.

காட்டில் மிருகங்களின் அடிச்சுவடு பற்றி வழியறிந்து துஷ்ட மிருகங்களின் இருக்கை அறிவதிலும் மலசர் வெகு திறமையானவர்கள். மான், முயல் இவற்றை வலை போட்டுப் பிடிப்பதில் சமர்த்தர்கள். கோடைக் காலத்தில் மலையருவியின் குறுக்கே அணையிட்டு மீன் பிடிக்கிருர்கள்.

அவர்கள் சாப்பிடுவது பெரும்பாலும் காட்டுக் கிழங்குகள் தான். தாங்கள் சேகரிக்கும் மலைபடு திரவியங் களைக் கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிடுகிருர்கள். சாமை, தினை, கம்பு இவற்ருல் செய்த கஞ்சியையும் சாப்பிடுகிருர்கள். அவர்கள் விருந்தாளிகளுக்கு மூங்கி லரிசியைத் தேனில் கலந்து ஒரு மூங்கில் குழாயில் போட்டு அதற்கு மேல் மண்பூசி, அதை வேக வைத்து அளிப்பார்கள். இதுதான் அவர்களின் பாதாம் ஹல்வா. அல்லது ஜிலேபி... வேக வைத்த பிறகு மூங்கில் வெடிக் கிறது. அதினின்றும் உருண்டு திரண்ட நீளமான மூங்கிலரிசித் தேன்கொழுக்கட்டை வெளியே வருகிறது. இது மிகவும் ருசியுள்ளது என்று சொல்கிருர்கள். மானின் மாமிசம், காட்டெருமையின் மாமிசம், புலி அடித்துத்

தின்று எஞ்சிய மிருகங்களின் மாமிசம், ஆகிய இவற்றை இவர்கள் சாப்பிடுகின்றனர். ஆனல் மாடு, நாய், புலி, யானை இவற்றின் மாமிசத்தைச் சாப்பிடுவதில்லை.

மலசர்களுக்கு நோய் வந்தால் அது கடவுளின் குற்றத்தால் ஏற்பட்டது என்று கடவுளை வழிபடுவர். அக்கடவுளின் பெயர், 'ஆத்துச் சேரி அம்மன்' என்றுசொல்லுகிறார்கள். தேங்காயும், வெற்றிலை பாக்கும் வைத்து அந்த அம்மனைக் கும்பிடுவார்கள். பொங்கல் பண்டிகை, ஆடி நோன்பு முதலியவற்றைக் கொண்டாடுகிறார்கள். மழையில்லாவிட்டால் ஆத்துச் சேரி அம்மன் தலையில் குடம் குடமாகத் தண்ணீர் ஊற்றினல் மழை வரும் என்பது அவர்களுடைய திடமான நம்பிக்கை. ஒரு துஷ்ட யானை வந்து அவர்களைத் தொந்தரவு செய்தால் ஆத்துச் சேரி அம்மனுக்கு சமீபத்தில் ஒரு கல்லை நட்டு வழிபட்டால் அந்தத் தொந்தரவு தீர்ந்து போகிறதாம். துஷ்ட யானைகளை மந்திரத்தால் கட்டும் சக்தியும் மலசர்களுக்கு உண்டாம்.

# 2. மலையாளிகள்

தமிழ் நாட்டில் மலையாளிகள் என்ற பிற்போக்கான குடிகள் இருக்கின்றனர், இவர்கள் கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு,தென் ஆர்க்காடு ஜில்லாக்களில் உள்ள மலைப் பிரதேசங்களில் வசித்து வருகிறார்கள். ஆனால் இவர்களுடைய பெயர் இந்திய அரசாங்கத்தார் தயாரித்துள்ள பிற்போக்கான குடிகளின் ஜாப்தாவில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவர்களின் ஜனத்தொகை சுமார் 25,000 வரை இருக்கலாம்.

**சேலமாவட்ட மலையாளிகள்**

சேலம் ஜில்லாவில் உள்ள சேர்வராயன் மலைப் பிரதேசத்தில் இந்த மலையாளிகளில் ஒரு பகுதியினர் வசிக்கிறார்கள். இவர்களின் வரலாறு வருமாறு :—

பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இவர்கள் தமிழ் நாட்டில் நாகரிகமும் வளமும் படைத்த சமவெளிகளில் வசித்து வந்தவர்கள். வேறு ஜாதியார் இவர்களிருந்த சமவெளிகளில் வந்து வலிந்து குடியேறி இவர்களின் நிலங்களைப் பிடுங்கிக் கொள்ளவே இந்தப் பழங்குடிகள் சமவெளியிடங்களை விட்டு மலைப் பிரதேசங்களுக்கு ஓடி விட்டனர். நாகரிக மக்களின் நடுவில் வசிக்கும் வாய்ப்பு அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளாக இல்லாமற் போகவே இப்போது மிகவும் தாழ்மையான வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். ஆகவே இவர்கள் இப்போது மலையாளி என்ற ஒரு புதிய ஜாதியினராக விளங்குகின்றனர்.

மலைப் பிரதேசத்தில் வசிப்பதால் இவர்களை மலையாளி (மலையை ஆள்பவர்) என்று அழைக்கிறார்கள். இவர்கள் தோடர்களைப் போல பூர்வஜாதிகள் அல்லர். இவர்கள் சமவெளியிலிருந்து மற்ற வலிய வகுப்பாரின் தொல்லையையும், கொடூரத்தையும் பொறுக்காமல் கல்ராயன் மலை, கொல்லி மலை, சேர்வராயன் மலை ஜவ்வாது மலைகளில் குடியேறி இருக்க வேண்டும்.

இவர்கள் ஆதி முதல் இம்மலைப் பிரதேசங்களில் வசிக்கவில்லை. சமவெளியில் வசிக்கும் மற்ற நாகரிகம் படைத்த மக்களுடன் இவர்களும் ஒற்றுமையாய் வசித்து வந்திருக்க வேண்டும் என்பதற்கு அவர்களுடைய சமயம் பழக்க வழக்கங்களே போதிய சான்று. அவர்கள் சிவன், விஷ்ணு, விநாயகர் போன்ற தெய்வங்களைத்தான் வழிபடுகிறார்கள். மற்ற மலைசாதிகள், பூர்வீக குடிகள், போல பிசாசுகளையோ, பேய்களையோ இவர்கள் வழிபடுவதில்லை. மற்றைய பூர்வீக குடிகளைப் போலல்லாமல் இவர்கள் தலையில் குடுமி வைத்திருக்கிறார்கள். இவர்கள் சமவெளியில் வசிக்கும் நாகரிக மக்களையே பின் பற்றியவர்கள் என்பதற்கும் இது அறிகுறி. இக்காரணங்களால் இவர்கள் வேளாள வகுப்பினர் என்றும் தமிழ் நாட்டுச் சமவெளியிலிருந்து சேர்வராயன் மலைக்கு வந்தவர்கள் என்றும் தெரிகிறது. ஆனால் எங்கிருந்து வந்தார்கள் என்பதுதான் கேள்வி.

சேலம் ஜில்லா மான்யுயலின் ஆசிரியர் இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்கிறார். இதற்கு ஆதாரம் மலையாளிகளிடம் வழங்கும் பரம்பரைக் கதை தான். சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் முகம்மதியர் ஆட்சி மும்முரமாயிருந்த காலத்திலே காஞ்சிபுரத்தை விட்டுப் பெரியண்ணன், பச்சையண்ணன், சின்னன் என்ற மூன்று சகோதரர்கள்

ஓடி வந்து இந்தச் சேர்வராயன் மலையில் குடியேறினர் களாம்.

மூத்தவன் சேர்வராயன் மலையிலும், இரண்டாமவன் கொல்லி மலையிலும், மூன்றுமவன் பச்சை மலையிலும் முறையே குடியேறினர்கள். ஆகவே சேர்வராயன் மலையிலுள்ள மலையாளிகளுக்குப் பெரிய மலையாளி என்றும், கொல்லி மலையில் வசிப்போருக்குச் சின்ன மலையாளியென்றும் பெயர் வழங்குகிறது.

மற்றொரு வரலாறு என்னவென்றுல் மலையாளிகள் வழிபடும் கடவுளான கரிராமன், காஞ்சியில் வசிப்பது தனக்கு மிகவும் கஷ்டமாயுள்ளதென்று அங்கிருந்து வேறு ஒரு புதிய இடத்தில் கோவில் கொண்டார். கரிராமன் பக்தர்களான பெரியண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன் ஆகியோரும் கரிராமனெடு புறப்பட்டுச் சேலத்துக்கு வந்தார்களாம். சேலத்தை அடைந்ததும், பெரியண்ணன் சேர்வராயன் மலைக்கும், நடுவண்ணன் பச்சை மலை அஞ்சூர் மலைக்கும், சின்னண்ணன் மஞ்சவாடியென்ற இடத்திற்கும் சென்றுர்களாம்.

**திருச்சி மாவட்ட மலையாளிகள்**

மலையாளிகள் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலும். கொல்லி மலையிலும் வசிக்கின்றனர். இவர்களுடைய வரலாற்றைப்பற்றி பல நாடோடிப் பாட்டுகளும் உண்டு. இவர்கள் காஞ்சிபுரத்தரசனின் சகோதரரான ஒரு பூசாரியின் சந்ததிகளென்றும், அந்தப் பூசாரி தன் சகோதரனை அரசனுடன் சண்டை பிடித்துக்கொண்டு காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்டு, தனது மூன்று பிள்ளைகளுடனும். பெண்மக்களுடனும், திருச்சிராப்பள்ளிக்கு வந்ததாக எம். ஆர். ஹெமிங்வே என்பவர் சொல்லுகிறுர். அந்தக் காலத்தில் திருச்சிப் பிரதேசத்தை வேடர்களும், வேளாளர்களும் ஆண்டு வந்தார்கள். புதிதாகக் குடியேற வந்த மனிதர்களை அவர்கள் தடுத்தனர். ஆனுல்

சங்கநாதம் முழங்கியது; சக்ரம் அறுத்தது. குடியேற வந்தவர்கள் வெற்றியடைந்தனர். பிறகு அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள சேர்வராயன் மலையிலும், பச்சை மலையிலும், கொல்லி மலையிலும் குடியேறினர்.

இவர்களுள் பெரியண்ணன் ஒரு கைக்கோளப் பெண்ணையும், நடுவண்ணன் ஒருவேடப் பெண்ணையும், சின்னண்ணன் ஒரு தேவேந்திரப் பள்ளிப் பெண்ணையும் மணந்து கொண்டனராம். அவர்கள் குடியேறியபோது, தம்மை எதிர்த்தவர்களோடு சண்டை செய்த காலத்தில் தமக்கு உதவி செய்த ஒரு தொட்டியனுக்குத் தமது சகோதரியை மணஞ்செய்வித்தனராம். இதற்கு ஆதார மாக இவர்களிடை சில வழக்கங்கள் இன்றளவும் இருந்து வருகின்றன. பச்சை மலையாளிப் பெண்கள் தங்களது கணவன்மார்களுக்குச் சாப்பாடு போடுவதற்கு முன்பு தங்களது மூதாதையான வேடனுக்குத் தமது உணவில் ஒரு பாகத்தை எடுத்து வைப்பது வழக்கமாயிருக்கிறது. மணமகன் தனது மூதாதையர்கள் வேடன் என்பதை நினைவூட்டக் கலியாணப் பந்தலில் ஒரு வாளையும், வில்லையும் கொணர்ந்து வைப்பது வழக்கம். இது அவர்கள் சமர்புரிந்து வெற்றியடைந்ததின் அடையாளம் கூட.

கொல்லி மலையில் உள்ள மலையாளிகளைப் பள்ளர் வகுப்புப் பெண்கள் "மச்சான்" என்றும் கூப்பிடு கிறார்கள். இதை மலையாளிகள் விரும்புவது இல்லை. தொட்டியர்களோவெனில் மலையாளிகளை மைத்துனர் என்றெண்ணி, மரியாதையுடனும், அன்புடனும் நடத்து கிறார்கள். தொட்டிய ஜாதிப் பெண்களோவெனில் மலை யாளிகளைச் சகோதரன் என்று பாவித்த போதிலும், ஒரு வேளைச் சாப்பாட்டிற்காகத் தங்கள் சகோதரியை விற்ற வர்கள் என்றெண்ணி, மலையாளிகளைச் சட்டை செய்வ தில்லை.

**வட ஆற்காடு மாவட்ட மலையாளிகள்**

வட ஆற்காட்டில் ஜவ்வாது மலையிலும் ஏலகிரி மலையாளிகள் இருக்கின்றனர். இவர்களின் பூர்வ சரித்திரமும் ருசிகரமானது. சுமார் எண்ணூறு வருஷங்களுக்கு முன் கங்குண்டி வேடர்கள் காஞ்சிபுரத்தில் உள்ள கரை காத்த வேளாளர்களையணுகி அவர்கள் பெண்களைத் தமக்கு மணம் செய்விக்க வேண்டுமெனக் கேட்டனராம். கரை காத்த வேளாளர் அவர்களை அவமதித்துத் தமது பெண்களை மணம் செய்து கொடுக்க மறுத்து விட்டனர். கங்குண்டி வேடர்கள் கோபங் கொண்டு ஏழு வேளாளப் பெண்களைத் தூக்கிக் கொண்டு கங்குண்டிக்கு ஓடி வந்து விட்டனர். அந்த ஏழு பெண்களை மீட்க ஏழு வேளாளர்கள் ஏழு நாய்களுடன் புறப்பட்டனர். புறப்படும்போது தமது பெண்சாதிகளிடம் நாய்கள் மாத்திரம் திரும்பி வந்தால் அந்த ஏழு வேளாளர்களும் இறந்து போனதாகக் கருத வேண்டும் என்றும், பிறகு வேண்டிய ஈமக்கிரியைகளை நடத்த வேண்டுமென்றும் சொல்லிப் போயினர். இந்த ஏழு பேரும் பாலாற்றை அடைந்தார்கள். நதியில் வெள்ளம் அதிகமாயிருந்ததால் இந்த ஏழு பேரும் கஷ்டப்பட்டு நதியைக் கடந்து மறுகரை சேர்ந்தார்கள். அவர்களுடைய நாய்கள் நதியில் பாதி தூரம் நீந்திச் சென்று, பயந்து திரும்பி, வந்த கரையையே சேர்ந்து,காஞ்சிபுரத்திற்கே திரும்பி விட்டன.

மறுகரை சேர்ந்த வேளாளர்களோ வேடர்களைக் கொன்று தமது பெண்களை மீட்டனர். பிறகு தமது ஊருக்குத் திரும்பினர். அங்கே இந்த வேளாளர்களின் மனைவிகளெல்லாம் விதவைகளாய்க் காட்சியளித்தனர். தமது கணவன்மார்களுடைய ஈமச்சடங்குகளையும் நடத்தி விட்டனர். ஆகவே இந்த ஏழு வேளாளர்களும் ஜாதி கெட்டுப் போனவர்கள் என்று மற்றவர்கள் கருதினார்கள். ஆகவே தமது முன்னுளைய மனைவிகளோடு சேர்ந்து கொள்ள முடியாமற் போகவே சில வேடப்

பெண்களை மணந்து கொண்டு, ஜவ்வாது மலைக்குச் சென்று விவசாயத்தொழிலில் ஈடுபட்டு வசித்து வந்தனர். இவர்களே தற்காலத்து மலையாளிகளின் மூதாதையர்கள். இவர்கள் தங்களைக் கரை காத்த வேளாளர் என்றும் அழைத்துக் கொள்கிறார்கள்.

**தென்னார்க்காடு மாவட்ட மலையாளிகள்**

தென்னார்க்காட்டிலும் இம்மாதிரி மலையாளிகள் இருக்கின்றனர். இவர்கள் தம்மைக் கொங்கு வேளாளர் என்று அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பொதுவாக மலையாளி வகுப்பைச் சேர்ந்த எல்லோருமே தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்ததாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களோடு தங்கள் குல தெய்வமான கரிராமனைக் கொண்டு வந்ததாகவும் சொல்லுகிறார்கள். தென்னார்க்காடு ஜில்லாவில் உள்ள கல்ராயன்கள் தமது கல்யாணங்களில் தாலி கட்டுவதற்கு முன்பு ஒரு பாட்டுப் பாடுகிறார்கள். அந்தப் பாட்டில் காஞ்சிபுரத்தின் பெயரும், கரிராமன் பெயரும் ஆரம்பத்திலேயே வருகின்றன. இவர்கள் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கே குடியேறியதாகச் சாசனங்கள் கூறுகின்றன.

சேலம் ஜில்லாவில் சேர்வராயன் மலையிலுள்ள மலையாளிகள் தங்களைக் காஞ்சி மண்டல மலையாளிகள் என்றழைத்துக் கொள்கிறார்கள். வேளாளர், காராளன், மலைக்காரன், மலைநாய்க்கன் என்ற மற்ற பேர்களும் இவர்களுக்குண்டு. இவர்கள் எல்லாருடைய பேரும் கவுண்டன் என்ற வார்த்தையில் முடிகிறது. இவர்கள் ஹிந்து தெய்வங்களின் பெயரையே வைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் ஹிந்து மதத்தைத் தழுவினார்கள். மற்றும் அவர்களது மூதாதையர்கள் பூணூல் அணிந்திருந்தார்களென்றும் சொல்லுகிறார்கள். சிவனையும், விஷ்ணுவையும் வழிபடுவதுடன் பல சிறு தெய்வங்களையும்

வழிபடுகின்றனர். அவர்கள் பூணும் பூணூல் எல்லா விதமான நோய்களையும்,பேய் பிசாசுகளின் பாவத்தையும் தடுக்கும் சக்தி உள்ளது என்று எண்ணுகின்றனர். இவர்களில் சிவனை வணங்குவோர் விபூதியையும், விஷ்ணுவை வழிபடுவோர் நாமத்தையும் அணிகின்றனர். ஆனால் இந்த இரண்டு தெய்வங்களை வணங்கிய போதிலும் அவர்களுள் ஒரு விதமான வித்தியாசமும் கிடையாது. எல்லோரும் சிவராத்திரியையும், கோகுலாஷ்டமியையும், ஸ்ரீ ராம நவமியையும் ஒரே விதமாக ஒன்று கூடிக் கொண்டாடுகிறார்கள். புரட்டாசி சனிக்கிழமையன்று, விஷ்ணுவை வழிபடும் நாள் என்ற போதிலும், மலையாளிகள் அன்று வித்தியாசமின்றியே வணங்கி வருகிறார்கள்.

தென்னார்க்காடு கல்ராயன்கள் பல கடவுள்களை வணங்குகின்றனர். அந்தக் கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகள் மலையாளிகளே. மாரியம்மனும், துரோபதையும், அவர்கள் வணங்கும் பெண் தெய்வங்களுள் முக்கியமானவை. கோவிலின் முன்புறம் கற்பூரம் கொளுத்தி, அதை அணைத்துத் தங்கள் சண்டை சச்சரவுகளையும், விவகாரங்களையும் தீர்த்துக்கொள்ளும் வழக்கம் இவர்களிடை உண்டு.

# 3. சோனகர்

சோனகர் என்பவர்கள் தமிழ் நாட்டுப் பழங் குடிகளுள் ஒரு வகையினர் ஆவர். அவர்கள் கோயமுத்தூர் மாவட்டத்தில் கொள்ளே காலம் பன்னுரிடிம்பம் தாளவாடி வட்டத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் வசிக்கிறுர்கள். விசேஷ நாட்களில் லிங்காயத்துக்களைப் போல் உடம்பு முழுவதும் திருநீறணிந்து சிவப் பழமாய் விளங்குகிறுர்கள். இவர்கள் தமிழும் கன்னடமும் கலந்த ஒரு கொச்சை மொழியில் பேசுகிறுர்கள். ஏறக்குறைய நிர்வாணிகளாகவே ஆடவர்கள் காட்சியளிக்கிறுர்கள். ஒரு சிலர் பழைய பட்டாள உடையையும் அணிகிறுர்கள். இரவில் தீ மூட்டி அதைச் சுற்றிலும் உதிர்ந்த வாழை இலைகளையோ, வேறு இலைகளையோ, தரையில் பரப்பி, அதன் மீது தூங்குகிறுர்கள். குளிருக்காகவும் தழையையே தைத்தும் போர்த்திக் கொள்கிறுர்கள். இவர்கள் மலை யுச்சிகளில் புலிகள் அதிகமாக நடமாடாத இடத்தில் எளிய குடிசைகளில் வசிக்கிறுர்கள். மூங்கிலின் இரண்டு முனைகளையும் வளைத்து பூமியில் நட்டு, அதன் மீது உலர்ந்த வாழையிலைப் பட்டைகளை பரப்பிக் கூரை வேய்கிறுர்கள். ஆகவே இவர்களது குடிசை தோடர் குடிசைகள் போல் பார்ப்பதற்கு வாட்டமாக இருக்கும். நீலகிரியில் உள்ள இருளர்களின் குடிசைகளின் கூரையும் உலர்ந்த வாழை மட்டையினுல்தான் வேயப்பட்டிருக்கிறது. சோனகர் தோடர்களுடனும், இருளர்களுடனும் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம் என்று தெரிகிறது.

இவர்களின் பூர்வீகத்தைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. முன்னொரு காலத்தில் கத்தேசால் மலையில் காரையன், பில்லையா அல்லது மாதேஸ்வரன் என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தனர். ஊராளி என்ற மற்றொரு பூர்வீக குடிகளும், சோனகர்களும் காரையனின் சந்ததிகளாவார்கள். சிவாசாரியர்களான லிங்காயத்துக்கள் மாதேஸ்வரனின் சந்ததிகளாவார்கள். மேலே சொன்ன இரண்டு சகோதரர்களும் ஒரு தடவை சவணன் என்ற ராட்சஸன் கையில் அகப்பட நேர்ந்தது. அந்த ராட்சஸன் காரையனை இடையனுக்கி ஆடு மேய்க்கச் செய்தான். மாதேஸ்வரன் ராட்சஸனுக்கு அடங்கி நடக்காமையால், ராட்ஸசன் அவனைச் சிறையிலிட்டு, எல்லா இழிவான வேலைகளையும் செய்யும்படி செய்தான். கடைசியாக அந்த ராட்சஸன் மாதேஸ்வரனைத் தனக்கு ஒரு ஜோடி செருப்புத் தைத்துத் தரும்படி கட்டளையிட்டான். மாதேஸ்வரன் அப்படியே ஒரு நல்ல ஜதை செருப்பைத் தைத்துக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு தனக்குச் சில நாள் ஓய்வு கொடுக்கும்படி கேட்டான். ராட்சஸனும் அதற்குச் சம்மதிக்கவே மாதேஸ்வரன் கிருஷ்ணமூர்த்தி கடவுளை அடைந்து தனது சங்கடங்களைத் தீர்த்து வைக்குமாறு வேண்டிக் கொண்டான். கிருஷ்ணமூர்த்திக் கடவுளும் அதற்குச் சம்மதித்து அந்தச் செருப்பை மெழுகினுல் செய்யும்படிக்கு யோசனை கூற, அவ்விதமே மாதேஸ்வரனும் வெகு அழகான ஒரு ஜதைச் செருப்பைச் செய்தான். பிறகு கடவுள் கத்தேசாலைக்குக் கிழக்கேயுள்ள ஒரு பாறையின் மீது விறகுகளையும் சுள்ளிகளையும் அடுக்கி அந்தப் பாறை நன்ருகப் பழுத்துக் காயும் வரை எரிக்கும்படி ஆணையிட்டார். மாதேஸ்வரனும் அப்படியே செய்தான். பிறகு பாறையின் மீதிருந்த சாம்பலை அப்புறப்படுத்தினுன். மாதேஸ்வரன் ஒரு ஜோடி மெழுகு செருப்புகளைச் சவணனிடம் கொண்டு போய்க் கொடுக்க அவனும் மகிழ்ச்சியடைந்தான்.

பிறகு மாதேஸ்வரன் கிருஷ்ண மூர்த்திக் கடவுள் சொன்னபடி சவணனை நோக்கி "நீங்கள் இச்செருப்புகளை அணிந்து இந்த மலையின் மீது நடப்பதை நான் பார்த்து ஆனந்திக்க வேண்டும்" என்றான். சவணன் அதற்குச் சம்மதித்து மலையின் மீது நான்கு, ஐந்து அடி வைத்து நடந்ததும் மெழுகினால் செய்யப்பட்ட செருப்பு உஷ்ணத்தினால் உருகியது. பழுக்கக் காய்ந்த பாறையின் சூடு தாங்க முடியாமல் சவணன் அதன் மீது விழுந்தான். விழும் போது மாதேஸ்வரன் மீது பாய்ந்து அவனது கழுத்தை முறிக்க முயன்றான். இந்த வேடிக்கையைப் பார்க்க கிருஷ்ணமூர்த்திக் கடவுள் தன் பரிவாரங்களுடன் அங்கே கூடியிருந்தார். சவணன் கீழே விழுந்ததும், அங்குக் கூடியிருந்த ஒவ்வொருவரும் கீழே விழுந்த சவணன் தலையின் மீது ஒவ்வொரு கல்லை அடுக்கிச் சவணனைக் கொன்றனர். மாதேஸ்வரனும் விடுதலை பெற்றான்.

அதே சமயத்தில் காரையன் காட்டில் ஆட்டு மந்தையைக் காத்து வந்தான். சவணனைத் தன் தம்பி தன்னைக் கேட்காமல் கொன்றதைக் கேட்டு அவனுக்குக் கோபம் பொங்கியது. அவனுடைய கோபத்திற்குப் பயந்து மாதேஸ்வரன், கிருஷ்ணமூர்த்திக் கடவுளின் உதவியினால் மலை உச்சிகளையெல்லாம் தாண்டி, முனிக்கானல் என்ற இடத்தில் ஒரு பாறையின் கீழ் ஒளிந்து கொண்டான். காரையனும் கத்தியுடன் மாதேஸ்வரனைத் துரத்தி வந்து அந்தப் பாறையைத் தகர்த்தான். மாதேஸ்வரன் சாமர்த்தியமாக அங்கிருந்து தப்பி, மலையில் ஒரு எலி வங்கில் ஒளிந்து கொண்டான். காரையன் அவனை அவ்வளையினின்றும் வெளிப்படுத்த முயன்றான்; ஆனால் முடியவில்லை. உடனே தன் பரிவார ஆட்டிடையர்களை அழைத்து அந்த எலி வங்கைச் சுற்றி ஆடு மாடுகளைப் பட்டி போடச் செய்தான். ஆடு மாடுகளின் மூத்திரம், சாணம் இவற்றின் நாற்றம் தாங்க

முடியாமல் மாதேஸ்வரன் வெளியே வந்து தன் அண்ணனிடம் சரணடைந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவன் சொன்னபடி கடவுளுக்குப் பூசைகள் போடுவதற்கு முன்பு, காரையனுக்குப் பூசை போட மாதேஸ்வரன் ஒப்புக்கொண்டான். இன்றைக்கும் மாதேஸ்வரனின் சந்ததிகளான சிவாசாரியர்கள் பூசை செய்வதற்கு முன்பு, முதலில் காரையனுக்கும் பிறகு மாதேஸ்வரனுக்கும் பூசை போடுகிறார்கள்.

சோனகரில் சாலிகிரி, தேனேறி, பெல்லேரி, சூரிய, ஆலேரு என்று ஐந்து குலங்கள் உண்டு. ஒரு குலத்தினர் அதே குலத்தைச் சேர்ந்த பெண்ணையோ, ஆணையோ மணக்கக் கூடாது.

இவர் செயல்களில் பன்னிரண்டு எண்ணுக்கு அதிக விசேஷம். அவர்கள் குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள், பன்னிரண்டு பெரிய தனக்காரரைக் கூப்பிட்டுக் குழந்தையை ஆசீர்வதிக்கச் சொல்லுகிறார்கள். கலியாணத்தில் பெண்ணை அழைத்து வர மண மகளின் உறவினர்கள், பன்னிரண்டு பேர்கள் செல்வார்கள். மணப்''ந்தல் பன்னிரண்டு கால்களால் போடப்பட்டிருக்கும். மணமகளின் பெற்றோர் மண மகனின் பெற்றோர்களுக்குப் பன்னிரண்டு பணம் கொடுப்பார்கள். பன்னிரண்டணு காசுகள் விலையுள்ள தாலியை மண மகளின் கழுத்தில் கட்டுகிறார்கள். சவத்தைப் பன்னிரண்டு மூங்கிலினால் செய்த பாடையில் வைத்து எடுத்துச் செல்கிறார்கள். தீட்டுக் காப்பதும் 12 நாட்கள், ஜாதிச் சண்டைகளும், வியபிசாரமும், எஜமானனாலும், பட்டக்காரராலும் சமூகத்தில் உள்ள சில தலைவர்களாலும் தீர்மானிக்கப் படும். சாலவாடி என்ற கிராம சேவகன், முதல் சொன்ன இருவரின் சொற்படி நடக்க வேண்டும். எஜமானனும், பட்டக்காரனும், சாலவாடியும் முறையே

மேலே சொன்ன சாலிகிரி, தேனேறி, சூர்யகுலங்களேச் சார்ந்தவர்களாயிருக்க வேண்டும்.

ஒரு பெண் பருவமடையும் போது ஐந்து நாட்களுக்கு அவள் ஒரு குடிசையில் தனிமையில் வசிக்க வேண்டும். குளித்த பிறகுதான் வீடு திரும்ப வேண்டும். மாமன் அவளுக்குப் புதுப் புடவைகளேயும், பழம், வெற்றிலே பாக்குகளேயும் கொடுக்க வேண்டும்.

கலியாணத்தில் மணமகனே தாலியைக் கட்டுகிருன். மாமன் மணமக்களுக்கு புதுப்புடவை அளிப்பதுடன் விருந்தும் அளிக்க வேண்டும். சில சமயங்களில் இவ்வித மான சடங்குகளேயின்றி, ஆண் மகனும், பெண்மகளும் புருஷன் பெண்சாதி போல் வாழ்கின்றனர். அவர் களுக்குச் சௌகர்யம் ஆன போது சுற்றத்தாருக்கு ஒரு விருந்து நடத்தினுல் போதும்.

### மகப்பேறு

பருகூரிலுள்ள சோனகர், கருவுற்றவர்களே நடத்தும் விதம் விபரீதமானது. பிரசவம் ஆவதற்கு மூன்று நாட் களுக்கு முன்பாகப் புருஷன் தன்மனேவியை ஒரு காட்டிற்கு அழைத்துச் சென்று, மூன்று நாட்களுக்கு வேண்டிய உணவையும், கர்ப்பிணியையும் காட்டில் விட்டு விட்டு வந்து விடுகிருன். அங்கேயே எப்படியோ மூன்று நாட் களேயும் கழிக்க வேண்டியது அவளுடைய பொறுப்பு. மூன்று நாட்களுக்குப் பிறகு அவள் திரும்பா விட்டால் கணவன் அவளுக்கு வேண்டிய உணவை எடுத்துக் கொண்டு மீண்டும் வருவான். எனினும் குழந்தை பிறந்தால்தான் அவள் வீடு திரும்பலாம். அவள் பிரசவித்துக் குழந்தையோடு சேர்ந்தால் ஜனங்கள் வெகு உற்சாகத்துடனும் வாத்திய கோஷங்களுடனும் தாயையும் குழந்தையையும் வரவேற்று இச்சம்பவத்தைக் கொண்டாடுகிருர்கள்.

**இறந்து போனால்**

இறந்தவர்களின் உடம்பை இடது பக்கம் ஒருக் களித்துப் படுக்க வைத்து, தலை தெற்கு நோக்கிப் புதைப் பார்கள். திரும்பி வீட்டிற்கு வந்து ஒரு விளக்கை ஏற்றி அதனைக் கும்பிடுவார்கள். ஆள் எந்த இடத்தில் இறந் தானோ அந்த இடத்தில் சிறிது ராகிக் களியையும் தண்ணீரையும் வைத்து நான்காவது நாள் ஒரு ஆட்டை வெட்டி மரித்தவரின் ஆத்மாவிற்கு அர்ப்பணம் செய் வார்கள். பிறகு மரித்தவரின் மகன் ஒரு கல்லைத் தூக்கிக் கொண்டு ஐந்து குலத்தாரில் சிலருடன் இடுகாட்டிற்குச் செல்வான். மகன் கல்லைத் தரையில் வைக்கவும் அவனோடு வந்தவர்கள் அதை எடுத்து மறுபடியும் தரையில் வைப்பார்கள். எவன் கடைசியில் இதைச் செய்கிறானோ அவனுக்கு ஆவேசம் வரும். ஆவேசம் தணிந்தவுடன் எவ்வளவு குலத்தார் அங்கேயிருக்கிறார் களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்லைச் சுற்றி, வாழையிலையோ, தேக்கம் இலையோ போட்டுப் பலவித மான உணவுப் பண்டங்களைப் பரிமாறுவார்கள். அவர்கள் அந்த உணவை உண்டபின் இறந்தவரின் மகன், கல்லை மறுபடியும் கையில் வைத்துக் கொண்டு நிற்க, மற்ற வர்கள் அதன் மீது ராகியையும், தண்ணீரையும விடுகிறார்கள். இது பிராமணர்கள் அமாவசையன்று தமது பிதுர்களுக்கு எள்ளும் தண்ணீரும் விடுவதினின்றும் வந்திருக்கலாம். பிறகு அந்தக் கல்லை இறந்தவரின் மகன் தன் குலத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இடுகாட்டில் நட்டு விடுவான்.

**உணவு**

சோனகர்கள் ராகிக்களி, கிழங்குகள் இவற்றைத் தான் பெரிதும் சாப்பிடுகின்றனர். ஊராளிகள் வேட்டை யாடிப் பட்சிகளையும் மிருக வகைகளையும் சாப்பிடு கிறார்கள், கிளியை அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குச்

சமமாகக் கருதுவதால் அவற்றைக் கொன்று சாப்பிட மாட்டார்கள்.

## தொழில்

சோனகர்களின் முக்கியத் தொழில் மலைபடு பொருள்களான கடுக்காய், வேம்பாடம் பட்டை, ஆவாரம் பட்டை, மான் கொம்பு, புளி, கோந்து, தேன், சீக்காய் இவற்றைச் சேகரிப்பதுதான். காடுகளில் காட்டு இலாகா டிப்போக்கள் உண்டு. அங்கே சோனகர்களும், ஊராளிகளும் தாங்கள் திரட்டிய பொருள்களைக் கொண்டு வருவார்கள். அங்கே அவற்றைத் தரப்படி பிரித்து அவற்றிற்குரிய விலையையும் பெறுவார்கள்.

சோனகரின் வருகையை மோப்பத்தினுல் அறிந்து காட்டு விலங்குகளும் ஓடி விடும் என்ற வசனம் வழக்கத்தில் இருக்கிறது.

# 4. காடர்

காடர் என்ற பூர்வகுடிகள் கோயமுத்தூர் ஜில்லாவில் ஆனை மலையிலுள்ள டாப் ஸ்லிப்பை அடுத்த ரிஸர்வ் காடுகளில் வசிக்கிறார்கள். கொச்சியிலும் சிலர் வசிக்கின்றனர்.

'காடர்' என்றால் காட்டில் வசிப்பவர் என்று பொருள். காடர் என்பது காடன் என்ற வார்த்தையின் பன்மை. ஆகவே காடர் தமிழ் நாட்டின் பூர்வ குடிகள் என்பதில் ஒன்றும் சந்தேகமில்லை.

தோற்றத்தில் காடர்கள் குள்ளமானவர்கள், அகன்ற மூக்குள்ளவர்கள், சுருட்டை மயிர் உள்ளவர்கள். பாரஸ்டு டிபார்ட்மெண்டார் மேற்பார்வையிலிருக்கும் ரிசர்வ் பாரஸ்டுகளில் வேலை செய்கின்றனர். துஷ்ட மிருகங்களை வேட்டை ஆடுகின்றனர். மலை படு திரவியங்களான தேன், மெழுகு முதலியவற்றைச் சேகரித்து கண்ட்ராக்டர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்கின்றனர். இவர்கள் மரம் ஏறுவதிலும் மிருகங்களின் அடிச் சுவடு பற்றுவதிலும், மோப்பம் பிடிப்பதிலும் அதிக சமர்த்தர். மலைச் சரிவுகளில் உள்ள தேன் கூடுகளில் உள்ள தேனை, ஏறி எடுக்க இவர்கள் பிரம்பினால் செய்த ஒரு கயிற்றை உபயோகிக்கிறார்கள். இது எளிதில் அறுந்து போகாது. மிகவும் உறுதியானது.

மலைச் சரிவுகளிலும், உச்சியிலும் உள்ள தேனைத் திரட்ட ஏறும்போதும் இறங்கும் போதும் காடனின்

மனைவி மலை மீதிருந்து பிரம்புக்கயிற்றைக் காவல் புரிவாள். கூடப் பிறந்தவனைக் காடன் நம்புவதில்லை. நண்பர்களை உள்ளூற நம்புவான். ஒவ்வொரு சமயத்தில், நண்பனைக் காவல் வைத்து விட்டுக் காடன் தன் மனைவியுடன் பிரம்புக் கயிற்றைக் கொண்டு இறங்கியும், ஏறியும் தேனைச் சேகரித்து வருவான். இதனால் காடப் பெண்களும் மலை ஏறுவதிலும், இறங்குவதிலும் சமர்த்தர்கள் என்பது வெளியாகிறது.



தேன் எடுத்தல்

இவர்கள் பேசுவது ஒரு கலப்புக் கொச்சைத் தமிழ். பல பழைய தமிழ்ச் சொற்களும் இவர்களிடை வழங்கி வருகின்றன. உதாரணமாக அக்காளை ஆச்சி என்றும், மாமன் மனைவியை 'மாமி' என்றும் சொல்லுகிறார்கள். மற்றொரு சிறப்பு என்னவென்றால் காடன் தன் மனைவியை 'மதனு' அல்லது 'மதலே'

என்று கூப்பிடுகிறுன். மதலே என்பது தமிழில் குழந்தைக்குப் பெயர். 'மதலே' என்பது குழந்தையைப் பெற்றவள் என்று பொருள் படும். 'மதஞ' என்று காடர் பெண்கள் ஒருவரை ஒருவர் கூப்பிடுகிறுர்கள், இந்த வார்த்தை 'மதர்' என்ற வார்த்தையினின்றும் வந்திருக்கலாம் என்று ஊகிக்கலாம். 'மதர்' என்ருல். 'செழித்து நல்ல பலனேக் கொடுப்பது என்றும், 'அழகு' என்றும் மடமையென்றும் பொருள்படும். இதிலிருந்து 'மதஞ' என்ற வார்த்தை வந்திருக்கலாம்.

இவர்கள் வசிக்குமிடம் இயற்கை வனப்பு மிகுந்து இருக்கும் ஒரு மலேச்சரிவு. நான்கு பக்கமும் திறந்த சமவெளி. அதன் நடுவே ஒரு சிறு ஓடை. அதன் மேட்டுப் பாங்கான கரையில் மூங்கிலினுல் காடர் தமது குடிசைகளேக் கட்டிக் கொண்டு வசிக்கிறுர்கள். ஆனுல் ஒரே இடத்தில் அதிக நாள் வசிப்பதில்லே. இடம் மாறுகிறுர்கள்.

இவர்கள் வசிக்கும் அதே காட்டில் சிறிது தூரத்தில் தனித் தனியே மலசர். இருளர், முதுகர் போன்ற பழங்குடிகளும் வசிக்கின்றனர். ஆனுல் இவர்கள் சமூக வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் அதிகமாகப் பழகுவதில்லே. எல்லோரும் காட்டிலாகாவின் காடுகளிலும் பாரஸ்டு கண்ட்ராக்டர்களிடத்திலும் வேலே செய்த போதிலும் சகஜமாகப் பழகுவதில்லே. ஆனுல் இவர்களுக்குள் விரோதம் என்பது கிடையாது.

காடப் பெண்கள் மூங்கிலினுல் குடிசைகள் கட்டுவதில் அதிக சமர்த்தர். வீட்டில் உள்ள நெருப்பையும் அணேயாமல் காப்பதும் பெண்களின் பொறுப்பு. இவர்கள் நெருப்பை இரண்டு மூங்கில்களுக்கு நடுவில் பஞ்சை வைத்துக் கடைந்து உண்டாக்குகிறுர்கள். ஆனுல் இப்

போது தீப்பெட்டிகளின் படையெடுப்பினல் இந்தச் செயல் கைவிடப் பட்டு வருகிறது.

காடர்கள் காட்டிலாகாவுக்குக் காடுகளில் வேலை செய்து ஊதியம் பெறுவதுடன், மலைபடுதிரவியங்களான ஏலக்காய், தேன், தேன் மெழுகு, கூந்தற்பனை, அரிசி, நெல்லிக்காய், கடுக்காய் போன்றவைகளைச் சேகரித்துக் குறைந்த விலைக்குச் சமவெளிகளிலிருந்து வரும் வியாபாரி களுக்கு விற்று விடுகிறார்கள். ஒரு ரூபாய் விலையுள்ள சாமானுக்கு அவர்களுக்குக் கிடைப்பது ஒரு ஆறுகாசுக்கு அதிகமாக இருக்காது. மீதி 94 காசுகளும் வியாபாரி களுக்குக் கிடைக்கும் லாபம்.

அதிக வருமானத்தைப் பெற வசதியிருந்தும் காட்டி லுள்ள சூழ்நிலையில் காடர்கள் அதனைப் பெறுவதில்லை. ஆகவே வழக்கம் போல் காட்டில் உள்ள பலகிழங்குகளைத் தோண்டி எடுத்துச் சுட்டோ, வேகவைத்தோ, தமது பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். கிழங்கு களைத் தோண்டியெடுக்க அவர்களிடம் அதற்கேற்றவாறு அமைந்துள்ள இரண்டு கோல்களும் உண்டு. அதை ‘பரிக்கோல்’ என்றும். ‘கூரங்கோல்’ என்றும் கூறுகிறார்கள்.

காடர்களின் வீடுகள் மூங்கிலினாலும் ஓலையினாலும் அமைக்கப் பட்டவை. அவர்கள் வீட்டில் உள்ள சாமான்கள் எல்லாம் மூங்கிலினாலேயே செய்யப் பட்டவை. தண்ணீர் வைக்க, குடிக்க, சாமான்களைச் சேகரித்து வைக்க, 2 முதல் 6 அங்குல அகலமுள்ள பெரிய திரண்ட மூங்கிலை எடுத்துக் கணுக்களின் உட்புறத்தை அடைத்திருக்கும் பாகத்தைக் குடைந்தெடுத்து அதில் சுமார் அரைக் குடம் தண்ணீரைச் சேகரித்து வைத்து உபயோகித்துக் கொள்கிறார்கள். காடுகளில் பல நாட் களைக் கழிக்க வேண்டின், இம்மூங்கிலில் தண்ணீர்

சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள். மூங்கிலினால் வேலைப்பாடமைந்த பல சாமான்களைக் காடர் செய்கின்றனர்.

இவற்றுள் மிகப் பிரசித்தமானவை அவர்களது மூங்கிற் சீப்புகள். அவை வேலைப் பாடமைந்தவை; அழகானவை. ஒரு காடன் தன் மனைவியை மகிழ்விக்க வேணுமானால், சமயம் வந்தபோதெல்லாம் இச்சீப்பைச் செய்து அவளுக்கு அளிக்கிறான்.

அந்தச் சீப்பு ஒன்றைப் பெற நான் (இந்த நூலாசிரியர்) ஆசைப்பட்டேன். காடன் அச்சீப்பைக் கொடுக்கும்படி தன் மனைவியைக் கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொடுத்தான். வேறு நல்லதாக ஒன்று செய்து கொடுப்பதாக அவளைச் சமாதானப்படுத்தினான். இந்தச் சீப்பை வேண்டும் போது காடன் செய்கிறான். அதனால் அதற்கு மதிப்பும் அதிகம்.

காடர் பெண்கள் இச்சீப்பைப் பெருமிதத்தோடு அணிந்து கொள்கிறார்கள்.

ஒரு வைரக் கம்மலை ஒரு கணவன் தன் மனைவிக்கு அளித்தால் அவள் எவ்வளவு மனம் பூரித்துப் போவாளோ, அம்மாதிரியே காடன் மனைவியும் அச்சீப்பைப் பெறும்போது சந்தோஷப் படுவாள். கலியாணத்தின் போது ஒரு காடன் தன் வேலைத் திறத்தைக் காட்டவும், தன் மனைவியிடம் தனக்குள்ள அன்பைக் காட்டவும், தன் கையாலேயே செய்யப்பட்ட ஒரு சீப்பைத் தன் மனைவிக்குப் பரிசாக அளிக்கிறான்.

இதனோடு காடர் பெண்கள் காதிலும், மூக்கிலும் தமிழ் நாட்டாரைப் போல் பித்தளையால் செய்த பல ஆபரணங்களையும் அணிகிறார்கள்.

காடர் காளியை வழிபடுகிருர்கள். காடர் சிறுவர் பற்களை அராவி அழகு செய்து கொள்கிருர்கள். இந்து மதத்தில் காளிக்கு ஒரு முக்கிய இடமுண்டு. காட்டில் வசிப்போருக்கு எப்போதும் மிருகங்களாலும், பாம்பு போன்ற விஷ ஜந்துக்களாலும் உயிருக்கு ஆபத்து உண்டு. அவற்றை விரட்டி அடித்து ஓட்டவும், அடக்கவும், அவற்றின் கொடூரத்திற்கும், பயங்கரத் தோற்றத்திற்கும் நூறு மடங்கு கொடூரமும்,பயங்கரமும், பயங்கரத் தோற்றமும் உள்ள காளியை வழிபட்டு வருகிருர்கள்.

காடர்களின் ஆகாரம் பலதரப் பட்டது. தானியங் களையும், இறைச்சிகளையும், கிழங்குகளையும் சாப்பிடு கிருர்கள். அவர்கள் சாப்பிடும் கிழங்குகளின் வகை பல. அவற்றின் உணவுச் சத்தைப் பற்றி நமது உணவுச் சத்து ஆராய்ச்சியாளர் பரிசோதனை நடத்திஞல் உப யோகமாய் இருக்கும். அவர்கள் சாப்பிடும் கிழங்குகளின் பெயர் : 1. வெள்ளை நிறமுள்ள கனிக்கிழங்கு. 2. கருப்பு நிறமுள்ள சிறிய நரிக்கிழங்கு. 3. வெள்ளை நிறமுள்ள சிறிய தானிக்கிழங்கு. 4. சிவப்பு நிறமுள்ள பெரிய சண்ணுன் கிழங்கு. 5. கருப்பு நிறமுள்ள சிறிய வெற் றிலைக் கிழங்கு. 6. சாலேக் கிழங்கு. 7. உருளைக் கிழங்கு போன்ற நூத்தக் கிழங்கு. 8. குவநூறுக் கிழங்கு போன்ற பல கிழங்குகளை அவர்கள் சாப்பிடு கிருர்கள். இவைகளில் நூற்றைக் கிழங்கு ஒரு மலைபடு பொருள் என்று தமிழ் அகராதி கூறுகிறது. மற்றைய கிழங்குகளின் பெயர்கள் அகராதியில் (தமிழ் லெக்ஸிகன்) இல்லை.

இக்கிழங்குகளையெல்லாம் காடர் தேட்டம் என்று சொல்லுகிருர்கள். தேட்டம் என்பது ஒரு தமிழ் வார்த்தை. தமிழ் அகராதியில் தேட்டம் என்பதற்குச் சேகரிக்கப்பட்ட பொருளும், பசியென்ற பொருளும்

உண்டு. மானிடவர்க்க நிபுணரான டாக்டர் எரன் பெல்ஸ், தேட்டம் என்ற வார்த்தை தமிழ் வார்த்தையல்ல என்று கூறுவதை, நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலே கூறிய கிழங்குகளெல்லாம் மிகவும் இனிப்பாய் இருக்குமாம்.



காடர் சிறுவன்
(அராவிய பற்களொடு)

காடர்களின் பரம்பரை வாழ்க்கை மிக ருசிகரமானது. தேன் சேகரிப்பதில் அவர்கள் சமர்த்தர் என்று சொன்னோம். உயர்ந்த மரங்களின் உச்சிக் கிளைகளில் உள்ள தேன் கூடுகளை எடுக்க, முதலில் பிரம்பினால் செய்யப்பட்ட கயிற்றைப் பற்றி மேலே ஏறி, தீப்பந்தங்களைக் கொண்டு, முதலில் ஈக்களை விரட்டியடித்துப் பிறகு தேன்கூடுகளையும்

அடைகளையும் சேகரித்துத் தேனைப் பிழிந்தெடுக்கின்றனர். அவர்கள் தேனெடுக்கும் முறை சுகாதாரமற்றது.

### தெய்வ வழிபாடும் உணவும்

காடர்கள் ஹிந்துமத தெய்வங்களை முறைப்படி வணங்குகிறார்கள். அவர்கள் பிசாசு, பூதம், யக்ஷிணி போன்ற துர்தேவதைகள் மரங்களிலும், ஆழமான குளங்களிலும், ஆறுகளிலும் இருப்பதாக எண்ணுகிறார்கள். இம்மூன்றையும் பொதுவாக 'முனி' என்று சொல்லுகிறார்கள். ஆனால் இவற்றிற்கு அவர்கள் பயப்படுவதில்லை. பிசாசு. பூதம், யக்ஷிணி இவை மூன்றும் பத்ரகாளிக்கு அடங்கியவை ஆகையால் காடர்கள் பத்ர காளியைத் தான் அதிகமாக வழிபடுகிறார்கள்.

காடன் ஒரு பெரிய மரத்தை வெட்டியபின் நோய் வாய்ப்பட்டால் அது அந்த மரத்தில் வசிக்கும் முனியின் கோபத்தினால் ஏற்பட்டதென்று நினைப்பான். அதைப் பற்றிக் கனவும் கண்டு விட்டால் சந்தேகமே பட மாட்டான். காடன் கட்டாயம் பத்ரகாளிக்குப் பூஜை போடத் தீர்மானிப்பான்.

பொதுவாகப் பிசாசு, பூதம், யக்ஷிணி இவற்றின் கோபத்தைத் தணித்துச் சமாதானப் படுத்த காடர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வருஷத்திற்கு ஒரு தடவை பத்ர காளிக்கு வெகு விமரிசையாகப் பூஜை நடத்துவார்கள். இது மாசி மாதத்தில் தான் நடக்கும்.

ஒரு தடவை ஒரு காடச் சிறுவனை ஒரு புலி அடித்துக் கொன்று விட்டது. அதே வருஷம் காடர் சேரியில் காலரா வந்து பலர் இறந்தனர். அந்த வருஷம் பத்ர காளிக்குப் பூஜை போடாததின் குற்றம் என்றெண்ணிக் காடர்களெல்லாம் ஒன்று கூடி வேண்டிய பணம் திரட்டிப் பத்ரகாளிக்குப் பூஜையை நடத்தினார்கள்.

பத்ரகாளி பூஜையை மரமடர்ந்த ஒரு குளக்கரையில் நடத்துவார்கள். ஏனென்ருல் அங்கேதான் பத்ரகாளி வசிப்பதாக அவர்கள் எண்ணுகிருர்கள்.

பூஜை நடத்த வேண்டிய தினத்தில் காலையில் குளக் கரையில் நான்கு மூங்கில்களை நட்டுச் சதுரமான ஒரு பந்தலைப் போட்டு மேலே ஓலையைப் பரப்புவார்கள். அந்தப் பந்தலை அடுத்து மூன்று சிறிய பந்தலையும் போடு வார்கள். இம்மூன்று பந்தல்களிலும் மரத்தில் வசிக்கும் முனி, மரித்துப்போன மூதாதையர்களின் ஆவி, இறந்து போன குழந்தைகளின் ஆவி எழுந்திருக்கச் செய்வார்கள். ஒவ்வொரு சிறிய பந்தலின் நடுவிலும் கூரையின் நடுவி லிருந்து ஒரு மூங்கில் தொட்டில் தொங்கும். ஒவ்வொரு சிறிய பந்தலிலும் ஒரு இலையில் உடைத்த தேங்காய், வாழைப்பழம், வெல்லம் எல்லாவற்றையும் வைத்துப் பூஜை செய்வார்கள். பெரிய பந்தலில் பொரி, ஒரு சட்டியில் பொங்கல், கோழிக் குஞ்சுகள், சாராயப் புட்டிகள், கஞ்சா போன்றவைகளை வைத்து, பத்ர காளிக்குப் பூஜை செய்வார்கள். மாலை நான்கு மணி சுமாருக்குப் பறைகளின் சத்தம் ஒங்க, துருத்திகளின் ஓசை ஒலிக்க பத்ர காளியின் பூஜை ஆரம்பிக்கும். பூசாரி சட்டியிலுள்ள பொங்கலை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, அது தண்ணீரில் நன்ருக முழுகும் வரை மூன்று தடவை அதஞெடு தானும் முழுகிக் குளிப்பான். பிறகு அவனுடைய மூன்று சிஷ்யர்களும் பெரிய பந்தலில் இருக்கும் சிலரும், ஆவேசம் அடைந்து நடுங்குவார்கள். மயிர் சிலிர்க்கும்படி கத்துவார்கள்; குதிப்பார்கள். இம் மாதிரி இரவு பத்துமணி வரை நடக்கும். கோழிக்குஞ்சு களை எடுத்து அவற்றையும் குளத்தில் முழுக்கி, பூசாரிகள் அவற்றின் கழுத்தைக் கடித்து அக்குஞ்சுகளின் ரத்தத்தை பத்ர காளிக்கு அளிப்பார்கள். பிறகு தாங்களும் குடிப் பார்கள். பூஜை முடிந்த பிறகு எல்லோரும் கூடி, தயாராக இருக்கும் பலவிதமான உண்டிகளைச் சாப்பிடுவார்கள்.

இதற்குக் காடர்கள் ரூ 200 முதல் 400 வரை திரட்டிச் செலவு செய்கிறார்கள்.

காடர்கள் கிழங்குகள், மூங்கிலரசி, ஆடுகள், பறவைகள், மலைப்பாம்புகள், முள்ளம்பன்றி, காட்டு எலிகள், குரங்கு முதலியவற்றின் மாமிசத்தை உணவாகக் கொள்கின்றனர். அரிசியுணவைக் கண்டறியார்கள். அரிசி கிடைத்தால் மிகவும் மகிழ்வர்.

காட்டெருமையின் மாமிசத்தைச் சாப்பிடுவதில்லை. எருமையைத் தொதவர்கள் போல் தொழுவதுமில்லை. ஆனால் எருமையை உழுவதற்கு உபயோகிக்கிறார்கள். எருமையைத் தொட்ட பிறகு தமது கைகளைக் கழுவிக் கொள்கிறார்கள். காடர்கள் நண்டு ஆமைகளைப் பிடித்தும் தின்பார்கள். புலி யானை கரடி மிருக உலகில் பலமும் கொடூரமும் வாய்ந்தவை. அவற்றின் இறைச்சியைக் காடர்கள் சாப்பிடுவதில்லை.

தேனைச் சேகரிக்கப் போகும்போதும், ஏலக்காய் பறிக்கப் போகும் போதும், காடர்கள் பத்ர காளிக்கும், ஹனுமானுக்கும் பூஜைசெய்துவிட்டுத்தான் போவார்கள். தேங்காய், வெல்லம், பழம், வெற்றிலை பாக்கு வைத்துக் கும்பிடுவார்கள். இதனால் தேனீக்கள் அதிகமான தேனைச் சேகரித்துக் கொடுக்கும் என்றும், பூமிதேவி அதிகமான ஏலக்காயைக் கொடுப்பாள் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். இவ்விதமே தேனையும், ஏலக்காயையும் சேகரித்த பின்பும் காடர்கள் பத்ரகாளியையும், ஹனுமானையும் மறுபடியும் வழக்கம்போல் தேனையும் ஏலக்காயையும் சேர்த்துக் கும்பிடுகிறார்கள்.

**மணவாழ்க்கை**

காடர்களின் மண வாழ்க்கையில் அதிக சிக்கல்கள் இல்லை. பிரியமில்லாவிட்டால் மனைவி, கொண்ட கணவனை

விட்டு வேருெருவனை மணக்கலாம். கொண்ட கணவனும் தன் மனைவியைத் தள்ளி வைத்துவிடலாம். பிரிந்து போன மனைவி மறுபடியும் தன் கணவனேடு சேர்ந்து வாழலாம். கற்புத் தவறிய பெண்களைக் காடர்கள் வெறுப்பதில்லை.

புருஷனும் மனைவியும் எக்காரணங் கொண்டும் வீட்டில் உடலுறவு கொள்ளக்கூடாது. வெட்ட வெளிகளில், காடுகளில், சோலைகளில்தான் கூடுவார்கள். இதற்குக் காரணம் என்னவென்ருல், வீடும், ஓலைப் பந்தலும், குகையும் புருஷனும் மனைவியும் சேருவதற்கு மிகச் சிறியவை; தனிமையற்றவை. பல ஜனங்கள் வந்து போய்ப் பழகுமிடம் அவை. குழந்தைகளும் இருப்பார்கள். அதனுல் பலவித இடைஞ்சல்கள் ஏற்படும்.

புருஷனும் மனைவியும் சேர விரும்பும் போது, காடன் காலையில் தன் மனைவியிடம் ''காட்டிற்குப் போய், சுள்ளி பொறுக்கலாம் வா'' என்றழைப்பான். அதன் கருத்தை அவன் மனைவியும் காடர் சேரியிலுள்ள மற்ருெரும் நன்குணர்வார்கள். அன்று மற்றைக் காடர் எவரும் காட்டிற்குள் செல்ல மாட்டார்கள். புருஷனும் மனைவியும் காட்டிற்குப் போகும் போது கைக்குழந்தையை ஒரு மரத்தில் விட்டு விட்டுப் பிறகு தாங்கள் வந்த காரியத்தை கவனிப்பார்கள். அன்று மாலைப்பொழுது வரை காட்டிலேயே காலத்தைக் கழித்தபின், சில சுள்ளிகளுடன் இருவரும் வீடு திரும்புவார்கள். புருஷனும் மனைவியும் சேர்ந்தபின் இருவரும் காட்டிலுள்ள குளத்திலோ, குட்டையிலோ, ஆற்றிலோ குளிப்பார்கள்.

**கூத்தும் விளையாட்டும்**

ஒரு வகுப்பாரின் கலாசாரத்தையும் பண்பையும் அறிவதற்கு அவர்களது நாடோடிப் பாட்டு, கூத்து, பழமொழி, புதிர், விளையாட்டுகள், பழக்க வழக்கங்கள் எல்லாம் உதவுகின்றன. காடர்கள் இரவில் தான்

கூத்துக்களை நடத்துவார்கள். இது காடன் சேரிக்கு முன் உள்ள திறந்தவெளியில் நடக்கும். ஒவ்வொரு காடன் குடிசையின் முன்னும், வழக்கம் போல் இரவில் தீ மூட்டப் பட்டு எரியும். துஷ்ட மிருகங்களைத் தடுக்கவே இவ்விதம் செய்கிறார்கள். மேலே வானத்தில் விண் மீன்கள் மின்மினிப் பூச்சிகளைப் போல விட்டு விட்டு மின்னும். கவிந்த இருளில் அக்காட்சி பார்ப்பதற்கு அதிசயமா யிருக்கும். விண்மீன்களுக்குப் போட்டியாக மின்மினிப் பூச்சிகளும், காட்டினின்றும் வரும் ரீங்கார ஒலியும், துஷ்ட மிருகங்களின் கர்ஜனையும் நிறைந்த அந்தக் காட்சி விவரிக்க முடியாதது.

முன்னாளில் பொழுது போக்கிற்காக எல்லாவற் றையும் மறந்து இன்பமாகக் காலங்கழிக்கக் காடர்கள் கூத்துக்களை ஆடுவது வழக்கம். கூத்தில் பாடும் பாட்டுக்கள் காட்டில் மிருகங்களோடு, போரிட்ட வீரச் செயல்களைக் கூறும். தங்களது வழிபடு தெய்வமான பத்ர காளியைப் பற்றியும், தங்கள் வாழ்க்கைச் சம்பவங் களைப் பற்றியும் இருக்கும். இப்போது தெய்வங்களுக்குப் பூஜை நடத்தும்போதும் திருவிழாக்களின் போதுந்தான் கூத்தாடுகிறார்கள்.

வயிற்றுப் பிழைப்புக்காகக் காட்டில், காண்டிராக்டர் களுக்குக் காலை முதல் மாலை வரை உழைத்துக் களைத்து வரும் காடனுக்குக் கூத்தாடிக் காலத்தை இன்பமாய் கழிக்க வழியேது? ஆகவே வருஷத்தில் ஒன்றிரண்டு தடவைதான் இம்மாதிரிக் கூத்துக்களை அவர்கள் ஆடு கிறார்கள்.

பாட்டில்லாமல் காடன் கூத்தில்லை. பறை துருத்தி யில்லாமல் பாட்டில்லை. தமிழ் நாட்டில் கிராமத்தார் உபயோகிக்கும் பறைகளையும் வாத்தியங்களையும்

காடர்கள் உபயோகிக்கிறுர்கள். அவர்களது பாட்டும் பண்ணும் இசையும் ஏறக்குறைய ஒரே மாதிரிதான்.

காடர் கூத்து இரண்டு வகை என்று சொல்லு கிறுர்கள். ஒன்று, முதலில் காலே எடுத்து வைக்கும் போது முழங்கால் வளேத்துக் கூத்தாடுவது. இது பங்கி போடுவது போலிருக்கும். இரண்டாவது வலது காலே முன்ஞல் எடுத்து வீசும் போது அதே சமயத்தில் மத்தளத்தைப் பலமாக அடிப்பது. பிறகு இடது காலிஞல் இரண்டு தடவை குறுகிய அடிகளே எடுத்து வைப்பது, அப்போது மத்தளத்தை அதற்கேற்றபடி மெதுவாக இரண்டு தடவை விட்டு விட்டு அடிப்பது. கூத்தாடு பவர்களின் உற்சாகம் அதிகரிக்கும் போது ஒரு புதிய வேகத்தையும் உற்சாகத்தையும் கூத்தாடுபவர்களிடம் பார்க்கலாம். கூத்தாடும் போது பாட்டிற்கும் தாளத் திற்கும் ஏற்றபடி கைகளேக் கோத்தும், விட்டும் அடித்தும் கூத்தாடுவார்கள்; ஒருவரையொருவர் பார்த் துக் கொண்டு வட்டமாக நிற்பார்கள். அப்போது கைகளேத் தன் முகத்தின் முன்பும் வட்டத்தில் எதிரில் உள்ளவன் பக்கமும், கீழேயும், பின்புறமும், நீட்டியும், கோத்தும், அடித்தும் ஆடுவார்கள். கால், கை, கண், உடம்பு எல்லாம் ஒத்து லயித்துக் கூத்தாடுவதைப் பார்த்தால், காடர்களிடத்திலும் ரசிகத்தன்மையும், லலித கலே உணர்ச்சியும் இருப்பதை அறியலாம். ஆண் களும் பெண்களும் இவ்விதம் பல கூத்துக்களே ஆடுகிறுர்கள்.

### பழமொழிகள்

காடர்களிடம் பழமொழிகளும், விடுகதைகளும், புதிர்களும் இருக்க வேண்டும். காடர்களேக் கேட்டதில் அம்மாதிரி அநேகம் இருப்பதாகவும், அவற்றை அறிந்த வர்கள் அந்தச் சமயத்தில் அங்கே இல்லேயென்றும்

சொன்னார்கள். அவர்களைப் பார்த்து அவற்றைக் கேட்க வேண்டுமென்று நான் (நூலாசிரியர்) சொன்ன போது காடன் சிரித்துக் கொண்டு ''அதெல்லாம் நீங்க கேட்கக் கூடாது'' என்றான். நான் அவற்றைக் கேட்டு அவர்களை ஏளனம் செய்வேன் என்ற எண்ணமோ, என்னவோ தெரியவில்லை. எனினும் காடர் பழமொழிகளை எரன் பெல்ஸ் தமது புத்தகத்தில் கொடுத்திருக்கிறார். ஒன்று ''பிடிச்சது இரும்பு, கடிச்சது கரும்பு.'' இதன் கருத்து என்ன வென்றால் எந்த ஒரு பொருளைப் பற்றினாலும் அதைப் பலமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு தின்பண்டத்தைச் சாப்பிட்டாலும் அது கரும்பு போன்று ருசியுள்ளது என்று எண்ணிச் சாப்பிட வேண்டுமாம்! என்ன உயர்ந்த கருத்துக்கள்! இவற்றைத் தானே ஹிந்து மத நூல்களும் கூறுகின்றன!

**குழந்தைகளின் விளையாட்டுக்கள்**

காடர் குழந்தைகளின் வாழ்க்கை இயற்கைத் தாயின் மடியில் இன்பகரமாக நடக்கிறது. காடர் குழந்தைகள் 5, 6 வயது முதற் கொண்டே பல விளையாட்டுச் சாமான்களைச் செய்கின்றன. மூங்கில், நார், தேங்காய் கொட்டாங்கச்சி இவற்றைக் கொண்டு பல விளையாட்டுச் சாமான்களைக் காடர் குழந்தைகள செய்கிறார்கள். சமவெளியில் வசிக்கும் குழந்தைகளை விட காடர் குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் செய்வதில் திறமை அதிகம்.

இரண்டு கொட்டாங்கச்சியின் கண்களில் ஒரு கயிற்றை நுழைத்து முடி போட்டு, கயிற்றை மாலையாகப் போட்டுக் கொண்டு கொட்டாங்கச்சியைக் காலின் கட்டை விரலுக்கும் இரண்டாம் விரலுக்கும் நடுவில் மாட்டிக் கொண்டு, கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டு காடர் சிறுவர்கள் நடந்து ஓடி விளையாடு வார்கள்.

தீப்பெட்டிகளைக் கொண்டு ரயில் வண்டித்தொடர் செய்து விளையாடுகிறார்கள். குழந்தைகள் மாலை கட்டுவதிலும் சமர்த்தர்கள்.

மற்றொரு விளையாட்டு மிகவும் ருசிகரமானது. நமது குழந்தைகளும் அதை விளையாடலாம. அதற்குத் தடித்த இரண்டு மூங்கில்கள் வேண்டும். ஒன்றைத் தரைக்கு மேல் 2, 2½ அடி உயரம் இருக்கும்படி நட்டைக் குத்தலாக நட வேண்டும். மூன்றடி நீளமுள்ள மற்றொரு மூங்கிலை நடுவே குடைந்து, குடைந்த பாகத்தைப் பூமியில் நட்டிருக்கும் மூங்கிலின் மேல் பாகத்தை மூடும்படி வைக்க வேண்டும். பிறகு மேலே குறுக்கே வைத்த மூங்கிலின் இருபக்கங்களையும் இரண்டு குழந்தைகள் பிடித்துக் கொண்டு வேகமாகச் சுற்றிச் சுற்றி வருவார்கள். வேகம் அதிகரித்து மூங்கில் தானாகவே சுற்ற ஆரம்பித்ததும், குழந்தைகள் ஓடுவதை நிறுத்தி மூங்கிலின் மீது சாய்ந்து கொள்வார்கள். வேகத்தினால் மூங்கில் தானாகவே சுற்றும். இதில் பந்தயம் போட்டும் விளையாடுவார்கள்.

இந்த விளையாட்டை நான் வேறு எவரும் விளையாடிப் பார்த்ததில்லை.

கும்மி, ஓட்டம், குதித்தல், ஒளிந்து விளையாடுதல் போன்ற பல விளையாட்டுக்களையும் காடர் குழந்தைகள் விளையாடுகின்றனர்.

**தேன் எடுத்தல்**

காடர் மலைச்சரிவுகளில் தேனீக்கள் கட்டியுள்ள தேன் கூடுகளை எடுப்பதுதான் மிகவும் துணிகரமானது. அபாயமானதுங்கூட. செங்குத்தானதும், குடைபோல் கவிழ்ந்திருக்கும்படியான மலைகளில் கட்டியிருக்கும் தேன் கூடுகளை இவர்கள் எடுப்பது மிகவும் ஆபத்தான காரியம். செங்குத்தான பாறையில் ஒரு முனையில் பலமாக அவிழாதபடி பிரம்பினால் செய்யப்பட்ட வடத்தைக்

கட்டி, அதன் வழியாகக் கீழே இறங்குவான். தேன் கூடு தரைமட்டத்திலிருந்து மிகவும் உயர்ந்தே இருக்கும். அப்போது காடன் 'திரிசங்கு' போல் அந்தரத்தில் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுவது போல் ஆடி அந்தக் கூடு இருக்குமிடத்தை அடைந்ததும், தீப்பந்தத்தால் தேனீக்களை விரட்டுவான். பிறகு கையிலுள்ள ஒரு கோலால் தேன் கூட்டைப் பெயர்த்து எடுத்து மறுபடியும் மேலே ஏறுவான். இதற்குள் அங்குள்ள தேனீக்கள் தமது கோபம் முழுவதையும் அவன் மீது செலுத்தி அவன் முகத்திலும் உடம்பிலும் கொட்டிவிடும். அவற்றைப் பொறுத்துக் கொண்டு தேன் கூட்டோடு மேலே வருவான். காடன் இப்படித் தேன் சேகரிக்கும்போது சிலர் கீழே விழுந்து மாண்டு போவதும் உண்டு.

காடன் தேன் சேகரிக்கக் கீழே இறங்கும்போது அவனது பெண்சாதியோ. நம்பிக்கையுள்ள நெருங்கிய சொந்தக் காரனோ அக்கயிற்றைப் பிடித்துக் காவல்காக்க வேண்டும். இதற்குக் காரணம், பங்காளிகளோ, சிநேகிதர்களோ இருந்தால், அவர்கள் பழைய பகைகளைத் தீர்க்க கயிற்றை விட்டு விடலாம்; அறுத்தும் விடலாம். அப்போது கீழே தேன் எடுக்கச் சென்றவன் மடிய வேண்டியதுதான். எதிர்பாராவிதமாக இதில் ஒருவன் இறக்க நேரிட்டால் இறந்தவன் மனைவியை கயிற்றைக் காத்திருந்த சொந்தக்காரன் மணந்து போஷிக்க வேண்டுமென்பது காடர்களுள் உள்ள ஒரு ஏற்பாடு.

**புகை—குடிப்பழக்கம்**

பெண்கள் புகையிலை போடுவர். ஆண்கள் சுருட்டுக் பிடிப்பார்கள். அபினி கஞ்சாப் பழக்கமும் இருபாலருக்கும் உண்டு. ஆதியில் இவர்கள் இக் கெட்ட பழக்கங்களைக் கண்டறியார்கள். உத்தியோகஸ்தர்களும், கண்ட்ராக்டர்களும் இவர்களிடை இப்பழக்கத்தை வளர்த்து விட்டதாகக் காடர்கள் சொல்லுகிறார்கள்.

# 5. மண்ணான்

மண்ணான் என்ற பழங்குடிகள் மதுரை மாவட்டத்தில் பெரியாறு பிர்க்காவில் வசிக்கிறார்கள். இவர்கள் முன் காலத்தில் மதுரையை ஆண்டு வந்த அரசர்களை அண்டிப் பிழைத்தவர்கள். பிறகு ஏலக்காய் மலையில் குடி ஏறினார்கள். அங்குள்ள ஒரு பாளையக்காரர், தனது அலுவல்களைக் கவனிக்க மூன்று மண்ணான்களை நியமித்தார். அதற்கு அடையாளமாக முதல்வனுக்கு வெள்ளி வாளும் பதக்கமும், இரண்டாமவனுக்கு ஒரு தோடாவும் கோபுர மண்ணான் என்ற பட்டமும், மூன்றாமவனுக்கு வெள்ளிக் கொண்டை கொண்ட ஒரு பிரம்பும், தாழமலை மண்ணான் என்ற பட்டமும் கொடுத்தானாம். இந்த மூன்று பேருக்கும் மற்றைய மண்ணான்கள் பலவிதமான சிற்றேவல்களெல்லாம் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

மண்ணான்களுள் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமானால் மணமகனும், மணமகளும் ஒத்துக் கொண்டால் மாத்திரம் போதாது. அவர்களின் பெற்றோர், உற்றார் உறவினர்களின் சம்மதமும் போதாது. மேலே சொன்ன மூன்று மண்ணான்களில் எவருடைய கட்டுப்பாட்டுக்கு அடங்கி வாழ்கிறார்களோ அவர்களுடைய சம்மதமும் வேண்டும். மணமகன் ஒரு மண்ணானின் கட்டுப்பாட்டுக்கும், மணமகள் மற்றொருவனின் கட்டுப்பாட்டுக்கும் அடங்கி இருந்தால், இரு மண்ணான்களின் சம்மதமும் அவசியம். சாதாரணமாக இந்தச் சம்மதத்தைப் பெறுவதில் கஷ்டமில்லை.

மண்ணுன் ஆணும் பெண்ணும் நம் எல்லோரையும் போலவே உடை தரிக்கின்றனர். வெள்ளி அல்லது பித்தளையால் செய்யப்பட்ட காது கடுக்கன்களை ஆண்கள் அணிகின்றனர். கழுத்தில் வெள்ளை, சிவப்பு மணிகளாலான மாலையையும், கையில் பித்தளைக் காப்பையும் அணிகிருர்கள். மலைவாசிகளுக்குள் குடிசை கட்டுவதில் மண்ணுன் இனத்தவர் மிகவும் கெட்டிக்காரர்கள். அவர்களது குடிசை மிக வேலைப்பாடமைந்தது; அழகானது.

குழந்தை பிறந்து ஓராண்டு கழிந்ததும், குடும்பத் தலைவன், அந்தக் குழந்தையின் கழுத்தில் மணிகள் சேர்க்கப்பட்ட சரத்தைக் கட்டுகிருன். பிறகு அக்குழந்தைக்கு ஒரு பெயரும் வைப்பான்.

மண்ணுன்கள் சவத்தை அடக்கம் செய்கின்றனர். சவப்பெட்டியை மூங்கிலாலும் நாணலாலும் செய்கிருர்கள். வாத்தியங்கள் முழங்க, சவத்தை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். சவத்தின் மேலிருக்கும் நகைகளை அப்புறப்படுத்துவதில்லை. சவக்குழியை மூடுவதற்கு முன்பு சவத்தின் வாயில் அரிசி போடுகிருர்கள். இந்த வழக்கம் எல்லா இந்துக்களிடமும் உண்டு. சவக்குழியின் மீது ஒரு சிறிய கட்டிடமோ, திட்டோ கட்டுகிருர்கள். மண்ணுன்கள் தமிழ் பேசுபவர்கள். அவர்கள் தம் துணியைத் தாமே துவைத்துக் கொள்கிருர்கள். துணி வெளுக்க அவர்களுக்கு வண்ணுன் கிடையாது. ஒருவனுக்கு மற்றவன் சவரம் செய்து விடுவது வழக்கம்.

மண்ணுன்கள் வைத்தியத்தில் கைதேர்ந்தவர்கள். காட்டு மூலிகைகளின் தன்மையை நன்கறிவார்கள். எல்லா மலை ஜாதிகளையும் விட இவர்களுக்குத்தான் மூலிகைகளைப் பற்றிய பல விஷயங்களும் தெரியுமாம். இவர்களிடம் குடிப்பழக்கம் உண்டு. மது விலக்கிற்குப்

பிறகும் கள்ளச் சாராயம் இறக்கிச் சாப்பிடுகிறுர் களாம்.

மலையாளிகளைப் போல, சொத்து தாய்வழிப் பெண் சந்ததிகளுக்குத் தான் போகும். இருந்தாலும் சொந்தப் பிள்ளைகளுக்கும் ஒரு பாகம் கொடுக்கிறுர்கள்.

மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டும் வழக்கம் மன்ஞன்களிடை உண்டு. கணவன் இறந்ததும் அவன் மனைவி தன் தாலியைக் கழற்றி விடுவாள். இதுவும் ஹிந்து சமூகத்தில் உள்ள பழக்கம்.

இவர்களுள் விதவை விவாகமும் உண்டு. முதல் புருஷன் இறந்து இரண்டு வருஷம் காத்திருந்து, பிறகு விதவை மறுபடியும் வேறு புருஷனைக் கலியாணம் செய்து கொள்ளலாம். மாமன் மகளைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்ற கொள்கை மன்ஞன்களுக்குள் உண்டு.

பெரியாற்றில் உள்ள தெய்வத்தையும், சபரிமலை யிலுள்ள சாஸ்தா "அய்யப்பனையும்" மன்ஞன்கள் வழிபடுகிறுர்கள்.

மற்ற மலை ஜாதிகளைப் போல மன்ஞன்களும் தேன் திரட்டுவதில் சமர்த்தர். குரங்கின் மாமிசத்தைச் சாப்பிடு கிறுர்கள். முதலை, பாம்பு, எருமை, பசு இவற்றின் இறைச்சியைத் தொடுவதில்லை. மற்றைய மலைவாசிகளைப் போல மன்ஞன்களும் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றனர்.

மன்ஞன்கள் சந்தோஷம் நிறைந்தவர்கள். எல்லோ ருடனும் சகஜமாகக் கலந்து பழகும் தன்மையுடைய வர்கள்; குள்ளமானவர்கள்; உடம்புக் கட்டுள்ளவர்கள்; உடம்பில் அதிகமாக மயிரற்றவர்கள்.

அவர்களுக்குள் வைசூரியும், காலராவும் பரவி, பலர் மாண்டு போயினர். 50, 60 வயதிற்கு மேல் அதிகமாக மண்ணுன்கள் உயிரோடிருப்பதில்லை.

மண்ணுன்கள் நிலத்தைப் பாழ்படுத்துப் பயிரிடும் முறை அல்லது இடம் மாறி மாறி விவசாயம் செய்யும் முறையைக் கையாண்டு வருகிருர்கள். இவர்கள் யாருக்கும் ஒருவிதமான வரியும் செலுத்துவதில்லை. ஆனுல் அதற்குப் பதிலாகக் குடிசை கட்டுவது, வழிகளைச் செப்பனிடுவது போன்ற வேலையைச் செய்கிருர்கள். இதற்கு அவர்களுக்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டுமென்ற திட்டமும் இருக்கிறது. அம்மாதிரியே காட்டிலாகாவிற்கு மலைபடு பொருள்களைத் திரட்டி ஒரு குறித்த விலைக்கு விற்கிருர்கள்.

மண்ணுன்களுள் கிராமத்தின் நாட்டாண்மைத் தனம் சகோதரியின் மகளுக்குச் சேரும். மகனுக்கு சேராது.

மதுரை மாவட்டத்தில் மண்ணுன்களின் நலத்திற்காக உழைக்கும் தொண்டர்கள் தற்சமயத்தில் அவர்கள் என்ன நிலையில் இருக்கிருர்கள் என்பதை விசாரித்துப் புள்ளி விவரங்களுடன் வெளியிட்டால் மிகவும் அனுகூல மாயிருக்கும். இதில் அதிகாரிகளும் அக்கறை கொண்டு அரிய சேவை புரியலாம்.




இருளர்

# 6. இருளர்

தமிழ் நாட்டில், நீலகிரியில் பல பழங்குடிகள் வசிக்கின்றனர். தொதவர், கோத்தர், இருளர், குறும்பர் போன்ற பல பழங்குடிகள் இந்த ஜில்லாவில் வசிக்கிறார்கள். இருளர்களைப் பற்றி இங்குப் பார்ப்போம்.

## நீலகிரி இருளர்

நீலகிரி ஜில்லாவில் குன்னூர் தாலுகாவில் இருளர்கள் வசிக்கும் இடத்தைப் போய்ப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இங்கு குஞ்சுப் பனையிலும், அதையடுத்த ஏழு கிராமங்களிலும் இருளர்கள் வசிக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கும், மற்றொரு கிராமத்திற்கும் ஐந்து, ஆறு மைல் தூரமிருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் பத்துப் பதினைந்து இருளர் குடிசைகள் உண்டு, இருளர் குடிசைகள் பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும். மூங்கில் தட்டிகளின் உட்புறமும் வெளிப்புறமும் வெகு அழகாக, சமமாகத் தோன்றும்படி மண்ணால் பூசப்பட்டிருக்கும். வெளிச் சுவர்களில் சுண்ணும்பு நீரால் பல அழகான கோலங்களையும் சித்திரங்களையும் தீட்டியிருக்கிறார்கள். கூரை, புல்லால் வேயப்பட்டிருக்கும். கூரைப் புல்லுக்குக் கீழ் உட்புறம் பொன் நிறமுள்ள உலர்ந்த வாழை மட்டைகளைப் பரப்பி அதன் மேல் புல்லைப் போர்த்திருப்பது அழகாக இருக்கிறது.

நீலகிரியிலும், மற்றும் கோயமுத்தூரில் அத்தப்பாடியிலும், ஆனைமலையில் சாடிவயலிலும், செங்கல்

பட்டிலும், வட ஆற்காட்டிலும், தென் ஆர்க்காட்டிலும் இருளர்கள் வசிக்கிறார்கள். செங்கல் பட்டு, வடஆற்காடு, தென் ஆர்க்காட்டு இருளருக்கு வில்லியர் என்ற பெயரும் உண்டு.

இருளரின் குடிசை சிறியது. பத்தடி சதுரமுள்ளது. முன்னால் மூன்றடி அகலமும் பத்தடி நீளமும் உள்ள ஒரு தாழ்வாரம். உள்ளே இரண்டு அறைகள். ஒன்று சமைக்க, மற்றொன்று வசிக்க, தூங்க. இருளர் குடிசை இருளடைந்தது. வாயில் கதவு தவிர, உள்ளே வெளிச்சமோ, காற்று வர ஜன்னலோ, வேறு ஏற்பாடோ கிடையாது. இந்தச் சிறு குடிசைக்குள்தான் குடும்பத்தார் இரவில் படுத்து உறங்க வேண்டும். ஆதலால் ஆண் பெண்களின் நன்னடத்தைக்கு இருளர் களின் குடிசை ஏற்றதாக அமையவில்லை. இருளர்களிடை ஆணும் பெண்ணும் இஷ்டம் போல் நடந்து கொள்வது சர்வ சாதாரணம். அதனால் அவமானமோ சங்கடங்களோ ஏற்படமாட்டா.

குடிசை கட்ட இருளன் ஒரு காசு கூட செலவு செய்ய வேண்டியதில்லை. அவன் வசிக்குமிடத்திலேயே அதற்கு வேண்டிய மூங்கில், ஓலை, நார், எல்லாம் கிடைக்கின்றன. ஆனால் சுகாதார முறையில், காற்றோட்டமும், வெளிச் சமும் உள்ள வகையில் குடிசைகள் கட்டுவதின் அவசி யத்தை அவன் அறியான். அதன் நன்மையை அவனுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

இருளன் எல்லோரிடமும் நேசித்து அன்புடன் நடந்து கொள்ளும் தன்மையுடையவன். ஆனால் நடத்தையில் தன் கௌரவத்திற்குக் கெடுதல் வரும்படி நடந்து கொள்ள மாட்டான். இருளன் தோற்றத்தில் அதிக உயர மில்லை. சுக்குப்போன்ற காய்ந்த ஒல்லியான உடம்பு. சதைப்பற்றோ, கொழுப்போ, அகன்ற மார்போ,

வலிவான கைகால்களோ உள்ள இருளனைப் பார்ப்பது கஷ்டம். பார்ப்பதற்கு இளைத்திருப்பான். கள்ளங் கபடற்றவன். நல்ல உழைப்பாளி அல்ல. வெளியாரைக் கண்டால் பலநாள் பழகிய நண்பர்களைக் காணுவது போல முகமலர்ச்சியுடன் வரவேற்கிறான். அடிமைபோல் பயந்து ஒடுங்கி நிற்பதில்லை. உதவியை எதிர்பார்ப்பவன் போல் பேசுவதுமில்லை. ஒடுங்காமல் வளையாமல் நின்று நம்மை நேராகப் பார்த்துப் பேசுகிறான். இருளனின் உடையில் ஒருவிதமான வித்தியாசமுமில்லை. அவன் மற்றைய கிராமவாசிகளைப் போலவே விளங்குகிறான்.

இருளப் பெண், இருளனைவிட உயரம் கம்மி. ஒருவரையும் மதிக்க மாட்டாள். தன்னடக்கமும் தன்னம்பிக்கையும் உடையவள். அவள் உடுப்பது இரண்டு துணி. ஒன்று இடுப்பிலிருந்து கணுக்கால்வரை தொங்கும். மற்றொன்று அவளது உடம்பின் மேல்புறத்தை மறைத்திருக்கும், இருளனைவிட இருளி அதிக உழைப்பாளி. அவளது நடை பார்க்கக் கம்பீரமாயிருக்கும். தலையில் சுமையையும், இடுப்பில் குழந்தையையும் வைத்துக் கொண்டு வீசி வீசி, காலும் கையும் உடம்பும் லலிதமாக அசைவது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பட்டணத்துப் பெண்கள், இருளியைக் கண்டு பொறாமையும் கொள்ளலாம். இருளிகளின் உடம்பு பளபளப்பாகவும் மிருதுவாகவும், திரண்டும் இருக்கும். ஆனால் அவளிடம் துர்நாற்றம் குடி கொண்டிருக்கும். இருளக் குழந்தைகளைக் கண்டாலே ஒரு ஆனந்தம்—கறுப்பாயிருந்தாலும் என்ன மினுமினுப்பு! கொழுத்துத் திரண்ட குழந்தைகளைப் பட்டணவாசிகளிடைக் காண்பதரிது. இருளக் குழந்தைகளுக்குப் பயம் என்பதே கிடையாது. வெளியார்கள் வந்தால் அவர்களிடம் சகஜமாகப் பழகுகின்றன; விளையாடுகின்றன.

இருளர்கள் சுகாதார முறைகளை அனுசரிப்பதில்லை. உடம்புக்குத் தண்ணீர் விட்டுக் குளிப்பதுமில்லை. துணிகளை அழுக்குப் போகத் துவைப்பதுமில்லை. அவர்கள் உடுத்தும் வெள்ளைத் துணிகள், நாளுக்கு நாள் அழுக்கேறிப் பழுப்பு நிறத்தை அடைந்து விடுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு துணி அழுக்கேறிப் பழுப்பு நிற மடைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது குளிருக்கு அடக்கமாயிருக்கும் என்பது இருளரின் எண்ணம். இது மழையிலும் நனையாது. நெருப்பிலும் எரியாது! அவர்களின் தலைமயிர் எண்ணெய் கண்டு பல வருஷங்களா யிருக்க வேண்டும். ஆண் பெண் இரு பாலரின் தலை மயிரும் கத்தாழை மஞ்சி போல், வரண்டு மினுமினுப் பின்றிச் சடை போட்டுத் துர்நாற்றம் உள்ளதாக இருக்கும். தலையில் பேனும் அதிகம். பேன் எடுப்பது இருளர்களின் தினசரிப் பிழைப்பு. தினம் இரண்டு மணி நேரம் பெண்சாதி புருஷன் ஒருவர் தலைப்பேனை மற்றவர் மாறி மாறி வேட்டையாடுவார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரும் வெகு இன்பமாகப் பேசிக் காலத்தைக் கழிக்கின்றனர்.

சில வருஷங்களாகச் சில சமூகத் தொண்டர்களும், இந்திய ஊழிய சங்கத்தாரும் (Servants of India Society) இருளர்களின் நலத்திற்காகக் குஞ்சுப் பனையில் ஒரு பள்ளிக் கூடத்தை ஸ்தாபித்து, சமூக சேவையும் செய்து வருகின்றனர், இப்போது தாய்மார்கள் குழந்தைகளை வாரத்திற்கொரு முறை வெந்நீரில் குளிப்பாட்டு கிறார்கள்.

குஞ்சுப்பனை இருளர்களின் முக்கியத் தொழில் விவசாயம். வன இலாகாவினரிடமிருந்து வருஷம் ஒரு ஏக்கருக்கு 50 காசு முதல் ஒரு ரூபாய் வரை பேசிக் குத்தகைக்கெடுத்து விவசாயம் செய்கிறார்கள். ஒரு இருளன் பத்து ஏக்கர் வரை எடுத்துக் கொள்வான்.

அதில் பார்லி, ராகி, மக்காச் சோளம், காப்பித் தோட்டம், சீமைக் காய்கறிகள், இந்தியக் காய்கறிகள், பப்பாளி, கொய்யா, ஆரஞ்சு, வாழை, பலா போன்ற பழங்கள் எல்லாம் பயிரிடுகிருன். ஆனுல் இருளனை ஒரு நல்ல விவசாயி என்று சொல்ல முடியாது. ஆனுல் அவனுக்கு இயற்கைத் தேவியின் அனுகூலம் இருக்கிறது. வனம் நிறைந்த பூமி, வேண்டுமளவும் மழை. மழை பெய்ததும் உழுது விதைக்க வேண்டியது அவன் பொறுப்பு. பிறகு அறுவடையின் போது போக வேண்டியது. கிடைத்ததைக் கொண்டு வர வேண்டியது. கிடைத்த பொருளைச் சமவெளியிலிருந்து வரும் வியாபாரிகளுக்கும் தரகர்களுக்கும் குறைந்த விலையில் விற்க வேண்டியது. சுமார் ரூ 30, 40 மதிப்புள்ள பொருளை 10, 15 ரூபாய்க்கு விற்கிருர்கள். இருளர்கள், பசுக்களையும் ஆடுகளையும் கோழிகளையும் வைத்து வளர்க்கிருர்கள். ஆனுல் இவற்றிலிருந்து கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய், இறைச்சி முட்டை முதலியவற்றை அவர்களே தம்முடைய தேவைக்கு உபயோகித்துக் கொள்ளுகிருர்கள், மீதியிருப்பதைப் பக்கத்திலிருக்கும் காப்பித் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு விற்கிருர்கள்.

வாரத்திற்கு ஒரு தடவை எட்டு மைல் தூரத்திலுள்ள மேட்டுப்பாளையம் சந்தைக்குச் சென்று, தங்கள் பொருள்களை விற்றும், தங்களுக்கு வேண்டிய மண்ணெண்ணெய், மிளகாய், துணி முதலியற்றை வாங்கியும் வருகிருர்கள்.

குஞ்சுப்பனையில் ரப்பர், காபி, ஏலக்காய்த் தோட்டங்கள் உள்ளன, இருளர்கள் அத்தோட்டங்களிலும் வேலை செய்கின்றனர். மற்றும் வன இலாகாவில் மரம் வெட்டியும், மூங்கில் வெட்டியும் கூலி பெற்றுப் பிழைக்கின்றனர். நான் சென்று பார்த்த காலத்தில் (1941) ஒரு நாளைக்கு ஆணுக்கு ஆறு அணு கூலியும்,

பெண்ணுக்கு 4 அணு கூலியும் கிடைத்ததாகக் கேள்விப் பட்டேன். இப்போது அதிகமாயிருக்கலாம்.

நன்ருக உழைத்து, அதற்கு ஏற்ற ஊதியத்தைப் பெற்று, ஏற்ற வாழ்க்கையை நடத்த இருளனுக்கு வசதியிருந்தும் அவன் அதை முழுதும் பயன்படுத்திக் கொள்ளாதது வருந்தத்தக்கது. மலேரியாவினுலும் இருளன் பீடிக்கப்பட்டு கஷ்டப்படுகிருன். பக்கத்தில் வைத்திய வசதி கிடையாது. நல்ல ரஸ்தாக்களும் குடிநீர் வசதிகளும் பள்ளிக் கூடங்களும் இவர் போன்றவர்களுக்கு அவசியம். இக்குறைகளில் பள்ளிக்கூடக் குறை நீங்கி விட்டது. மற்றவை வெகு சீக்கிரத்தில் நீங்கி விடும் என்று எண்ணுகிருேம். காட்டு இலாகாவினர் இவர்களின் மீது அக்கறை கொண்டு, இவர்கள் சுகாதார, பொருளாதார, கலாசார நலத்திற்காக உழைக்க வேண்டியது அவசியம். முக்கியமாக, குடிசைக் கைத் தொழில்கள், ஆடுவளர்த்தல், கம்பளித் தொழில், தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், கூடை பின்னல், பாய் பின்னல், பழங்களைப் புட்டியில் போட்டுப் பத்திரப் படுத்தல் போன்ற கைத்தொழில்களுக்கு இங்கே வசதியுண்டு.

### அத்தப்பாடி இருளர்

கோயமுத்தூருக்கு வடமேற்கே 32 மைல் தூரத்தில் அத்தப்பாடி பள்ளத்தாக்கு இருக்கிறது. அங்கே சுமார் 15,000 இருளர்கள் வசிக்கிருர்கள். அத்தப்பாடிக்கு நல்ல பாதைகள் இல்லை. காட்டுப்பாதைகள்தான். கோயமுத்தூரிலிருந்து தடாகம் வரை 11 மைலுக்கு நல்ல பாதை இருக்கிறது. அதற்கப்புறம் 21 மைல் தூரம் காடுதான். நாம் போவதுதான் வழி. தடாகத்திலிருந்து ஆனை கட்டி 10 மைல் தூரம் உள்ளது. ஆனைகட்டியிலிருந்து சோலையூர் 11 மைல் உள்ளது.

அத்தப்பாடி பள்ளத்தாக்கு அதிக வளம் பொருந்திய இடம். இது சமுத்திர மட்டத்திற்கு சுமார் 3,000 அடிக்கு மேல் உள்ளது. உயர்ந்த மலைத்தொடர் 5,000 அடியுள்ளது. வருஷத்தில் சுமார் 100 அங்குலம் மழை பெய்கிறது. காடழிக்கப்பட்ட சமவெளிகள் கொஞ்சம் வெப்பமாயிருக்கும். உயரப் போகப் போக சீதோஷ்ண நிலைமை மிகவும் மிதமாயிருக்கும், இங்கே தேயிலை காப்பித் தோட்டங்களுண்டு.

அத்தப்பாடி விருத்தியடையாததற்குக் காரணம் நல்ல ரஸ்தாக்கள் இல்லாமைதான். உண்மையில் வழியேயில்லை எனலாம். வண்டிகளெல்லாம் மணலிலும், புதரிலும், பள்ளத்திலும், சகதியிலும் முரடான மேடு பள்ளங்களிலும் செல்ல வேண்டும். பலதடவை குடை சாய்ந்து விழவும் வேண்டும். ஜீப்பில் செல்வது சிறிது சுலபம். நான் ஜீப்பில் சென்று குடை சாயாமல் கோவை திரும்பி வந்தேன். என்றுலும் இரண்டு நாட்களுக்கு உடம்பெல்லாம் அடித்துப் போட்டது போல் ஒரே வலி. ஜீப்பில் போனுலும் அவ்வளவு குலுக்கல். சமீபத்தில் ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் அத்தப்பாடிக்கு ஜீப்பில் சென்று திரும்பிய போது இரண்டிடத்தில் ஜீப்பு குட்டிக் கரணம் போட்டது என்று கேள்விப்பட்டேன். ஆகவே அத்தப்பாடி போக எல்லோரும் அஞ்சுவது சகஜம்.

அத்தப்பாடி இருளர்கள் கறுப்பு நிறமுள்ளவர்கள் என்றும், அவர்கள் மீது கரியினுல் ஒரு கோடிட்டால் அது வெண்மையாகத் தோன்றும் என்றும் சில ஆங்கில உத்யோகஸ்தர்கள் சொல்லியிருப்பது சரியில்லை. அவர்கள் சமவெளியில் உள்ளவர்களைப் போலத்தான் இருப்பர்.

தோற்றத்தில் அந்தப்பாடி இருளர்கள் நீலகிரி இருளர்களைவிட தேகக் கட்டுடையவர்களாகக் காணப் படுகின்றனர். ஆண்கள் சமவெளிவாசிகளைப் போலத்

தலையில் குடுமி, காதில் கடுக்கன், கையில் வெள்ளிக்காப்பு, இடுப்பில் ஆடை, அணிந்து வாழ்கின்றனர். பெண்கள் முழங்காலுக்குக் கீழ்வரை ஒரு துணியையும், மார்பை மறைத்துக் கொள்ள ஒரு துணியையும் அணிகின்றனர். அவர்கள் நெற்றியில் பச்சை குத்திக் கொள்கிறார்கள். பாசிமணி, இவற்றால் செய்யப்பட்ட மாலைகளைப் பெண்கள் கழுத்தில் அணிகின்றனர். பல பித்தளை நகைகளையும் காதில் அணிகின்றனர். வெள்ளி (அன்றைய இரண்டணா, நாலணா, அரை ரூபாய்) நாணயங்களைக் கோத்துக் காசுமாலையாகவும் பெண்கள் அணிந்து கொள்கிறார்கள். பலவர்ணப் பனை ஓலைகளைச் சுருட்டிக் காதில் அணிந்து காதின் ஓட்டை பெரிதானதும் அதில் மூன்று முதல் 5 வரை இரும்பு வளையங்களை மாட்டிக் கொள்கிறார்கள். இதை இருளர்கள் மலையாளிகளைப் பார்த்துப் பெற்றதாகக் கொள்ள வேண்டும். இவ்வளவு கனமான இரும்பு வளையங்களைக் காது தொங்கும்படி ஏன் அணிகிறீர்கள் என்று கேட்டதற்கு ஒரு இருளி ''ஏன், இது அழகாயில்லையா? எங்க குழந்தைகள் அந்த வளையங்களைக் கண்டு கை நீட்டித் தாவிப் பிடிக்கப் பார்த்துச் சந்தோஷப் படுது. அப்போ தாயும் குழந்தையும் எப்படி சந்தோஷப் படராங்க உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள். இது என்ன சமாதானம் என்பது எனக்குத் தெரியவில்லை. எனினும் இருளிக்குக் குழந்தையின் மீதுள்ள அன்பை இது காட்டுகிறது.

இருளப் பெண்கள் தலைமயிர் அலங்கோலமாய்த் தானிருக்கும். எப்போதாவது தான் வாரிக் கொள்வார்கள். அடிக்கடி குளிப்பதும், துணி துவைப்பதும் அவர்களுக்குப் பழக்கமில்லை. மாதத்திற்கொருதரம் குளித்தால் அதுவே அதிகம். இதற்குத் தண்ணீர் வசதியில்லாமைதான் காரணம். பெரும்பாலும் ஓடைத் தண்ணீரைத் தான் உபயோகிக்கிறார்கள். ஒன்றிரண்டு ஊர்களில் கிணறுகளும் இருக்கின்றன. ஆனால் கிணற்றுத்

தண்ணீரைச் சாப்பிடுவதில்லை. 'அது அசுத்த மானது. குடித்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படுகிறது' என்றான் ஓர் இருளன். இந்த அறியாமையை எப்படி அகற்றுவது? மலபார் ஜில்லா போர்டு அங்கத்தினரும் சரி, அத்தப்பாடி யின் சொந்தக் காரரான மன்னார்காட் மூப்பில் நாயரும் சரி—ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வசதியையும் போக்குவரத்துக்கு வேண்டிய ரஸ்தாக்களையும் செய்து கொடுக்கவில்லை. வியாதி வந்தால் இருளர்களே வைத்தியம் செய்து கொள்கிறார்கள். அதைக் கேட்டால் இதென்ன ராக்ஷஸ வைத்தியம் என்பீர்கள். ஜுரம் வந்தால் குளிர்ந்த நீரில் குளித்து வெயிலில் காய்ந்தால் ஜுரம் போய் விடுமாம். தலைவலிக்கு விளக்கெண்ணெயைத் தடவினால் அது ஓடிவிடுகிறதாம். பெண்கள் பிரசவிக்கும் போது புருஷனே பிரசவத்தை நடத்துகிறான். வேறு பெண்ணோ அல்லது ஆணோ பிரசவத்தின் போது அருகில் போகக் கூடாது. மருத்துவச்சிகள் உதவியையும் நாடுவ தில்லை.

ஆணும் பெண்ணும் பகிரங்கமாகப் புகை பிடிக் கின்றனர். சிறு குழந்தைகளிடமும் இக் கெட்ட பழக்கம் பரவி விட்டது. சிறுகுழந்தைகள், ஆண், பெண் உட்பட தலையின் பின்புறத்திலும் பக்கத்திலும் உள்ள மயிரை க்ஷவரம் செய்து கொள்கிறார்கள். தலை உச்சியில் உள்ள மயிரைச் சிறியதாக வெட்டி விடுகிறார்கள். இதனால் சூரியனின் வெப்பம் தலையைத் தாக்காதாம்.

இருளரின் கலியாணச் சடங்குகள் எளிதானவை. இரு குடும்பத்தாருடைய சம்மதமும் பெற்ற பிறகு கலியாணம் நடக்கும். தாலி கட்டும் வழக்கம் இவர் களிடம் உண்டு. மாமியாருக்கு மாப்பிள்ளை 'பால் கூலி' மொய் வைப்பான். பால்கூலி என்பது தனது மனைவிக்குப் பால் கொடுத்து வளர்த்ததற்காக மணமகன் மாமியாருக்குக் கொடுக்கும் மொய்ப்பணம். சனி,

செவ்வாய் தவிர மற்றைய நாட்களில் கலியாணத்தை நடத்துகிறார்கள். கலியாணத்திற்குப் பிறகு விருந்தும் கள்குடியும், கூத்தும் நடத்துவார்கள். ஆனால் முன் போல் கள் எளிதாகக் கிடைப்பதில்லை. அதனால் கள் குடிப்பது குறைவு என்று இருளர்கள் சொல்கிறார்கள்.

இருளர்களின் குடிசைகள் எல்லாம் மூங்கில் தட்டி களினால் கட்டப் பட்டிருக்கும். குளிர் காலத்தில் குடிசைக்குள் பள்ளம் தோண்டி அதில் தீ வளர்ப்பார்கள். அதற்குப் பக்கத்தில் ஒரு சிறிய பள்ளம் செய்து அதில் குழந்தைகளைப் படுக்கச் செய்வார்கள்.

இருளர்கள் வசிக்கும் கிராமங்களில் சில்லறைக் கடைகள் கிடையாது. ஆகவே மண்ணெண்ணெய் விளக்கு இருளர்கள் வீட்டில் காண்பது அரிது. காட்டுச் செடிகளின் நார்களினால் செய்த பந்தத்தை இரவில் உபயோகப் படுத்துகிறார்கள். வீடுகளுக்கு முன்பு தீயை வளர்த்தி விட்டு, புலி யானை போன்ற துஷ்ட ஜந்துக் களுக்குச் சிறிதும் பயப்படாமல் தூங்குகின்றனர். அத்தப் பாடியில் சுமார் 15,000—க்கு மேலான இருளர்கள் சுமார் 150 கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களின் சுகாதார பொருளாதார வாழ்க்கை மேம்பாடடைய வேண்டுமானால் மூதன் முதலில் அத்தப்பாடிக்கு நல்ல பாதைகள் வேண்டும். மலேரியாவை அறவே ஒழிக்க வேண்டும். குடி தண்ணீர், தமிழ் உபாத்தியாயர்கள் நடத்தும் பள்ளிக் கூடங்கள், வைத்திய சிகிச்சை வசதி அவசியம். கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யவும், மலைப்பகுதித் திரவியங்களைச் சேகரித்து நல்ல விலைக்கு விற்கவும் குடிசைக் கைத்தொழில் நடத்தவும் தக்க வசதிகள் அவசியம். அத்தப்பாடி ஒரு பொன் சுரங்கம். அதைச் சரியானபடி சீர்படுத்தினால் இருளர்கள் மேம்பாடடைவார்கள். நாடும் செல்வம் நிறைந்து கொழிக்கும்.

அத்தப்பாடியில், வரகம் பாடியில் மலையாள ஜில்லா போர்டார் சுமார் 90 இருளக் குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக் கூடத்தை நடத்துகிறார்கள். தமிழ் பேசும் இருளக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க மலையாள உபாத்தியாயர்களை நியமித்திருக்கிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு ஒரு விதமான உபயோகமுமில்லை. தமிழ் உபாத்தியாயர்களை நியமிப்பது அவசியம். இதற்குக் காரணம் அத்தப்பாடி மலையாள ஜில்லா போர்டைச் சார்ந்தது. ஆதலால் ஜில்லா போர்டார் மலையாளிகளைத் தான் உபாத்தியாயர்களாக நியமிக்கிறார்கள். தமிழ் தெரிந்த உபாத்தியாயர்கள் சொற்ப சம்பளத்திற்கு அத்தப் பாடிக்குப் போக விரும்புவதில்லை. இருளர்களுக்குள்ளேயே படித்தவர்களை உபாத்தியாயர்களாக நியமிப்பது நலம்.

என்முன்னே பள்ளிச்சிறுவர், சிறுமியர் சில பாட்டுக்கள் பாடினர். கும்மியடித்தனர். அவர் பாடிய நாடோடிப் பாட்டு ஒன்றைக் குறித்து வந்தேன். இதோ அது.

என் சேவல் போனவிடம்
　　எனக்குத் தெரியாது
எந்தன் துரை ரங்கசாமி
　　என்ன சொல்லுவாரோ.
என்ன சொல்லுவாரோ
　　என் இஷ்டமுள்ள சேவல்
என் இஷ்டமுள்ள சேவல்தனை
　　எவரே பிடித்தாரோ.
தங்கத்தினால் சலங்கை கட்டித்
　　தரையில் விட்ட சேவல்
தரையில் விட்ட சேவல்தனை
　　தட்டிக் கொண்டவர் யாரோ.

காதுகுத்திக் கடுக்கனிட்டுக்
கடையில் விட்ட சேவல்,
கடையில்விட்ட சேவல்தனே
கட்டிப் பிடித்ததாரோ.
மூக்குக் குத்தி முருகு குத்தி
முடுக்கிவிட்ட சேவல்
முடுக்கிவிட்ட சேவல்தனே
மடக்கிக் கொண்டவர் யாரோ.
பயமின்றி வீதியெல்லாம்
பறந்து வரும் சேவல்
பறந்து வரும் சேவல்தனேப்
பிடித்துக் கொண்டவர் யாரோ
மந்தை வெளிவீதி யெங்கும்
மருவி வரும் சேவல்.
மருவி வரும் சேவல்தனே
திருடிக் கொண்டவர் யாரோ
கோட்டை மதில் கொத்தளமெங்கும்
கூவி வரும் சேவல்
கூவி வரும் சேவல்தனேக்
கொடுமை செய்தவர் யாரோ.

இதை இருளச் சிறுமியர் பாடிக் கும்மியடித்த போது நான் அத்தப்பாடியில் நாகரிகமும் படிப்பும் பண்புமற்ற பூர்வீக குடிகளான இருளர்களிடை இருந்ததாகவே நினைக்கவில்லை. கன்னித் தமிழ் கமழும் தமிழ் நாட்டி லேயே இருப்பதாக எண்ணினேன்; உணர்ந்தேன். அத்தப்பாடியில் உள்ள நிலமெல்லாம் மலையாள ஜென்மி யான மன்னுர்காட் மூப்பில் நாயருக்குச் சொந்தம். ஒரு ஏக்கருக்கு வருஷத்திற்குக் கால்ரூபாய் குத்தகைகொடுத்து ஒவ்வொரு இருளனும் 8 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை குத்தகை எடுத்து, அதில் சாமை, ராகி, சோளம் முதலிய தானியங்களைப் பயிர் செய்கிறார்கள். பயிர் செய்வதற்கு வேண்டிய பணத்தை இருளர் கடன் வாங்குகிறார்கள்.

பிறகு அதை விளைந்த தானியத்தையே கொடுத்துத் தீர்த்து விடுகிறார்கள். 60 ரூபாய் மதிப்புள்ள தானியத்தை வியாபாரிக்கு ரூ 10, 15—க்கு விற்று விடுகிறார்கள். எல்லா இருளர்களும் இம்மாதிரி வியாபாரிகளுக்குக் கடன் பட்டவர்கள்.

இருளிகள் கூடை, முறம் முதலியவற்றை மூங்கிலினால் செய்கிறார்கள். ஆனால் விற்க வசதி இல்லை.

கருப்புத் தெய்வம், மல்லேஸ்வரன், மாயப்பெருமாள், பத்ரகாளி போன்ற கடவுளை வழிபடுகின்றனர். கல்லை நட்டு வணங்கி, தேங்காய் பழம் வைத்துப் பூசை செய்கிறார்கள். ஆடு, கோழி இவற்றைப் பலியிடும் பழக்கம் இப்போது இவர்களிடம் கிடையாது.

இருளர்கள் பொதுவாக விஷ்ணுவை வழிபடுகிறார்கள். விசேஷ காலங்களில் காரமடைக்குச் சென்று காரமடை ரங்கநாதனைத் தரிசித்து வருகிறார்கள். தாசரி வேஷம் தரித்து, நாமம் பூண்டு, துளபமணிமாலை அணிந்து, மஞ்சள் வஸ்திரம் தரித்துக் காரமடையில் அவர்களுடைய குருவிடமிருந்து முத்ரா தானமும் பெறுகிறார்கள். சிவனையும் வித்தியாசமின்றி இருளர் வழிபடுகின்றனர். பழனிக்குக் காவடி எடுத்துச் செல்கின்றனர். காரமடை, வெள்ளியங்கிரி, பேரூர் போன்ற க்ஷேத்திரங்களுக்கு ஆடி மாதத்திலும், தை, புரட்டாசி மாதங்களிலும் யாத்திரை போய் வருகின்றனர். பின்னர் விருந்தும் நடத்துகின்றனர்.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் மணம் செய்து கொள்பவன் விதவையின் முதல் புருஷனின் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். பெண்கள் பருவமடைந்த பிறகுதான் மணம் செய்து கொள்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் நாலைந்து குழந்தைகளுக்குக் குறைவில்லை. குடும்பம் பெரிது என்ற

எண்ணம் இருளர்களிடை கிடையாது. 'மரம் வைத்தவன் தண்ணீர் பாய்ச்சுகிறுன்' என்ற மனுேபாவம் உள்ளவர்கள்.

அறுவடைக்குப் பின் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். அப்போது சிறுத்தொண்டர் நாடகம், கோவலன் நாடகம், ஹரிச்சந்திரன் நாடகம், போன்ற நாடகங்களை நடிக்கின்றனர்.

தமிழ்நாட்டுப் பழங்குடிகளுள் அத்தப்பாடி இருளர் களிடை நல்ல பண்பும், உழைப்பும், கபடமற்ற தன்மையும் இருப்பதைக் காணலாம். இவர்களுக்குத் தக்க வசதி யிருந்தால் அத்தப்பாடியை அவர்கள் வளம் பெறச் செய்வார்கள். அவர்களும் மேம்பாடடைவார்கள்.



# 7. பளியர்

தமிழ் நாட்டிலுள்ள பழங்குடிகளுள் மிகவும் தாழ்மையுற்றுத் தகைமை கெட்டுப் போனவர்கள்தான் பளியர்கள். தமிழிலக்கியங்களில் புளிஞர் எனப்படுபவர் இவர்கள்தாம் என்று தோன்றுகிறது. மதுரை ஜில்லாவில் பழனிமலை, கோடைக்கானல், பெரியாறு மலைப்பகுதிகளிலும், திருநெல்வேலியில் சில மலைப் பிரதேசங்களிலும், நீலகிரியிலும், கேரளத்திலும் இன்றும் இவர்களைக் காணலாம். தொதவர்களைப் போலவே, இவர்களுடைய ஜனத்தொகையும் குறைவு.

இவர்கள்தான் மலைப் பிரதேசங்களில் வாழ்ந்த முதல் குடிகள் என்று மானிடவர்க்க சாஸ்திர நிபுணர்கள் எண்ணுகிறார்கள். பளியர்கள், சுப்பிரமணியக் கடவுளின் மனைவியான வள்ளி தங்கள் குலத்துப் பெண் என்று கொண்டாடுகிறார்கள்.

அவர்கள் பிச்சை எடுப்பதில்லை; தோலையும் தொடுவதில்லை. ஆகவே பொது மக்கள் அவர்களைத் தீண்டப்படாதோர் என்று நினைப்பதில்லை. ஆனால் பளியரின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமானது. இவர்கள் தமது ஜாதியில் மற்றைய ஜாதியாரையும் முக்கியமாக மறவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்கள், இருளர்களைப் போலவே, இவர்களும் தமிழ் பேசுகிறார்கள்.

பளியன் ஓரிடத்தில் அதிக நாள் தங்க மாட்டான். இடம் விட்டு இடம் வசிப்பான். மலைபடு திரவியங்களான

தேன், மெழுகு, கடுக்காய் போன்றவைகளைத் திரட்டுவான். வலைபோட்டு முயல், பறவைகள் போன்ற சிறிய ஜந்துக்களைப் பிடிப்பான். கிழங்குகளைத் தோண்டி எடுத்துக் காடர் மலசர் போல வேக வைத்துத் தின்பான். ஓடைகளின் நீரில் விஷத்தைக் கலந்து செத்த மீன்களைப் பிடிப்பான். விஷத்தினுல் செத்த மீன்களை உண்பதில் ஒரு விதமான தீங்கும் இவர்களுக்கு உண்டாவதில்லையாம். இதைப்பற்றிச் சுகாதார அதிகாரிகள் ஆராய்ச்சி நடத்துவது நல்லது. மலைகளில் உள்ள கிராமவாசிகளிடம் பளியர்கள் கூலி வேலையும் செய்து வருகிருர்கள். மலைகளில் கண்டிராக்டர்களும் பளியர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, பல மலைபடு திரவியங்களைச் சேகரித்து வருகின்றனர். பளியர்கள் விவசாயம் செய்வதில்லை. ஓரிடத்தில் குடியேறி நிரந்தரமாக ஒரு வேலையைச் செய்வதில்லை. ஆடு மாடுகளையும் வளர்ப்பதில்லை. வேறு கைத்தொழிலும் தெரியாது. ஆனுல் பளியர்கள் நாயை மாத்திரம் வளர்க்கிருர்கள்.

வீடு வாசல், பூமி, சொத்து என்பது பளியர்களுக்குத் தெரியாது. அவர்களிடம் இருப்பது ஒரு அரிவாள், கிழங்கு குத்தியெடுக்க ஒரு பாவட்டம் கொம்பு இவை இரண்டுதான். காடர்களைப் போல, இவர்கள் சிக்கி முக்கிக் கற்களையும் இரும்புத் துண்டையும் கொண்டு நெருப்பு உண்டாக்குகிருர்கள். கூந்தல் பனையினின்றும் ஒரு விதமான கள்ளிறக்கிச் சாப்பிடுகிருர்கள்.

கோடை காலத்தில் மலைக் குகைகளிலும் சரிவுகளிலும் பளியர்கள் வசிக்கின்றனர். மழை காலத்தில் அப்போதைக்கு ஒரு சிறிய குடிசையைக் கட்டிக் கொள்கிருர்கள். இருளர்களைப் போல் அந்தக் குடிசைக்குள் இரவில் தீ மூட்டி எரிய விடுகிருர்கள். கொடிய விலங்குகளான புலி, கரடி, சிறுத்தை நெருப்பைக் கண்டு பயந்தோடும். இரண்டாவதாகக் குளிர் காலத்தில்

தீயின் வெப்பம் அவர்களுடைய உடம்புக்கு வேண்டிய வெப்பத்தையும் அளிக்கிறது. குடிசைகளை வெகு சீக்கிரத்தில் அமைப்பதில் இவர்கள் சமர்த்தர்.

இவர்கள் மாயாண்டி, கருப்புத் தெய்வம் என்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். ஆனால் இப்போது பளியர்களில் அநேகர் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்திருக்கின்றனர். கிறிஸ்துவப் பளியர்களை மற்ற பளியர்கள் விலக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுடன் சல்லாபம் செய்வதுமில்லை; கொடுக்கல் வாங்கலுமில்லை.

பளியர்களின் முன்னேற்றத்திற்காக இதுவரை ஹிந்து சமூகத் தொண்டர்கள் போதிய அளவுக்கு அக்கறை காட்டவில்லை. இவர்களது நிலைமையை விசாரித்து அரசாங்கத்தாரும் பொதுநல ஊழியர்களும் ஆவன செய்ய வேண்டியது அவசியம்.

# 8. புலையர்

புலையர்களை கோயமுத்தூர் ஜில்லாவில் ஆனைமலைப் பிரதேசத்தில் உள்ள காடுகளில் காணலாம். மலையாள ஜில்லாவில் வயநாடு தாலுகாவில் புலையர்கள் என்ற ஒரு வகுப்பினர் உளர். அவர்கள் மலையாளம் பேசுபவர்கள். ஆனைமலைப் புலையர்கள் வேறு. இவர்கள் தமிழ் பேசுகின்றனர். ஆகவே வயநாட்டுப் புலையர்கள் வேறு. ஆனை மலைப் புலையர் வேறு.

பழங்குடிகளுள், புலையர்களுக்கு நீண்ட தலைமயிர் இருப்பதைப் போல, வேறு எந்தக் குடியினருக்கும் கிடையாது. இதைப் பார்த்தாலே தெரியும். புலையர்கள், பொதுவாகத் தலைமயிரைக் கத்தரிப்பதில்லை. அதற்குப் பதிலாகப் பல சடைகளைப் பின்னி, தலையில் பிரிமணை மாதிரி அதனைச் சுற்றிக் கொள்வார்கள். ஒரு புலையன் நின்றால் அவனுடைய தலைமயிர் தரையில் ஒரு அடி மடிந்து புரளும். புலையர்களுக்கு மாத்திரம் இவ்வளவு நீளம் மயிர் வளர்வதின் மர்மம் தெரியவில்லை. ஆனால் இளம் புலையர்கள் இப்போது தலையை கிராப் செய்து கொள்கிறார்கள். சிலர் தம் தலை மயிரை வாரிச் செண்டு போல் சுற்றி அதை ஒரு பித்தளைச் சங்கிலியால் கட்டி அலங்கரித்துக் கொள்கிறார்கள். மற்றும் சில புலையர்கள் தங்களது நீண்ட மயிரைப் பற்றி, அக்கறையேயின்றி அதைச் சுருட்டி உருமாலைப்போல் தலையில் கட்டிக் கொள்கிறார்கள். புலையன் அணியும் ஆடைக்கும் சமவெளியிலுள்ளோர் அணியும் ஆடைக்கும் ஒருவிதமான

வித்தியாசமும் கிடையாது. புலையன் உடுத்தியிருப்பது துணியல்ல. அழுக்குப் படிந்த கந்தைதான். அது நீரிலும் நனையாது; வெந்தணலிலும் வேகாது. துர்நாற்றமும் உள்ளது. சிறிது கையில் பணமுள்ள புலையன் தலையில் உருமாலைக் கட்டிக் கொள்வான். இவர்கள் வசிக்கும் கிராமங்கள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. ஒரு கிராமத்தில் 7, 8 குடிசைகள் தானிருக்கும். அவர்களுடைய குடிசைகள் மூங்கிலினலும், வைக்கோலாலும், புல்லாலும் கட்டப்பட்டவை. வீட்டிற்குமுன் பந்தல்களை அமைத்துக் கொள்கின்றனர். இதுவே அவர்கள் வசிக்குமிடம். ஆனல் புலையர்கள் ஒரே இடத்தில் நிலைத்து வசிப்பதில்லை. ஒரு இடம் விட்டு வேறு இடம் பெயரும் பொழுது புதிய இடத்தில் புலையர்கள் புதிய குடிசைகளைக் கட்டிக் கொள்கின்றனர்.

புலையர்கள் எல்லாவித மாமிசங்களையும் சாப்பிடுகிருர்கள். காட்டெலிகளை வலை போட்டுப் பிடித்துச் சாப்பிடுவது என்ருல் அவர்களுக்கு வெகு ஆசை. அவற்றின் மாமிசத்தை மற்றெல்லாவற்றையும் விட அதிகமாகப் புலையர்கள் விரும்புகிருர்கள். மூங்கிலினலும் கயிற்றினலும் பொறிகளையும், கூடுகளையும், செய்து, எலியையும், காட்டுப் பறவைகளையும் மற்றும் முயல் போன்ற சிறு பிராணிகளையும் பிடித்துச் சாப்பிடுகிருர்கள். பன்றிகளையும், காட்டெருமைகளையும் கொன்று தின்கின்றனர்.

இவர்களது பொருளாதார நிலைமை மிகவும் கேவலமானது. பயந்து அடிமை போல் வாழ்கின்றனர். முக்கியமாக மலையின்மீது சாமான்களை எடுத்துப் போக, வியாபாரிகளும் மற்றவர்களும் புலையர்களைத்தான் உபயோகிக்கிருர்கள். இவர்களுள் சிலரிடம் வேட்டைத் துப்பாக்கிகளும் உண்டு. இவர்களது சமூக பொருளாதார நிலைமை மேம்படப் பள்ளிகள், கிணறுகள், ரஸ்தாக்கள், வைத்திய வசதி, கூட்டுறவு முறையில் தொழிற் சங்கங்கள் தேவை.

# 9. முதுகர்

முதுகர் என்பவர்கள் ஒரு சிறுபான்மையான பழங்குடிகள். இவர்களை முதுவர் என்றும் அழைக்கிறார்கள். இவர்களுக்கு முதுகர் என்ற பெயர் எப்படி வந்தது என்று கேள்வி எழலாம்.

இவர்கள் ஒரு காலத்தில் பாண்டிய நாட்டின் தலை நகரான மதுரையில் பாண்டியன் குடைக்கீழ் வாழ்ந்து வந்த வேளாள வகுப்பைச் சார்ந்தவர்களாம். ஒரு காலத்தில் பாண்டிய நாட்டின் மீது வேற்றரசர்கள் படை யெடுத்து வந்தபோது, பாண்டியனும், அவனது குடைக் கீழ் வசித்த முதுகரின் மூதாதையர்களும் மதுரையை விட்டுப் பாண்டியனோடு நெரியமங்கலம் என்ற ஊரை நோக்கித் தமது குழந்தைகளையெல்லாம் முதுகின் பின்னால் வைத்துத் துணியால் கட்டிச் சுமந்துகொண்டு ஓடினார் களாம். இதைக் கண்ட மற்றவர்கள், இவர்களை முதுகர் என்று அழைத்தார்களாம். முதுகர்கள் ஆதியில் வேளாள ஜாதியைச் சார்ந்தவர்களாம். ஆகவே, இன்றைக்கும் மலைவாசிகளுள் தாங்கள்தான் மேலானவர்கள் என்று எண்ணுகின்றனர். மற்றைய மலைச் சாதியினரும் முதுகர்கள் தங்களைவிட ஜாதியில் உயர்ந்தவர்கள் என்று கருதுகிறார்களாம்.

முதுகர் என்று இவர்களுக்குப் பெயர் வந்ததற்கு மற்றொரு காரணமும் கூறுகிறார்கள். மேலே கூறியது போல் பாண்டியனும் அவனது குடிகளும் வேற்றரசர்

களின் படையெழுச்சிக்கு அஞ்சி, மதுரையை விட்டு ஓடிய போது முதுகர்களின் மூதாதையர்கள், மதுரை மீனுட்சி அம்மனின் விக்ரகத்தைத் துணியில் மூட்டையாகக் கட்டி மறைத்துத் தம் முதுகின் மீது சுமந்து சென்முர்களாம். அக்காரணத்தாலும் இவர்களுக்கு முதுகர் என்ற பெயர் வந்தது எனக் கூறுகின்றனர்.

முதுகர் கோயமுத்தூர் ஜில்லாவில் ஆனே மலேயிலும் மலேயாள ஜில்லாவின் எல்லேயிலும், திருவாங்கூரிலும், வசிக்கின்றனர். முதுகர் இம்மலேப் பிரதேசங்களில் சில நூற்றுண்டுகளுக்கு முன்பாகத் தான் குடியேறி இருக்க வேண்டும் — அதாவது, மதுரையைத் தெலுங்கு நாயக்கன்மார் கைப்பற்றி ஆண்டதற்கு முன்புதான் முதுகர்கள் மேலே கூறியவிடங்களில் குடியேறி இருக்கலாம். அல்லது முகமதிய அரசனுன மாலிக்காபூரின் படையெடுப்பின் போதோ அல்லது அதன் பிறகோ, சுமார் பதினன்காம் நூற்றுண்டில் இவர்கள் மலேப் பிரதேசங்களில் குடியேறியிருக்கலாம் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் எண்ணுகிமுர்கள்.

முதுகர்கள், பாண்டிய நாட்டை விட்டு ஓடி வந்த போது இரண்டு கிளேகளாகப் பிரிய நேர்ந்தது. அதனுல் இரண்டு வகுப்பாருக்கும் ஒற்றுமையும், நட்பும் இல்லாமற் போய் விட்டதாம். அது எப்படி உண்டாயிற்று என்பதற்கும் ஒரு கதை உண்டு.

பாண்டிய நாட்டை விட்டு பாண்டியனேடு முதுகரின் மூதாதையர்கள் ஓடி வந்தபோது, தங்களது பெண்களேயும் கூட்டிக் கொண்டு வந்தார்கள். அவர்களுள் சில கர்ப்பிணிகளும் இருந்தனர். போடி நாயக்கனூரை அணுகிய போது கர்ப்பிணிகளுக்குப் பிரசவ வேதனே ஏற்பட்டது. அப்போது அக்கர்ப்பிணிகளின் புருஷர்களில் சிலர் வேற்றரசனின் படைக்குப் பயந்து கர்ப்பிணிகளேப்

போடி நாயக்கனூரில் தனியே விட்டு விட்டுப் போய் விட்டார்களாம். பிரசவம் ஆனபிறகு குழந்தையும், தாயும் அவர்களுடனிருந்த ஆண்களும் நீலகிரி மலைக்குப் போய்விட்டார்களாம். கர்ப்பிணிகளைப் பரிதவிக்க விட்டுப் போன முதுகர் வெகு தூரம் நடந்து கோயமுத்தூரில் ஆனைமலையை அடைந்தார்கள். அது முதற் கொண்டு போடி நாயக்கனூரில் தங்கிய முதுகரின் சந்ததியார் ஆனைமலைக்குச் சென்ற முதுகரின் சந்ததியாரைக் கண்டால் உடனே அவர்களை அடையாளம் கண்டுகொண்டு, அவர்களோடு ஒன்றும் பேசாமல் விலகிச் சென்று விடுவார்களாம். இது இன்றைக்கும் நடக்கிறது.

ஆனைமலையில் வசிக்கும் முதுகர்களிலும் கூட இரண்டு வகையினர் உண்டு. இரண்டு வகையினரும் ஒரே இடத்தில் வசித்தாலும் அவர்களது பேச்சிலும். பழக்க வழக்கங்களிலும் நாம் சில வித்தியாசங்களைப் பார்க்கலாம். இதற்கும் ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்கள். முதுகர்களில் முதன் முதலில் சில குடும்பங்கள் இந்த மலைப்பிரதேசங்களில் குடியேறியிருக்க வேண்டும். அவர்கள் குடியேறி 50, 60 வருஷங்களுக்குப் பிறகு, இரண்டாந் தடவை சில முதுகரின் குடும்பங்கள் அதே மலையில் குடியேறி இருக்க வேண்டும். முதலில் வந்தவர்கள் ஏற்கெனவே, மலைகளில் வசித்து வந்த மலையாள நாட்டு மலைஜாதிகளுடன் பழகி, மணம் செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த இரண்டு வகுப்பு முதுகரின் சந்ததியினரும் இன்றைக்கும் ஏலக்காய் மலை, கண்ணன் தேவன் மலை, ஆனை மலை போன்ற பிரதேசங்களில் வசிக்கின்றனர். இவர்கள் பேசுவது தமிழ்தான்.

முதுகர்கள் ஆதியில் மற்றைய மலைச்சாதிகளைப் போல மலைபடு திரவியங்களைச் சேகரித்தும், வேட்டையாடியும் வாழ்க்கையை நடத்தியிருக்க வேண்டும். பல

ஆண்டுகளுக்கு முன் தேயிலே, காப்பித் தோட்டங்கள் இம்மலேப் பிரதேசங்களில் தோன்றியதன் காரணமாக, முதுகர்களுக்கு அத்தோட்டங்களில் வேலே கிடைத்திருக்கிறது. அதற்குள்ள கூலியையும் பெற்று வருகிருர்கள்.

முதுகர் பல குடும்பங்களுடன் கூடித் தனிக் குடிசைகளேக் கட்டிக்கொண்டு வசிக்கிருர்கள். அவர்களது குடிசை சதுரமாக இருக்கும. கூரைகள் அதிக உயரமில்லாமல் தட்டையாக இருக்கும். மூங்கில், காட்டுக் கொம்பு, புல், இலே இவற்ருல் குடிசைகளேக் கட்டிக் கொள்கிருர்கள். பார்ப்பதற்கு வெகு அழகாகவும் இருக்கும்.

முதுகர் தங்களுடைய சமூகத்தில் பிறரைச் சேர்த்துக் கொள்வதில்லே. எனினும் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு பஞ்சத்தின்போது தொட்டி நாயக்கன் வகுப்பைச் சேர்ந்த ஒரு அநாதைக் குழந்தையைத் தமது ஜாதியில் சேர்த்துக் கொண்டு அவனுக்கு ஒரு முதுகர் பெண்ணேயும் மணம் செய்வித்தார்களாம். இவ்விதமே, சில வேளாளர்களேயும் தமது ஜாதியில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனுல் புதிதாகத் தமது ஜாதியில் சேர விரும்பும் ஒருவனே சில காலம் சோதித்து, சரியாக, ஒழுங்காக நடக்கிருனு என்று பார்த்துப் பிறகுதான் முதுகர் அவர்களேத் தமது ஜாதியில் சேர்த்துக் கொள்வார்களாம்.

முதுகர் சமூகத்தில் சில கட்டுப்பாடுகள் உண்டு. ஒவ்வொரு சமூகத்திலும் மூப்பன் ஒருவன் இருப்பான், முதுகர் சமூகத்தில் ஏற்படும் எல்லா சண்டை சச்சரவுகளேயும் அவனே பஞ்சாயத்து செய்து தீர்க்கிருன்.

முதுகர்களுக்குச் சகுனத்தில் நம்பிக்கை உண்டு. எந்த ஒரு வேலேயைத் தொடங்கும் முன்னும், பிரயாணம் செய்யும் போதும் முதுகன் நல்ல சகுனம் பார்ப்பது வழக்கம்.

சிறுவர்கள் வாலிபமடைந்து அவன் முகத்தில் மீசை அரும்பினுல் அதை முதுகர் ஒரு வைபவமாகக் கொண்டாடுகிருர்கள். அப்போது தமது உற்ருர் உறவினரை அழைத்து விருந்தளிக்கின்றனர். இதன் கருத்து என்னவென்று கேட்டபோது, 'வழக்கம்' என்று மாத்திரம் சொல்லி விட்டார்கள். இதில் எனக்குத் தோன்றிய மட்டும் ஆழ்ந்த கருத்திருப்பதாக ஊகிக்கிறேன். இந்தச் சடங்கை முதுகர் நடத்துவதால், தங்கள் சமூகத்தினர் எல்லோருக்கும் 'தனது மகன் ஆண்மகனுகி விட்டான். எல்லோரும் வந்து பாருங்கள். உங்களுக்குப் பெண் இருந்தால், அவளுக்கு ஏற்ற கணவன் இவன்' என்று தெரிவிப்பதற்கு இந்த வைபவத்தை நடத்துகிருர்கள் என்று எண்ணுகிறேன்.

பெண்கள் பருவ மெய்தியதும் வீட்டை விட்டு வெளியே ஒரு தனிக்குடிசை கட்டி அதில் அவளைப் பல நாட்கள் தனியாக வசிக்கும்படி விலக்கி வைக்கிருர்கள்.

முதுகர்களுக்கு வைத்தியமும் தெரியும். காட்டு மூலிகைகளின் தன்மை அவர்களுக்குத் தெரியும். உதாரணமாகக் குழந்தை பெருத ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிகிச்சை செய்கிருர்கள். ஆண்களுக்குக் கருங்குரங்கின் மாமிசத்தையும், பெண்களுக்குச் சில மூலிகைகளால் செய்யப்பட்ட கஷாயத்தையும் கொடுக்கிருர்களாம். இதனுல் இரண்டு பேருடைய மலட்டுத் தன்மையும் நீங்கி விடுகிறதாம். இதைப் பற்றி நமது வைத்திய நிபுணர்கள் விவரங்களைத் திரட்டி ஆராய்ச்சி செய்யின் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்படும்.

முதுகர்களின் கலியாண சம்பிரதாயம் பலதரப்பட்டது. ஒரே மனைவியை மணந்து வாழ்வதும், தொதவர்கள், நம்பூதிரிகள் போல, பல ஆண்கள் ஒரே பெண்ணைத் தம் மனைவியாய்ப் பாவித்து வாழ்வதும்,

ஓர் ஆண்மகன் பல மனைவிகளை மணந்து வாழ்வதும் உண்டு. மணவிஷயத்தில் ஒரு விதமான கட்டுப்பாடும் இல்லையெனத் தெரிகிறது.

பல ஆண்கள் ஒரே பெண்ணைத் தம் மனைவியாகப் பாவித்து வாழும் வழக்கம் இவர்கள் இம்மலைப் பிரதேசத்திற்கு வந்த பின்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். கர்ப்பிணிகளைப் போடி நாயக்கனூரில் தவிக்க விட்டு வந்த பின், தமது சமூகத்தில், ஒவ்வொருவரும் மணந்து கொள்ளப் போதிய பெண்கள் இல்லாமையினால் பல ஆண்கள் ஒரே பெண்ணை மணந்து வாழ்ந்திருக்கலாம். இப்மாதிரியான வழக்கம், நீலகிரியில் உள்ள தொதவர்களிடமும், மலையாளத்தில் உள்ள நம்பூதிரிகளிடமும் உண்டு. முதுகர் இப்பழக்கத்தை இவர்களிடமிருந்து ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பல சகோதரர்கள் ஒரே மனைவியை மணந்து கொள்ளக் கூடாது.

ஒரே ஆண் மகன் பல பெண்களையும் மணந்து கொள்ளலாம். இதனால் பல ருசிகரமான நிலைமைகள் ஏற்படுகின்றன. ஓர் ஆண் மகன் தன் ஊரில் பல ஆண் மக்களுடன் ஒரே மனைவியைக் கட்டிக் கொண்டு வாழலாம். இதில் பல கட்டுப் பாடுகள் உண்டு. ஒரு ஆண்மகன் தன் இஷ்டம் போல் தன் இல்லற வாழ்க்கையை நடத்த முடியாது. ஆகவே, தன் கிராமத்தை விட்டு அடுத்த கிராமத்தில் உள்ள பல பெண்களை மணந்து கொண்டும் இல்லற வாழ்க்கையை நடத்தலாம், இதில் இழிவோ, சங்கடமோ கிடையாது. ஆனால் ஏலக்காய் மலையிலுள்ள முதுகரிடம் இந்த இரண்டு வழக்கமும் இல்லை. அவர்கள் ஓர் ஆண் மகனுக்கு ஒரு மனைவி என்ற உயர்ந்த லட்சியத்தைக் கைப்பிடித்து நடந்து வருகிறார்கள். மணம் செய்து கொள்ளும் ஆணும் பெண்ணும் சில நாட்கள் தனியாக ஒரு குகையில் வசிக்க

வேண்டும். விதவைகளும் மறு விவாகம் செய்து கொள்ள லாம். ஆனல் இறந்து போன கணவனின் அத்தை மகன் தான் விதவையைக் கலியாணம் செய்து கொள்ள லாம். இறந்தவனின் சகோதரன் மணம் செய்து கொள்ளக் கூடாது.

சண்டை சச்சரவு செய்யும் பெண்சாதிகளை விலக்கி வைத்து, விவாகத்தை ரத்து செய்யும் வழக்கமும் இவர் களிடம் உண்டு. மனமொத்துப் புருஷனும், பெண்சாதியும் வாழ முடியாமற் போனல்தான் இம்மாதிரியான விவாக ரத்து ஏற்படுகிறது. விலக்கி வைக்கப்பட்ட பெண் வேறு யாரையாவது மணம் செய்து கொள்ளலாம்.

முதுகரின் சமயம், வழிபாடு எல்லாம் ஹிந்து மதத்தைத் தழுவியது. பழனியாண்டவரையும், மதுரை மீனுட்சியையும், சொக்கநாதரையும், பகவதி, அய்யப்பன் சூரியன் போன்ற கடவுள்களையும் வணங்குகின்றனர். இவர்கள் தைப் பொங்கல் பண்டிகையை வெகு விமரிசை யாகக் கொண்டாடுகிருர்கள். அன்று அவர்கள் ஊருக்கு யார் வந்தாலும் அவர்களுக்கு நல்ல விருந்து நடத்து வார்கள்.

முதுகர்கள் ஆதியில் வேளாளர் மரபைச் சேர்ந்த வர்கள் என்று சொன்னேம். ஆதலால் விவசாயம் அவர் களுக்குப் புதிதல்ல. இப்போது, காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யாதவர்கள், ராகி, சாமை போன்ற தானியங்களைப் பயிர் செய்கிருர்கள். வலை போட்டு எலி, அணில், காட்டுப்பறவைகள், முள்ளம் பன்றி, மான், மீன் முதலியவற்றைப் பிடித்து அவற்றின் மாமிசத்தைச் சாப்பிடுகின்றனர். முதுகர் அம்பெய்தும், துப்பாக்கியினல் குறிபார்த்தும், பறவைகளையும், காட்டு மிருகங்களையும் சுடுவதில் தேர்ந்தவர்கள். அரிவாள் முதுகரின் இணைபிரியாத ஆயுதம். முதுகர் மாடு, ஓநாய்,

பாம்பு, பன்றி இவற்றின் மாமிசத்தை எக்காரணங் கொண்டும் சாப்பிட மாட்டார்கள். இவர்கள், காட்டி லேயே வளரும் ஒருவித பனைமரத்திலிருந்து 'திப்பிலிக் கள்' என்ற கள்ளை இறக்கிச் சாப்பிடுகிறார்கள். இப்போதும் செய்கிறார்களோ என்னவோ தெரியாது.

முதுகர், தாம் வேறு ஜாதிகளை விட மேலானவர்கள் என்று எண்ணுகிறார்கள். வேறு ஜாதியாரோடு உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள்; புகை பிடிக்க மாட் டார்கள்; கள் குடிக்கவும் மாட்டார்கள்.

இன்றைக்கும் சிக்குமுக்கிக் கல்லால் முதுகர் தீ உண்டாக்குகிறார்கள்.

பொதுவில், இவர்கள் தமிழ் நாட்டாரைப் போலவே ஆடை அணிகிறார்கள். ஆனால், மற்றைய பூர்வகுடிகளைப் போல் படிப்பு, சுகாதாரம், குடிதண்ணீர், தொழில் வசதிகள் இவர்களுக்கும் கிடையாது.

# 10. ஏரவள்ளர்

ஏரவள்ளர் என்ற சிறுபான்மையான பூர்வகுடிகள் கோயமுத்தூர் ஜில்லாவில் உடுமலைப் பேட்டை தாலுகாவின் மலைப்பிரதேசங்களிலும் கொச்சியில் சித்தூரிலும் வசிக்கின்றனர். இவர்கள் பேசுவது தமிழ்தான். இவர்களுக்கு வில்லு வேடன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவர்கள் ஹிந்துக்கள். ஆண்கள் கண்ணன், கோதண்டன் என்கிற பெயர்களையும், பெண்கள் கன்னி, கைகேயி, ராமாயி என்ற பெயர்களையும் வைத்துக் கொள்கிறார்கள்.

இவர்களது பூர்வீகத்தைப் பற்றி அதிக விவரங்கள் கிடைக்கவில்லை. ஏனென்றால் ஏரவள்ளர்களுக்கே தெரியாது. பார்ப்பதற்கு மலைஜாதிகளைப் போலக் காணப்பட்டாலும் சாதுவானவர்கள். அவர்கள் மற்றைய மலைவாசிகளான காடர், மலசர்களைப் போல இடம் விட்டு இடம் பெயர்வதில்லை. காடுகளில் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குப் 'பதி' யென்று பெயர். இவர்களது குடிசைகள், காடர், மலசர்களது குடிசைகளைப் போன்றிருக்கும். குடிசை கட்ட ஆரம்பிக்கும் போதும், கட்டி முடிந்து குடி புகுவதற்கு முன்பும் அவர்கள் வன தேவதைகளை வணங்குகிறார்கள். எல்லா நல்ல வேலைகளைத் துவங்கும் போதும், அவர்கள் நல்ல நாள்பார்த்துத் தான் செய்வார்கள். திங்கள் விதை விதைக்கவும், மணம் செய்யவும், புதன் கிழமை வீடுகட்டவும், வெள்ளிக்கிழமை அறுவடைக்கும் ஏற்ற நாட்களாம்.

ஏரவள்ளர்கள் குடும்பங்கள் எல்லாம் ஒரே இடத்தில் குடிசை கட்டி வாழும் வழக்கம் கிடையாது. அவர்கள் எந்த விவசாயியிடம் வேலை செய்கிறார்களோ அவர்கள் தோட்டத்திலேயே குடியிருப்பார்கள். விவசாயிகளிடம் வேலை செய்வதற்கு ஒரு நாளைக்கு 2½ படி நெல் கூலி கிடைக்கும். பெண்களும் அதே கூலிக்கு உழைத்தாலும் ஆண்களைப்போல அடிமைப் பட்டு உழைப்பதில்லை.

இவர்கள் வசிக்கும் கிராமங்களில் அறுவடைக்குப் பின், ஒவ்வொரு குடியானவனும் கிராமத்திலுள்ள கோவிலுக்கு நெல் கதிர் கட்டி, அதைக் கோவிலில் கட்டும் வழக்கம் உண்டு. அதை இவர்கள் தம் கையாலேயே கட்டிக் கோவிலுக்குக் கொண்டு போவார்கள். அப்போது நிலத்துக்குச் சொந்தமான வர்கள், ஏரவள்ளர்களுக்கு இரண்டு வேட்டியும், பெண் களுக்குப் புடவையும் கொடுக்கும் வழக்கம் உண்டு. இவர்கள் மலையாளத்தின் எல்லையில் வசிப்பதால் மலையாளத்தார் கொண்டாடும் ஓணம், விஷு பண்டிகை களையும் கொண்டாடுகிறார்கள். அப்போது நிலத்துக்குச் சொந்தமானவன், ஒரு பறை நெல், இரண்டு தேங்காய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் இவற்றைத் தனது ஏரவள்ளர் பண்ணையாட்களுக்குக் கொடுப்பது வழக்கம். ஏரவள்ளர்களுக்குள் கலியாணம் நடந்தால் அப்போது நிலத்துக்குச் சொந்தமான யஜமான் அவர்களுடைய கலியாண செலவுக்குப் பணம் கொடுப்பான். இழவுக்கும் ஏற்படும் செலவையும் கொடுப்பான். நாலைந்து பறை நெல், மிளகாய், உப்பு, இவற்றையும் நிலத்திற்குச் சொந்தக்காரன் கொடுக்கும் வழக்கப் உண்டு. சிலர் வருஷத்திற்கு இவ்வளவு நெல் கொடுக்க வேண்டுமென்று நிலச் சுவான்தாரோடு ஒப்பந்தம் செய்து கொண்டும் விவசாய வேலை செய்வதும் உண்டு.

தங்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள, ஏரவள்ளர்கள் பணம் கடன் வாங்குவதும் உண்டு. விவசாயத்திற்கு வேண்டிய எரு. விதை, கறவை மாடு, எருமை இவற்றை வாங்குவார்கள். காடுகளில் உள்ள நிலங்களைக் குத்தகைக்குப் பிடித்து சொந்தத்தில் விவசாயம் செய்வோரும் உண்டு, பயிர் செய்து, விளைந்ததும் அதை விற்றுக் கடனை அடைத்து விடுகிறார்கள். பயிர் நன்றாக விளையாமல் போய் நஷ்டம் ஏற்பட்டால் அவர்கள் பணம் யாரிடமிருந்து வாங்கினார்களோ அவர்களிடம் கடன் தீரும் வரை அடிமைப்பட்டு வாழ்கிறார்கள். தக்க சமயம் வந்ததும் பணம் சம்பாதித்துக் கடனைக் கட்டி விடுகிறார்கள்.

ஏரவள்ளர்கள் கள்ளங்கபடமற்றவர்கள்; விசுவாசமுள்ளவர்கள்; கடவுள் பக்தியுள்ளவர்கள். தங்களை ஆதரித்துக் காக்கும் நிலச்சுவான்தாரரை விட்டு விட்டு ஓடிப்போகும் வழக்கம் இவர்களிடமில்லை. ஏரவள்ளர்களுள் ஆண்களின் வாழ்க்கை ஒரு விதமான அடிமை வாழ்வுதான் என்றால் அது மிகையாகாது.

ஏரவள்ளர்களுள் ஒரு பெண் பூப்புற்றதும் அவளுக்கென்று ஒரு பர்லாங்கு தூரத்தில் கட்டப்பட்ட ஒரு குடிசையில் அவள் ஏழு நாள் தங்கித் தனியே வசிக்க வேண்டும். அந்த ஏழு நாட்களிலும் அவளோடு சில பெண்களும் இருப்பார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவை அக்குடிசைக்குச் சற்றுத் தூரத்தில் பூப்புற்ற பெண் வீட்டார் கொண்டு வந்து வைப்பார்கள். அதை அப்பெண்கள் எடுத்து,பூப்புற்ற பெண்ணுக்குக் கொடுத்த பிறகு, தாங்களும் சாப்பிடுவார்கள். வயதானவர்கள் அந்தச் சாலைப்பக்கம் சென்றால் தீட்டு ஏற்படும். அப்படி ஏற்பட்டால் குளிப்பார்கள். சாதாரணமாக அதன் பக்கம் செல்ல மாட்டார்கள். ஏழு நாட்களுக்குப் பிறகு அப்பெண் குளித்துவிட்டு வீடு புகுவாள். அன்று அவர்

களுடைய உற்ருர், உறவினர்கள், நண்பர்கள், விருந்துண்டு காலத்தை இனிதே கழிப்பார்கள்.

ஒரு பெண்ணை அவள் பூப்படைவதற்கு முன் ஒருவன் மணந்து கொண்டால், அவள் பூத்த பின் நடக்கும் விருந்தின் செலவின் ஒரு பகுதியை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கலியாணமாவதற்கு முன்பு ஒரு பெண் வேறு ஆடவனேடு கூடிக் கருத்தரித்தால், முன் காலத்தில் அவளைக் கொன்று விடுவார்கள். ஆனுல் இப்போது அவளை ஜாதியை விட்டு விலக்கி வைக்கிருர்கள். ஆனுல் இம்மாதிரியான சம்பவங்கள் அத்தி பூத்தது போலத் தான் நடக்கும்.

ஏரவள்ளன் தன் மகனுக்குக் கல்யாணம் நடத்த எண்ணங்கொண்டால் தன் மைத்துனனுடனும், இன்னும் சில சுற்றத்தாருடனும் பெண்ணின் பெற்ருேர்களைப் போய்க் காணுவான். அவர்கள் சம்மதித்தால் கலியாணத்திற்கு நாள் பார்த்து, பெண் வீட்டார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விருந்தளிப்பார்கள். மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள். அதாவது ஒரு ரூப்பாய் கொடுத்துப் பெண்ணை விலைக்கு வாங்குவார்கள்.

மணமகன், மணமகள் இவர்களின் பெற்ருேர்கள் தமது நிலச் சொந்தக்காரர்களைக் கண்டு கலியாண ஏற்பாட்டைத் தெரிவித்து, அவர்களுக்கு வெற்றிலை பாக்கு, புகையிலை முதலியவற்றை அளிப்பார்கள். நிலச் சொந்தக்காரர்கள் கலியாணச் செலவுக்காக 4, 5 பறை நெல்லைக் கொடுத்து உதவுவார்கள்.

கலியாணங்களை ஏரவள்ளர்கள் திங்கட்கிழமைதான் நடத்துகிறார்கள். கலியாணம் நடக்கும் திங்கட் கிழமைக்கு முந்தின திங்கட்கிழமை மணமகனின் சகோதரியும் அவனுடைய உறவினரும் பெண்ணின் வீட்டிற்குச் சென்று, மணமகளின் பெற்றோர்களுக்கு ஒரு ரூபாயையும், பெண்ணிற்கு ஒரு பித்தளை மோதிரத் தையும் கொடுப்பார்கள், கலியாணம் நடக்கும் திங்கட் கிழமையன்று முன் சென்ற பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குச் சென்று பெண்ணிற்குப் புதுப்புடவை கட்டி அலங்காரம் செய்வார்கள். பெண் வீட்டார் அவர்களுக்கு விருந்தளித்த பின் பெண்ணை அழைத்துக் கொண்டு மண மகளின் குடிசைக்கு வருவார்கள். அங்கே கலியாண அழைப்பிற்கு இணங்கி வந்திருக்கும் எல்லோருக்கும் விருந்தளிப்பார்கள்.

விருந்து நடந்த ஒரு வாரங்கழித்து அடுத்த திங்கட் கிழமையன்று, மணமகனும் மணமகளும், மணமகள் வீட்டிற்குச் சென்று, அங்கே ஒருவாரம் தங்கிப் பிறகு மறுபடியும் மணமகனின் வீட்டிற்குத் திரும்பி விடுவார்கள். இதனோடு கலியாணச் சடங்குகள் முடி வடையும். தாலி கட்டும் வழக்கம் இவர்களிடை இல்லை. கலியாணத்தின் போது மணமகனுக்கு மாமனார் ஒரு விதமான பரிசோ, வேஷ்டியோ, பணமோ அளிப்ப தில்லை. ஆனால் கார்த்திகை மாதத்திலும் சங்கராந்தியின் போதும் மாப்பிள்ளையைத் தன் வீட்டிற்கு அழைத்து மாமனார் அவனுக்கு நல்ல விருந்திட்டு இரண்டு வேஷ்டி யையும், ஒரு உருமாலையையும் அளிப்பான்.

ஒரு விதவை, மனைவி தவறிப் போன ஒருவனைத்தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். அந்தக் கலியாணத்துக்கு ''முண்டைக் கட்டு'' என்று பெயர். இருவர்களுக்கும் ஏற்கெனவே குழந்தைகள் பிறந்து இருந்தால் கணவன் தன்னுடைய முதல் மனைவியின்

குழந்தைகளையும், இரண்டாம் மனைவியின் குழந்தைகளை யும், தங்களுக்கு இனிப் பிறக்கும் குழந்தையையும் வித்தியாசமின்றிக் காப்பாற்றுவதாகத் தன் ஜாதியாருக்குப் பிரமாணம் செய்து தர வேண்டும். விதவையைக் கலியாணம் செய்து கொள்பவன் விதவைக்கு ஒரு பித்தளை மோதிரமும், புடவையும் கொடுப்பான். மனைவி சரியாக நடக்க விட்டால் கணவன் அவளை விலக்கி வைத்து விடலாம்.

கருவுற்ற பெண் ஒருத்தி நாய், பூனை, பிற துஷ்ட ஜந்துக்களைப் பற்றிக் கனவு கண்டால், அவளை ஏதோ பிசாசு பிடித்திருக்கிறதென்று ஏரவள்ளர்கள் எண்ணு கிறார்கள். அப்போது ஒரு பேயோட்டியைக் கூப்பிட்டுப் பேயை ஓட்ட ஏற்பாடு செய்வார்கள். பேயோட்டி தரையில் அரிசிமா, மஞ்சள், கரி இவற்றினால் ஒரு பயங்கரமான கோலத்தைப் போட்டு, அதன் முன் கர்ப்பிணியை உட்கார வைத்து, பறையடித்துப் பாடு வான். ஏதோ மந்திரத்தை முணுமுணுப்பான். பிறகு ஒரு விளக்கை ஏற்றிச் சாம்பிராணிப் புகை போடுவான். ஒரு விளக்கை ஏற்றி அதை மூன்று முறை, கர்ப்பிணியின் முகத்தைச் சுற்றுவான். பிறகு அவளுக்கு ஆவேசம் உண்டாகும்படி பேயோட்டிச் சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்வான். சமைத்த சோறு, அவல், வாழைப்பழம், தேங்காய், கோழி இவற்றை அந்தப் பேய்க்குப் படைப்பார்கள். கர்ப்பிணி சத்தம் போடாமல் அமைதியாக இருந்தால் பேய் அவளை விட்டுப் போய் விட்டது என்று எண்ணுவார்கள். இதன் பிறகு ஓலையில் மந்திரத்தை எழுதி அதைச் சுருட்டிக் கட்டி கர்ப்பிணியின் கழுத்தில் அணியச் செய்வர்.

ஒரு கர்ப்பிணி வீட்டுக்குச் சற்று தூரத்தில் உள்ள ஒரு குடிசைக்குச் சென்று அங்கேதான் பிரசவிக்க வேண்டும். அவளது தாயோ, அல்லது வயதான

ஒருத்தியோதான் கர்ப்பிணிக்கு உதவியாக இருப் பார்கள். பிரசவமானதும் தாயையும், குழந்தையையும் குளிப்பாட்டி ஏழு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் நீராட்டி வேறு ஒரு குடிசையில் குடி புகுந்து ஐந்து மாதம் மறுபடியும் கர்ப்பிணி தீட்டுக் காப்பார்கள். இந்த ஐந்து மாதங்களிலும் அவள் மாமிசம் சாப்பிடக் கூடாது. அவளுக்கு மிளகு, இஞ்சி, பனை வெல்லம் இவற்றைக் கள்ளோடு கலந்து கொடுப்பார்கள். பத்தியமான உணவையும் அளிப்பார்கள். ஐந்து மாதங்கள் கழிந்த பின் மறுபடியும் நீரில் குளித்து வீடு புகுவாள். அதற்குத் தான் "சட்டி தொடுதல்" என்று பெயர். அன்று எல்லோருக்கும் விருந்தும் நடக்கும்.

ஏரவள்ளர்கள் இறந்தவர்களைப் புதைத்து, ஐந்து நாட்கள் தீட்டுக் காக்கிறார்கள் ஆறும் நாளன்று, இறந்தவனின் மகனோ, சகோதரனோ க்ஷவரம் செய்து கொண்டு குளித்து விட்டு, இறந்தவனின் ஆத்மா சாந்தி யடையச் சோறு, அவல், வாழைப்பழம்,தேங்காய், கோழி இவற்றை வைத்துப் பூசை செய்வான். வருஷத்திற்கு ஒரு முறை, ஜாதி ஜனங்களுக்கு ஒரு விருந்தும் நடத்துவான்.

ஏரவள்ளர்கள் ஹிந்து தெய்வங்களையே வழிபடு கின்றனர். காளி, முனி, கருப்பன், கன்னிமார் போன்ற கடவுள்களை வணங்குகின்றனர். சில மேனாட்டு மானிட சாஸ்திர ஆசிரியர்கள் இவர்கள் மதம் ஹிந்து மதமல்ல வென்று எழுதியிருப்பது தவறு. ஏரவள்ளர்களைக் கேட்டால் அவர்கள் தாங்களும் ஹிந்துக்கள்தான் என்று சொல்லுகிறார்கள். ஹிந்துக்களுடைய பேரையும் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

ஏரவள்ளர்கள், புன்செய்க் காடுகளை உழுது சாமை, ராகி, துவரை, சோளம், எள்ளு போன்றவற்றைப் பயிர்

செய்து வாழ்கின்றனர். இதுவே அவர்களின் பிழைப்பு. வைகாசி, ஆனி மாதத்தில் விதை விதைத்து, ஐப்பசி மாதம் வரை இவர்கள் விவசாயம் செய்கிறார்கள். மற்றைய மாதங்களில் காய்கறி பயிர் செய்வார்கள்; தோட்டத்தின் வேலியைப் பழுது பார்ப்பார்கள்; குடிசைகளைச் செம்மைப் படுத்துவார்கள்.

உழும் போதும், விதைக்கும் போதும், அறுவடையின் போதும் தவறாமல் காளிக்கும், முனிக்கும் பூசை போடும் வழக்கம் ஏரவள்ளர்களிடம் உண்டு. காளி, முனி போன்ற தெய்வங்களை வணங்குவதால் துஷ்ட மிருகங்கள் பயிரை அழிப்பதில்லை என்பது அவர்களுடைய நம்பிக்கை.

ஏரவள்ளர்கள் வேட்டையாடுவதில் தேர்ந்தவர்கள். காட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் அவர்கள் நன்கறிவார்கள். எங்கே துஷ்டமிருகங்கள் வசிக்கின்றன என்பதை மோப்பம் பிடித்தும், அடிச்சுவடு பற்றி அறிந்தும் யாத்ரீகர்களை எச்சரிப்பார்கள். இவர்கள் பத்துப் பதினைந்து பேர்கள் கூடி வேட்டையாடச் செல்வார்கள். கையில் கத்தி, வில், அம்புடன் சிலரும், பறை, தம்பட்டம் இவற்றைச் சிலரும், வலைகளைச் சிலரும் எடுத்துச் செல்வார்கள். பறையடித்து விலங்கை ஓரிடத்திற்குத் துரத்தி அதை மடக்கிச் சுடுவார்கள். அல்லது கத்தியால் வெட்டிக் கொல்லுவார்கள். முக்கியமாக முயல்கள், முட்பன்றி, காட்டுப் பன்றி இவற்றைத் தான் வேட்டையாடுகிறார்கள், ஏரவள்ளர்கள் குறிபார்த்து அம்பெய்வதில் நிகரற்றவர்கள். ஆகாயத்தில் பறவைகள் பறக்கும் போதே, அம்பெய்து கொல்லும் திறமை வாய்ந்தவர்கள.

இவர்கள் காலையில் சாமை அல்லது சோளம், புளி, உப்பு, மிளகாய் இவற்றைக் கலந்து கஞ்சி காய்ச்சி மறு

நாட்காலை அதை உண்கிறார்கள். மத்தியானம் ஒரு காய், பருப்பு, கொள்ளு, மற்றைய தானியங்கள் இவற்றைக் கலந்து தயார் செய்த உணவை உட்கொள்கின்றனர். ஆடு, கோழி, பன்றி, புறா, காடை போன்ற பிராணிகளின் மாமிசத்தையும் புசிக்கின்றனர், பிராமணர்கள், நாயர்கள், கம்மாளர்கள், இழுவர்கள் போன்ற ஜாதியார் கொடுக்கும் உணவை உண்கின்றனர், மண்ணான்கள், பாணர், பறையர், செருமான்கள் கொடுக்கும் சமைத்த உணவை ஏற்றுக் கொள்வதில்லை. சக்கிலியர், பறையர், செருமான் இவர்களைத் தொட்டால் ஏரவள்ளர்கள் குளித்துத்தான் வீடு புகுவார்கள். இவர்களிடமும் தீண்டாமை இருப்பது விந்தையல்லவா!

ஆண்களும், பெண்களும் சமவெளியில் வசிப்போரைப்போல உடை அணிகின்றனர். ஆண்கள் கச்சம் போட்டு வேஷ்டிகளைக் கட்டிக் கொள்கிறார்கள். மற்றொரு துணியால் மேல் உடம்பைப் போர்த்துக் கொள்கிறார்கள். வேலை செய்யும்போது, வெய்யிலுக்காகத் தலையில் துணியைக் கட்டிக் கொள்கிறார்கள். தமது தலைமயிரை நீளமாக வளர்க்கிறார்கள். ஆனால் எண்ணெய் தடவுவது கிடையாது. எல்லா ஆண்மகனும், மீசை வைத்திருக்கிறான். இப்போது ஒரு சிலர் கிராப்பும் செய்துகொண்டு நறுக்கு மீசையும் வைத்துக் கொள்கிறார்கள். பெண்கள் சாயம் போட்ட புடவையின் ஒரு பாதியை இடுப்புக்குக் கீழே உள்ளே வளைத்துக்கட்டி, மற்றைப்பாதியினால் மேல் உடம்பைப் போர்த்துக் கொள்கின்றனர். இவர்களும் தலைமயிருக்கு எண்ணெய் தடவி வாருவதில்லை. மயிரை எல்லாம் ஒரு பிடியாகப் பிடித்து நன்றாக முறுக்கிப் கொண்டை போட்டுச் செருகிக் கொள்கிறார்கள். இவர்கள் அதிக நகைகளை அணிவதில்லை. கழுத்தில் பாசி மணிகளால் செய்த சரம், காதில் பனை ஓலைச் சுருள், இவைதான் இவர்கள் அணியும் நகைகள்.

# 11. தொதவர்

இந்திய நாட்டில் மாத்திரமல்லாமல், உலகத்திலேயே உள்ளே படிங்குடிகளுள். நீலகிரி ஜில்லாவில் உள்ள தொதவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். உலகத்திலுள்ள மானிட வர்க்க நிபுணர்கள் பழங்குடிகளைப் பற்றி எழுதியுள்ள புத்தகங்களுள் கட்டாயம் தொதவர்களின் தனிச்சிறப்பைப் பற்றிச் சில வாசகங்கள் இல்லாத புத்தகமே கிடையாது. எனக்குத் தெரிந்த வரையில் இந்தியரல்லாத அயல்நாட்டு ஆசிரியர்கள் நூறுக்கதிகமான பேர் தொதவர்களைப் பற்றிப் பல புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிருர்கள். சிலர் அவர்களது பேச்சுக்களையும் பாட்டுக்களையும் ஒலித்தட்டுகளில் பதிவு செய்திருக்கிருர்கள். வர்ண சினிமாப் படங்களையும் எடுத்திருக்கின்றனர்.

இவ்வளவு பிரசித்தமான தொதவர்களின் ஜனத்தொகை ஐநூறுக்கும் குறைவே. ஆண்களும் பெண்களும் சேர்த்து இவ்வளவே. இவர்களைத் தவிர கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த தொதவர்கள் சுமார் இருநூறு பேருக்குள் இருக்கலாம். ஆனுல் முதலில் சொன்ன தொதவர்களின் வரலாறுகளைப்பற்றித் தான் இக்கட்டுரை எடுத்துரைக்கும்.

தொதவர்கள் தனிச் சிறப்பெய்தியிருப்பதற்குப் பல காரணங்களுண்டு. 1. இவர்கள் நீலகிரி ஜில்லாவில் உதக மண்டலம், கூனூர்த்தாலுகாக்களில் மாத்திரந்தான் காணப்படுகின்றனர். 2. இவர்கள் பேசும் மொழி வேறு



தொதவர் குடிசை



தொதவர்

யாரும் பேசுவதில்லை. அந்த மொழி தமிழ் நாட்டில் பேசப்படும் மொழி மாதிரி இல்லை. மொழியாராய்ச்சி யாளர் சிலர் அது பழந்தமிழின் திரிபாயிருக்கலா மென்றும், சிலர் அது கன்னடத்திலிருந்து வந்திருக்கலா மென்றும் ஊகிக்கின்றனர். 3. பஞ்சபாண்டவர்களைப் போலவும் பாலக்காட்டில் உள்ள நம்பூதிரிகளைப் போல வும் பல சகோதரர்கள் ஒருத்தியையே தமது மனைவியாகப் பாவித்து இல்லற வாழ்வை நடத்தி வருகின்றனர். 4. இவர்களது வாழ்க்கை, கலாசாரம் எல்லாம் எருமையை யொட்டியது. தொதவர்கள் எருமைகளை வழிபடுவதைப் போல, வேறு எவரும், வழிபடுவதில்லை. தொதவர்கள் எருமையைத் தெய்வமாகக் கருதிப் பல பூசைகளைச் செய்வதைப் போல ஹிந்துக்கள் தாம் புனிதமாகக் கருதும் பசு மாட்டை வணங்கி வருகிறார்கள். தொத வர்கள் எருமை மந்தைகளை வளர்த்து அதன் பாலைக் கறந்து விற்றே வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆகவே தொதவர்கள் தொகையில் சிறியவர்கள் எனினும் அவர்களது கலாசாரம், பண்பு, வாழ்க்கையெல்லாம் தனிப்பட்டவை.

இவர்களது பூர்வீக வரலாறு பற்றி 1906—ஆம் ஆண்டில் ரிவர்ஸ் என்பவரும், சமீப காலத்தில் கிரீஸ் இளவரசர் பீடர்ஸ் என்பவரும், ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த கோபிநாத் தாஸ் என்பவரும் பல ஆராய்சசிகளைச் செய்து, தொதவர்களின் பண்டை நாகரிகம், கலாசாரம் முதலியவற்றைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி வெளியிட் டிருக்கிறார்கள். ஆயினும் இவர்களுள், கோபிநாத் தாஸ் தவிர மற்றவர்களுக்கு இந்த நாட்டின் கலாசாரப் பண்பின் பரிசயம் போதாது. ஆதலால், அவர்கள் சொல்லியிருக்கும் பல விஷயங்கள் பொருத்தமற்றவையா யிருக்கலாம். தொதவர்களின் உண்மையான வரலாற்றை நாம் அறிய வேண்டுமானால், நமது நாட்டின் கலாசாரப் பண்பு, நாகரிகம் முதலியற்றை நன்கறிந்தவர்கள் இப்

பணியில் முனைய வேண்டும். தவிரவும் நமது நாட்டு மொழிகளிலும் நல்ல பயிற்சி இருக்க வேண்டும். நான் தொதவர்களைப் பல தடவைகளில் சந்தித்து அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றி விசாரித்தும் புத்தகங்களைப் படித்தும் சேகரித்துள்ள விஷயங்களைத் தமிழ் நாட்டார் படித்து உணர வேண்டுமென்று இக்கட்டுரையை எழுதத் துணிந்தேன்.

ஆனால் ஒரு விண்ணப்பம். எந்த ஒரு பூர்வீகக் குடியைப் பற்றி எழுதினாலும் பரம்பரையாக அவர்களிடம் இருந்து வரும் பல பழக்க வழக்கங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். தற்காலத்தில், படிப்பின் பயனாலும், பிற ஜாதியாரோடு சல்லாபம் செய்வதாலும் தொதவர்கள் தமது பல பழைய வழக்கங்களை விட்டிருக்கிறார்கள்; அல்லது அவை வழக்கத்திலிருந்தாலும், பிறர் தம்மை ஏளனம் செய்யக் கூடும் என்று அப்பழக்கம் வழக்கத்தில் இப்போது இல்லையென்றும் சொல்லலாம். இதில் ஒன்றும் தப்புக் கிடையாது. ஒரு வகுப்பாரைப் பற்றிப் பேசும் போது அவர்களது பண்டைப் பழக்கங்களைப் பிறர் கூறியபடி, நேரில் கண்டபடி எடுத்துரைப்பது நியாயம். அவை இப்போது வழக்கத்தில் இல்லாமலிக்கலாம், அந்தக் காரணத்தைக் கொண்டு அதைச் சொல்லாமலிருக்கலாகாது. இப்போது அப்பழக்கம் இல்லா விட்டால், அதைப் பற்றி அன்பர்கள் தக்க காரணங்கள் கூறி மறுப்போ விளக்கமோ எழுதலாம்.

தோற்றத்திலும் தேகக் கட்டிலும் நீலகிரித் தொதவர்கள் தென்னிந்தியாவில் வசிக்கும் மற்ற பழங்குடிகளைக் காட்டிலும் பல விதத்திலும் மாறுபட்டவர்கள். தொதவர்களுள் ஆண்கள் ஐந்து அடி ஏழு அங்குலம் உயரமும் பெண்கள் ஐந்து அடி ஒரு அங்குல உயரமும் உள்ளவர்கள். இவர்களின் உடம்பின் ஒவ்வொரு

உறுப்பும் சரியானபடி அமைந்திருக்கிறது. ஆண்கள் கட்டுமஸ்தான உடலுடையவர்கள். அவர்களுடைய தலை நீளமானது; உயர்ந்து வளைந்த மண்டை யோடுடையது. பொதுவாக நீண்ட முகமும், நீண்ட எடுப்பான மூக்கும் உடையவர்கள் அவர்கள்.

இவர்கள் சிவந்த தாமிர வர்ணமுடைய மேனி உடையவர்கள். பெண்களின் மேனி இன்னும் அழகான தாமிரப் பொன் நிறமானது எனலாம். ஆண்கள் முகத்தில் தடித்த அடர்த்தியான மயிர் வளர்ந்திருக்கிறது. தமது மீசையையும் தாடியையும் க்ஷவரம் செய்து கொள்ளும் வழக்கம் தொதவர்களிடம் இல்லை. ஆண் களுக்கு மார்பு, கை, கால் எங்கும் அடர்த்தியான மயிர் உண்டு. தொதவாகளுள் ஆண்கள் கம்பீரமான தோற்றமும், சுறுசுறுப்பான நடையும், உடலுறுதியும் உள்ளவர்கள். இவர்களது பலத்தையும் உடலின் லாகவத் தையும் அறிய விரும்புபவர்கள், அவர்கள் பலமும், முரட்டுத் தனமுமுள்ள எருமைகளைத் துரத்திப் பிடிக்கும் போது பார்க்க வேண்டும். அவர்கள் தமது உடம்பை எப்படித் தம் வசமாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் அந்த விளையாட்டின் போது விளங்கும். இவர்கள் தினம் ஒன்றுக்கு முப்பது மைல் தூரம் கால் நடையாக மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு சிறிதும் சலிப்பின்றி நடக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள்.

தொதவர்கள் புத்திசாலிகள். உலக விவகாரங்களை நன்கறிந்திருக்கிறார்கள். நாம் சொல்லும் விஷயங்களை எளிதில் அறிந்து கொண்டு நம்மைக் கேள்விகளும் கேட்கும் ஆற்றல் உடையவர்கள். நாம் கேட்கும் வினாக் களையும் எளிதில் கிரகித்துக் கொண்டு தக்க விடையையும் அளிக்கும் ஆற்றல் உடையவர்கள்.



தொதவர் குலப் பெண்

தொதவர்கள் எல்லோருமே தங்கள் ஜாதியைவிட மேலான ஜாதி வேறு கிடையாது என்ற நம்பிக்கையும், சுயமரியாதையும் நிறைந்தவர்கள். அவர்களது நடத்தையும் அப்படியேதான். பல்லைக்காட்டிக் கெஞ்சும் வழக்கம் கிடையாது. பிறரைக் கண்டு பயப்படுவதும், கூச்சப்படுவதும் கிடையாது. பொறுமையும், சாந்தமும், தன்னம்பிக்கையும், சிநேகபாவமும் அவர்களிடம் நாம் காணும் நல்ல குணங்களாகும்.

### வாழிடம்

தொதவர்கள் நீலகிரியில் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் பல குடிசைகளில் வசிக்கின்றனர். முக்கியமாகப் புல் விசாலமாக நிறைந்த பள்ளத்தாக்குகளினின்றும் எழும் பீட பூமிகளின் சரிவிலும், ஓடைகளின் அண்மையிலும் உள்ள கண்ணைக் கவரும் வனப்பு மிகுந்த சோலைகளிலே வசிக்கின்றனர். ஆனால் இப்போது தொதவர்களை நாம் உதக மண்டலத்தில் உள்ள கடை வீதிகளில் சாதாரணமாகக் காணலாம். அவர்கள் எருமைகளை வளர்த்துப் பெறும் பாலைக் கூட்டுறவுப் பால்விநியோகச் சங்கத்திற்கு விற்றுப் பணம் பெற்று அதுகொண்டு அரிசி, பருப்பு முதலிய பொருள்களை வாங்கிக் கொண்டு போகின்றனர்.

தொதவர்கள் வசிக்கும் கிராமத்திற்கு 'மத்' அல்லது 'மந்த்' என்று பெயர். அதைப் படுகர்கள் 'மண்ட்' என்று சொல்லுகிறார்கள். அந்தப் பெயராலேயே தான் தொதவர்கள் வசிக்கும் கிராமங்களை ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் 'தோடாமண்டு' என்று குறிக்கிறார்கள். ஒவ்வொரு மண்டிலும் ஆறு குடிசைகளுக்கதிகமிருக்காது; இரண்டு மூன்றும் இருக்கலாம். இந்த மத், மந்த், மண்ட். என்ற பெயராலேயேதான், தொதவர்கள் தமது பால் பண்ணைகளையும், ஈமச் சடங்குகளை நடத்தும் இடங்களையும் அமைக்கிறார்கள்.

தொதவர்களின் கிராமம், வனப்பு மிகுந்த சம வெளியில், சோலையினருகே ஒரு ஓடைக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் என்றேன். அங்குள்ள குடிசைகளைச் சுற்றிலும் ஒரு மதிலும் உண்டு. இம்மதில்களின் நடுவே, மனிதன் உள்ளே போவதற்கு மாத்திரம் சிறிய வழிகள் உண்டு. எருமைகள் அவற்றுள் நுழைந்து போக முடியாது. தொதவர்களின் தொழில் எருமையை வளர்த்துப் பால் கறந்து வியாபாரம் செய்வதுதான். அதைப்பற்றிப் பின்னால் விரிவாகச் சொல்வோம்.

ஒவ்வொரு கிராமத்திலும், தொதவர்கள் கறக்கும் பாலை வைப்பதற்காகத் தனியாக இரண்டு மூன்று குடிசைகள் உண்டு. இக்குடிசைகளைச் சுற்றியுள்ள மதில் சுவர்கள், கிராமத்தின் மதில் சுவரைவிட சற்று உயரமா யிருக்கும். இந்தப் பால் மடங்களுக்கப்பால் சமீபத்தில் எருமை மந்தைகளுக்கென்று ஒரு பட்டியும் இருக்கும். அதற்குத் தொதவர் பாஷையில் **'ஷ'** என்று பெயர். கன்று ஈன்ற எருமைகளை இரண்டு வாரங்கள் வரை வேறு ஒரு குடிசையில் வைத்துக் காப்பார்கள். அந்த குடிசைக்கு **'குஷ்'** என்று பெயர். சில கிராமத்திற்குப் பக்கத்தில் இரண்டு ஓடைகளும் இருக்கலாம். அப்படி இரண்டு ஓடைகளிருந்தால், அவற்றுள் ஓர் ஓடையின் தண்ணீரைப் பால் பண்ணையை ஒட்டிய பூசைக்கு மட்டுமே உபயோகப் படுத்துவார்கள். அந்த ஓடையை **'பாலிநீப'** என்று தொத வர்கள் சொல்லுகிறார்கள். அந்த ஓடை நீரை வேறு ஒருவரும் தொடக்கூடாது; அசுத்தப் படுத்தக் கூடாது. மற்றொரு ஓடையின் நீரைச் சமையலுக்கும், குளிப் பதற்கும், வீட்டு வேலைக்கும் உபயோகிப்பார்கள். அந்த ஓடையை **'அர்ஸ்நீப'** என்பர். ஒரு கிராமத்தில் ஒரே ஓடையிருந்தால், அதன் மேல் பாகத்தின் நீரை **'பாலிநீப'** என்றும், கீழ்ப்பாகத்து நீரை **'அர்ஸ்நீப'** என்றும் வரையறுத்து உபயோகித்து வருகிறார்கள்.

தொதவர்கள் கிராமங்களைச் சுற்றிலும் நல்ல காலடிப் பாதைகள் உண்டு. அந்தப் பாதைகளுக்கும் தனிப் பெயர்கள் உண்டு. அதனைத் தொதவர்கள் 'காலவல்'' என்று சொல்லுகிறார்கள். அது கால் வழி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாயிருக்கலாம். சில காலடிப் பாதைகளைப் பெண்கள் உபயோகிக்கக் கூடாது; ஆண்களே உபயோகிக்கலாம்.

தொதவர்கள் எருமைகளையெல்லாம் தெய்வீகப் பிறவிகளெனக் கருதி வணங்குகின்றனர். எருமைகள் நடப்பதற் கென்று தனி வழியுண்டு. அதில் பெண்கள் நடக்கக் கூடாது. பெண்களுக்கென்று தனிவழியுண்டு.

ஒவ்வொரு கிராமத்திலும் இவ்விதமாக இரண்டு வழிகள் உண்டு. எருமை நடக்கும் வழியை 'புனேத் **காலவல்'** அல்லது **'புணிதக் கால்வழி'** என்று சொல் கிறார்கள். இந்த வழியில் எருமைகள் செல்லலாம். அந்த எருமைகளைப் பராமரித்துப் பால் கறக்கும் தொத வனும் செல்லலாம். மற்றவர்கள் செல்லக் கூடாது.

மற்றொரு வழிக்கு **'மஜ்வத்திக் காலவல்'** என்று பெயர். தொதவர்கள் பால் மடத்திலிருந்து கொண்டு வந்து கொடுக்கும் தயிர், பால், மோர், நெய், முதலியவற்றை வாங்கிக் கொண்டு போகப் பெண்கள் இந்த வழியை உபயோகிப்பார்கள். மோருக்குக் கன்னடத்தில் 'மஜ்ஜிகை' என்று பெயர். மஜ்வத்திக் காலவல்' என்றால், மோர் வாங்கி வரப் போகும் வழி என்று பொருள் படும். மேலும் இந்த வழியில் பெண்கள் போகலாமென்றாலும் அதை அவர்கள் நினைத்த போதெல்லாம் உபயோகப் படுத்தக் கூடாது. மோர் வாங்கி வரும் நேரத்தைத் தவிர வேறு சமயங்களில் பெண்கள் இந்த வழியில் செல்லக் கூடாது. பெண்கள் பால் மடத்தின் பக்கம் சென்றால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடுமாம்.

தொதவர்களின் கிராமங்களுக்கு 'அர்ஸ்' என்று பெயர். அவரது குடிசை ஒரு உருண்ட பீப்பாயைக் குறுக்களவில் இரண்டாகத் துண்டித்தால் எப்படி இருக்குமோ. அப்படியிருக்கும். சென்ற உலக யுத்தத்தின் போது 'நிஸ்ஸன் குடிசை' என்ற குடிசைகளைத் தகரத்தினால் பிரிட்டிஷார் கட்டினார்கள். அதன் வடிவம் தொதவர்கள் குடிசையைப் போன்றது. ஆனால் தொதவர்களின் குடிசை மிகச் சிறிது. இக்குடிசைகளை மரங்களாலும், மூங்கிலினாலும், மலையில் விளையும் பிரம்பினாலும். புற்களாலும், அவர்கள் கட்டியிருக்கிறார்கள். அந்தக் குடிசைகள் எல்லாம் ஒரே மாதிரியாக இரா. அவற்றுள் பெரிதும் உண்டு, சிறிதும் உண்டு. குடிசை பெரியதாயிருந்தாலும், சிறியதாயிருந்தாலும் உள்ளே மக்கள் தடையின்றி உலாவ வேண்டிய இடமுள்ளதாய் சௌகரியமாக அமைந்திருக்கும். சாதாரணமாக ஒரு குடிசை 10 அடி உயரமும், 18 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்டிருக்கும். உள்ளே செல்ல ஒரு சிறிய வாயில் உண்டு. அது 32 அங்குலம் உயரமும், 18 அங்குல அகலமும் உள்ளது. உள்ளே போக வேறுவழி கிடையாது. இந்த வழியாய் உள்ளே போக வேண்டுமானால் குழந்தைகளைப் போல் மண்டியிட்டுத் தவழ்ந்துதான் செல்ல வேண்டும். இதன் கதவு மரத்தால் செய்யப்பட்டது. சிலர் கல்லையும் கதவுகளாக உபயோகிக்கின்றனர்.

குடிசையின் உள்ளே இரண்டு பாகங்கள் உண்டு. முன் அறையில் ஒரு பக்கத்தில் இரண்டடி உயரமுள்ள திண்ணையுண்டு. அங்கே உட்காரலாம். இரவில் படுத்துத் தூங்கலாம். அதற்கு எதிரிலே சமையல் செய்யும் இடமும் பாத்திரங்கள் வைக்கத் திட்டுக்களும் உண்டு. குடிசையின் முன் பாகத்தில் தரையில் ஒரு குழியுண்டு. அதில் தான் பெண்கள் நெல் குத்துவார்கள். அடுத்த

பாகத்தில் குடும்பத்தார் இரவில் படுத்துத் தூங்கு வார்கள்.

தொதவர்களின் பால்மடம் அவர்கள் வசிக்கும் குடிசையைவிட சற்றுப் பெரியது. இந்தக் குடிசையும் இரண்டு பாகங்களுடையது. பின் பாகத்தில் பால், தயிர், மோர், நெய் முதலியவற்றைப் பானையில் பத்திரப் படுத்தி வைப்பார்கள். முன் அறையில்தான் தொதவர் களின் 'பூசாரி' வசிப்பான். இந்த பால் மடம் தொத வர்கள் வசிக்கும் குடிசைகளுக்குச் சற்று தூரத்தில் இருக்கும்.

**தினசரி வாழ்க்கை**

எருமைகளைத் தெய்வமெனக் கருதி வளர்ப்பதும், அதன் பாலைக் கறந்து வியாபாரம் செய்வதுமே தான் தொதவர்களின் தொழில். ஆகவே அவர்களின் தினசரி வாழ்க்கை, எருமைகளை மேய்ப்பது, பாலைக் கறப்பது, பால் மடத்தில் அதற்குள்ள சடங்குகளைப் பண்டை முறைப்படி நடத்துவது போன்ற வேலைகள் நிறைந்தது. தொதவர்களுக்கு இதைத் தவிர வேறு வேலைகள் தெரியாது. படித்த ஒரு சிலர் உபாத்தியாயர்களாகவும், அலுவலகங்களில் சேவகர்களாகவும் வேலை செய்கிறார்கள். ஆனால் நூற்றுக்கு தொண்ணூறு பேர் எருமை மந்தைகளை வைத்து அதனால் தமது வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

ஒரு காலத்தில் நீலகிரி பீடபூமி முழுதும் தொதவர் களுக்குச் சொந்தமாயிருந்தது. அவர்களிடம் ஆயிரக் கணக்கான எருமைகளும் இருந்தன. படுகர்களும், ஆங்கிலேயர்களும் நீலகிரி மலைக்கு வருவதற்கு முன்பு, தொதவர்களே நீலகிரியை ஆண்டு அனுபவித்து வந்தார்கள். இன்றைக்கும் படுகர்கள், தொதவர்களுக்கு ஒரு சிறு கப்பம் கட்டி வருவதால் தொதவர்களுக்குத்

தான் நீலகிரியிலுள்ள பூமி முழுவதும் சொந்தம் என்பது தெரிய வருகிறது. அரசாங்கத்தாரும் தொதவர்களுக்கு அவர்களிடமிருந்து வாங்கி அனுபவித்து வரும் பூமிக்கு 'க்விட்ரென்ட்' கொடுத்து வருகிறார்கள்.

எருமைகளை மேய்க்க விசாலமான மேய்ச்சல் தரை அவசியம். அவர்களுடைய பூமிகளையெல்லாம் குடியேற வந்த படுகர்களும், அரசாங்கத்தாரும் பறித்துக் கொண்டு விட்டதால், எருமைகளை மேய்க்கப் போது மான மேய்ச்சல் தரையின்றித் தொதவர்கள் கஷ்டப் படுகின்றனர். அவர்களுடைய மேய்ச்சல் தரைகளில் இப்போது தேயிலைத் தோட்டமும், காப்பித் தோட்டமும் இருக்கின்றன. இப்போது அரசாங்கத்தார் தொதவர்கள் உருளைக் கிழங்கு பயிர் செய்ய ஒவ்வொரு தொதவருக்கும் ஐந்து ஏக்கர் வரை நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

தொதவர்கள் வழிபடும் எருமை ஒரு வகை. சாதாரண எருமை ஒரு வகை. வழிபடும் எருமையைப் 'புனித எருமை' என்று நாம் இனி அழைப்போம். இப் புனித எருமைகளைக் கவனித்து அவற்றிற்கு வேண்டிய வேலைகளைச் செய்து பால் கறக்கத் தொதவர்கள், தம்முள் சிலரை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் புனித எருமையைக் கவனிக்கவோ, பால் கறக்கவோ கூடாது. சாதாரண எருமைகளை மற்றைய தொதவர்கள் காப்பாற்றிப் பால் கறக்கலாம்.

காலையில் எழுந்ததும் பல் தேய்த்து முகங்கழுவித் தொதவன் தன் இரு கைகளையும் சேர்த்து, முகத்தின் முன் கூப்பிச் சூரியனை நோக்கி வணங்குவான். இதற்குத் தொதவர் பாஷையில் 'கை முத்தி' என்று பெயர். இப்படி வணங்கிய பின் தன் எருமைகளைக் கறக்கப் போவான்; அல்லது தயிர் கடைவான்.

காலையில் பால் பண்ணையில் வேலையைச் செய்தபின் எருமைகளை வெளியே மேயவிட்டு, தனது வேறு அலுவல்களைக் கவனிப்பான். எருமைகளைச் சிறுவர்களும் பார்த்துக் கொள்வார்கள். அப்போது தொதவன் காட்டிற்குச் சென்று விறகு, சுள்ளி பொறுக்கி வருவான். சாப்பிடுவதற்கு வேண்டிய இலைகளைச் சேகரித்து ஈர்க்கால் தைப்பான். இலைகளால் தொன்னை போன்ற கிண்ணங்களைச் செய்து அவற்றை நீரையும், மோரையும் பருகப் பயன் படுத்துவான். சிலர் சில மைல் தூரத்திலுள்ள நகரங்களுக்குச் சென்று தங்களுக்கு வேண்டிய அரிசி முதலிய சாமான்களை வாங்கி வருவார்கள்.

ஊரில் நாட்டாண்மை வகிக்கும் தொதவன், கிராமப் பஞ்சாயத்தில் உட்கார்ந்து பஞ்சாயத்துக்கு முன் வரும் குடும்ப விவகாரம், ஒழுக்கம் தவறிய குற்றங்கள் போன்றவற்றை விசாரித்து நியாயம் வழங்குவான். கிராமப் பஞ்சாயத்துக்கு ''நேய்ம்'' என்று பெயர். இது நியாயம் என்ற வார்த்தையிலிருந்து மருவி வந்திருக்கலாம்.

ஆண்கள் மேலே சொன்ன வேலைகளைக் கவனித்து வர, பெண்கள் தமக்குரிய வேலையைச் செய்வார்கள். நெல் குத்துவது முக்கியமான வேலை. இதைத் பெண்கள் தத்தம் குடிசைக்குள்ளேயே செய்வார்கள். பிறகு 'முர்ன்' என்ற முறத்தால் புடைப்பார்கள். 'கிப்' என்ற துடைப்பத்தால் குப்பை, உமி, தவிடு இவற்றைத் திரட்டி எடுத்து வைப்பார்கள். 'கிப்' என்பது குப்பை என்ற வார்த்தையிலிருந்து வந்திருக்கலாம். பெண்கள் வீட்டை எருமைச் சாணியால் மெழுகுவார்கள். பாத்திரங்களையும் எருமைச் சாணியாலேயே சுத்தம் செய்வார்கள். குடும்பத்தினரின் ஆடைகள் கிழிந்திருந்தால் அவற்றைத் தைப்பார்கள். தாங்கள் அணியும் 'புத்துக்குளி' என்ற போர்வை அழகு பெற அதில் பல வண்ண நூல்களால் கைவேலைப்

பாடுகள் செய்வார்கள். அப்படி நன்றாக வேலைப் பாடமைந்த புத்துக்குளியின் விலை ரூ. 30 முதல் ரூ. 80 வரை இருக்கும்.



காலமேல் பிடித்தி

பெரியவர்களைத் தொதவர் வணங்கும் முறை குறிப்பிடத் தக்கது. ஒரு ஊருக்கு வேறு ஊரிலிருந்து வயதான சொந்தக்காரரான ஒரு தொதவன் வந்தால், அவனை விட வயதில் சிறுவர்களான ஆண்களும், பெண்களும் அவனை எதிர் கொண்டழைத்து அவன் முன்பு மண்டி போட்டு உட்கார்ந்து கொள்வர். வயதிற் சிறியவர் முதிய தொதவனின் காலைத் தமது கையினால் பற்றித் தமது

நெற்றி வரை தூக்கி வணங்க வேண்டும். அம்மாதிரியே மற்றைக் காலையும் தூக்கி வணங்க வேண்டும். இந்தப் பழக்கத்திற்குத் தொதவர் பாஷையில் **"கால் மேல் பிடித்தி"** என்று பெயர். காலைப் பிடித்து மேலே தூக்கு என்று தமிழில் பொருள் சொல்லலாம். சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்கள் போல்தான் ஒலிக்கின்றன.

மாலையிலும் தொதவர்கள் வழக்கம் போல் எருமைகளைக் கறந்து, பட்டியில் அடைத்து அங்கே ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டுச் சூரியனை மறுபடியும் வணங்கு வார்கள். பிறகு சாப்பிட்டு விட்டுத் தூங்குவார்கள்.

**இரண்டு பிரிவுகள்**

தொதவர்களின் சமூகத்தில் இரண்டு முக்கியமான பிரிவுகள் உண்டு. தேர்த்தாள் என்பது ஒரு பிரிவு. தேவளி என்பது மற்றொரு பிரிவு. இந்த இரு பிரிவினருக்கும் தனித்தனி கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறார்கள். ஒன்று : இரு பிரிவினரும் ஒருவரோடு ஒருவர் மணஞ்செய்து கொள்ளக் கூடாது. ஒரு தேர்த்தாள் தொதவன் தேர்த்தாள் பெண்ணையும், தேவளித் தொதவன் தேவளிப் பெண்ணையும்தான் மணந்து கொள்ள வேண்டும். மேலே சொன்ன தேர்த்தாள், தேவளி பிரிவுகளில் பல உட்பிரிவுகளும் உண்டு. தேர்த்தாள் பிரிவில் உள்ள உட்பிரிவினரோடும் தேர்த்தாள் வகுப்பினரும் தேவளிப் பிரிவில் உள்ள உட்பிரிவினரோடு தேவளிப் பிரிவினரும் மணம் செய்து கொள்ளலாம்.

**எருமை பராமரிப்பு**

எருமைகளை வளர்த்து அவற்றினின்று கிடைக்கும் பால், தயிர், நெய் இவற்றை விற்றேதான் தொதவர்கள் அனுதிகாலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றேன்.

ஆனல் தொதவர்கள் எருமைகளை வழிபடுவதும், வளர்ப்பதும், பால் பண்ணையை நடத்தும் விதமும் தனிச் சிறப்புடையது. உலகத்தில் இந்த விஷயத்தில் அவர் களுக்குச் சரிசமானமாக வேறு எந்தப் பழங்குடியையும் ஒப்பிட முடியாது.

தொதவர்கள் எருமைகளை வளர்ப்பதையும் பால் கறப்பதையும் ஒரு தெய்வ வழிபாடெனக் கருதிப் பல சடங்குகளையும், வழிபாட்டு முறைகளையும் அமைத்துப் பல நூற்றுண்டுகளாக அவற்றை அனுசரித்து வரு கின்றனர்.

முன்னர், எருமைகளைத் தொதவர் புனிதமான எருமை சாதாரண எருமை என இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர் என்றேன். சாதாரண எருமைகளை ஒரு விதமான சடங்குமின்றி யார் வேண்டுமானலும் வளர்த்துப் பால் கறக்கலாம். அதன் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை எப்படி வேண்டு மென்ருலும் உபயோகிக்கலாம். சாதாரண எருமை களுக்கு **புதிர்** என்று பெயர்.

புனிதமான எருமையைத் தேவளித் தொதவர்களும், தேர்த்தாள் தொதவர்களும் **பஸ்திர்** என்று ஒரே பெயரால்தான் அழைக்கின்றனர். ஆனல் தேவளித் தொதவர் வளர்க்கும் புனித எருமைகள் எல்லாம் ஒரே வகுப்பைச் சேர்ந்தவை. அவற்றிற்கும் **பஸ்திர்** என்றுதான் பெயர். தேர்த்தாள் தொதவர்கள் வளர்க்கும் எருமைகள் பல வகுப்பைச் சேர்ந்தவை. பல வகுப்பைச் சேர்ந்த இப்புனித எருமைகளை எல்லாம் குறிக்கத் தேர்த்தாள் தொதவர்களும் அவற்றை எல்லாம் **பஸ்திர்** என்ற ஒரே பதத்தால்தான் அழைக்கிருர்கள். தேவளித் தொதவர் ஒருவகைப் புனித எருமையை வழிபடுவதால் அவர்களது பால்மட வழிபாடு அவ்வளவு விரிவானதல்ல. தேவளித்

தொதவர்களுள் பல வர்க்கங்கள் அல்லது உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு உட்பிரிவைச் சேர்ந்தவர்களும் ஒரு கிராமத்தில் வசிப்பார்கள். பஸ்தீரின் தயிரைச் சில முக்கிய மான கிராமங்களில்தான் கடைவார்கள். பால் மடத் திற்கு 'பாலி' என்று பெயர். பாலைக் கறந்து தயிரைக் கடைந்து பொதுவாகப் பால் மடத்தின் அலுவல்களைக் கவனிப்பவனுக்கு 'பாலிகர்த் மோக்' அல்லது 'பால் மடக் காவல் மகன்' என்று பெயர். அவனுக்கு பாலிகர்த் போல் அல்லது பால் காப்பவன் என்று மற்றொரு பெயரும் உண்டு.

சாதாரண எருமைகளும், புனித எருமைகளும் குடும்பங்களுக்கோ அல்லது தனி நபர்களுக்கோ சொந்த மானவை. அந்த வர்க்கத்தாரின் பொதுவான சொத்தல்ல. கிராமத்தில் பால்மடத்தில் வைத்துக் காப்பாற்றப்படும் எருமைகளெல்லாம் அந்தக் கிராமத்தில் வசிக்கும் குடும் பத்தின் சொத்து.

**பால் மடம்**

தேர்த்தாள் தொதவர் வகுப்பினர் நடத்தும் பால்மட ஏற்பாடு பல சடங்குகள் நிறைந்தவை. தேவளித் தொதவர் நடத்தும் பால் மடத்தை விட அதிக ஏற்பாடு களும், சடங்குகளும் நிறைந்தவை.

தேர்த்தாள் தொதவர்கள், ஒன்றுக்கு அதிகமான புனித எருமைகளை வளர்க்கிறார்கள். இப்புனித எருமை களோடு சாதாரண எருமைகளையும் வளர்க்கிறார்கள். ஒவ்வொரு தேர்த்தாள் உட்பிரிவிற்கும் ஒரு புனித எருமைக்கூட்டமுண்டு. இவ்வெருமைகளைப் பால் மடமான பாலி கர்த் மோக் அல்லது பாலி கர்த் போல் என்பவன்தான் கறப்பான். தேர்த்தாள் தொதவர்கள் மற்றொரு விசேஷ புனிதத் தன்மை வாய்ந்த ஒரு எருமைக் கூட்டத்தை வளர்க்கிறார்கள். அந்த எருமைகளுக்கு 'வுர் சுலிர்' என்று

பெயர். அவற்றை வளர்ப்பவனுக்கு **வுர் சால்** என்று பெயர். பால் பண்ணைக்கு **'வுர் சூலி பலி'** என்று பெயர். மற்ற புனித எருமைக் கூட்டத்தை வளர்ப்பவர்களுக்கும் **வுர் சூலிர்** எருமைக் கூட்டத்தை வளர்ப்பவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. வுர் சால் அல்லது பால் பண்ணைக்காரன் தேவளி வர்க்கத்தையாவது அல்லது தேர்த்தாள் வர்க்கத்தின் **மேல்கர்** உட்பிரிவையாவது சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

**வுர் சூலிர்** பால் பண்ணையின் சடங்குகள் சிக்கலானவை. **வுர் சாலேயும்** வெகு சிரேஷ்டமாகக் கருதுகிறார்கள். அதன் பண்ணைக்காரன் பல சடங்குகளையும் நியமங்களையும் செய்ய வேண்டும். சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கியும் நடக்க வேண்டும். தேர்த்தாள் வகுப்பினரின் பால் மடங்களெல்லாம் ஊருக்கு வெளியில்தானிருக்கும். அந்தப் பால் மடங்களுக்கு 'தீ' என்று பெயர். அங்கேதான் புனித எருமைகளின் பாலைக் கறப்பார்கள். இந்த 'தீ' பால் பண்ணைகளுக்கு அடுத்தாற் போல் மேய்ச்சல் தரை, எருமைகளை அடைக்கும் பட்டி, பால் மடம் எல்லாமிருக்கும்.

இந்தத் 'தீ'யின் அதிகாரியின் பெயர் **பாலோள்** அல்லது பாலாள் என்பதாகும். அவனுக்கு உதவி செய்யும் சிறுவனுக்கு **'கல்த் போக்'** என்று பெயர். இந்தத் 'தீ' தேர்த்தாள் வகுப்பினருக்குச் சொந்தம் என்று கருதப் பட்டாலும் அதன் பாலோள் **தேவளி** வகுப்பைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும்.

'தீ'யில் நடக்கும் சடங்குகள், வேறு கிராமப் பால் பண்ணையின் சடங்குகளைக் காட்டிலும் அதிகமானவை. **'வுர் சாலே'** விட 'பாலோள்' அதிகப் புனித தன்மை வாய்ந்தவன். பாலோளின் தினசரி வாழ்க்கை பல விலக்குகள் நிறைந்தது; கட்டுப்பாடுகளுக்கு அடங்கியது.

Y567.2
N83



அவனை அந்தப் பீடத்தில் அமர்த்த நடக்கும் சடங்குகளும் அநேகம். பால் பண்ணை, எருமைகள் இவற்றைப் பற்றிய சடங்குகளும் அநேகம். அதிக நேரம் நடக்கும். வெகு விமரிசையாகவும் நடக்கும்.

**ஆடை வகைகள்**

தொதவர்கள் குளிர் மிகுந்த நீலகிரியில் வசித்த போதிலும் மற்றவர்களைப் போல், குளிருக்கு அடக்கமாகக் கம்பளித் துணிகளை அணிவதில்லை. அவர்கள் பருத்தியாலான துணிகள்தான் அணிகிறார்கள்.

தொதவர்களுள் ஆண்கள் மூன்று விதமான ஆடைகளை அணிகிறார்கள். ஒன்று 'குமண்' என்பது. தமிழில் கோவணம் என்பதுதான் குமண் என்பது. இரண்டு தார்ப் என்பது. இது இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொள்கிறார்கள். மூன்று புத்துக்குளி. இதை ஆண்களும் பெண்களும் போர்வை போல் மேலே போர்த்துக் கொள்கிறார்கள். பெண்கள் தார்ப்பையும் புத்துக்குளியையுந்தான் அணிகிறார்கள். ஆண்கள் தார்ப் என்ற துணியை அரை வளைஞ்சான் கட்டுப் போல இடுப்பைச் சுற்றி வளைத்து துணியின் மேல் நுனியை இடுப்பின் இடது பக்கம் செறுகுவார்கள். தமிழ் நாட்டு மக்கள் எல்லோரும் இன்றைக்கும் இம்மாதிரி அரை வளஞ்சான் கட்டுக் கட்டித்தான் வாழ்கிறார்கள். ஆனால் மற்றைய மலைஜாதிகளும், பூர்வ குடிகளும் கச்சை போட்டுக் கட்டுவார்கள். தொதவர்கள் தமிழ் நாட்டாரைப் போலவே துணிகளை இன்றளவும் அணிந்து வருவதால் அவர்கள் பூர்வ காலத்திலிருந்து தமிழ் நாட்டாரோடு ஒன்றாக வாழ்ந்திருக்க வேண்டும். அல்லது அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

தொதவர்கள் 'தார்ப்'பை முழங்காலுக்குக் கீழ் வரும்படி அணிவதில்லை. 'தார்ப்' அதிக அகலமாயிருந்தால் அதை மடித்துத் தூக்கிக் கட்டிக் கொள்கிறார்கள்.

800 009
135231



புத்துக்குளியொடு இன்றைய தொதவ இளைஞர்



இன்றைய தொதவ மகளிர்

ஆனால் தொதவப் பெண்கள் தார்ப்பைத் தம் மார்பினை மறைக்கும்படி அக்குள் வரை சுற்றிக் கட்டிக் கொள்கிறார்கள். குழந்தைகள் ஆணும் பெண்ணும் பருவ மடையும் வரை இந்த தார்ப்பைச் சாதாரணமாக மேலே போர்த்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் உபயோகிக்கும் துணி கதர். மகாத்மா காந்தி கதர் என்ற பெயர் கொடுப்பதற்கு முன்பாகத் தொதவர்கள் கையால் நூற்றுத் தறியில் கையால் நெய்த முரட்டு நூல் துணிகளையே உபயோகித்து வந்தனர். அதைத் துப்பட்டி என்று சொல்லலாம். இந்தத் துப்பட்டி களையெல்லாம் கோயமுத்தூர், சேலம் ஜில்லாவிலுள்ள கைக்கோளர்கள், தேவாங்கச் செட்டியார்கள் நெய்து நீலகிரிக்குக் கொண்டு வந்து தொதவர்களுக்கும் மற்றவர் களுக்கும் விலைக்கு விற்பது வழக்கம். அதைத்தான் தொதவர்கள் வாங்கி அணிகிறார்கள்.

தொதவர்கள் அணியும் 'தார்ப்' துணி பலவகைப் பட்டது. மிகப் பெரிது மூன்று முழநீளமும் இரண்டரை முழ அகலமும் உள்ளது. சிறியது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமுள்ளது. பெரிய துணியைப் பெண்களும், ஆண்களும் உபயோகிப்பார்கள். சிறியதைச் சிறு பெண்களும், பையன்களும் உபயோகிப் பார்கள்.

துப்பட்டித் துணியை வாங்கி அதை இரண்டு மூன்றாக மடித்து அதில் பல வர்ண நூல்களைக் கொண்டு அலங்காரமான நூல் வேலைகளைச் செய்கிறார்கள். இதற்குத் தான் புத்துக்குளி என்று பெயர். ஒரு புத்துக்குளி மூன்று முழ அகலமும் ஐந்து முதல் ஆறு முழ நீளமும் உள்ளது. மடித்த துப்பட்டிகளைப் பல வர்ண நூல்களைக் கொண்டு சித்திரவேலை செய்வார்கள்; கரை தைப்பார்கள். கண்ணைக் கவரும் வகையில் பல வர்ண

நூல்களைக் கொண்டு முந்தாணி (முன்தானை) அல்லது தலைப்பைச் சித்தரித்துத் தைப்பார்கள். தொதவர்கள், கோத்தர்கள், படுகர்கள், எல்லோரும் இப்புத்துக்குளியை அணிகின்றனர். எல்லோருக்கும் புத்துக்குளியை அலங்கரிக்கும் வேலையும் தெரியும். தொதவர்களுள் இந்த வேலையைப் பெண்கள் தான் செய்கின்றனர். எவ்வளவுக்கெவ்வளவு ஒரு புத்துக்குளி பல வர்ண நூல்களால் அலங்காரமாகத் தைக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் விலையும் அதிகம். அதனை அணிபவனுடைய மதிப்பும் அந்தஸ்தும் அந்தத் துணியின் மதிப்பையும், வேலைப்பாட்டையும் பொருத்தது. இப்போது ஒரு நல்ல புத்துக்குளி வேணுமென்றால் ரூபாய் ஐந்நூறுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும். இப்புத்துக்குளியைக் கோத்தர்களும் செய்து தொதவர்களுக்கு விற்பதும் உண்டு.

வேலைப்பாடமைந்த இப்புத்துக்குளியைத் தொதவர்கள் விசேஷ நாட்களான கலியாணம், பண்டிகை நாட்களில் கம்பீரமாக அணிந்து கொள்வார்கள். தினசரி அணிந்து கொள்ளும் புத்துக்குளி சாதாரணமானது. யாராவது இறந்து விட்டால் துக்கம் கேட்கப் போகும் போதும் புத்துக்குளியை அணிந்து செல்வார்கள்.

புத்துக்குளியில் உள்ள வேலைப் பாடுகள் பலதரப்பட்டவை. நேரான கோடு, வளைந்த கோடு, கோணங்கள் கொண்ட கோடு, சதுரங்கள், வட்டங்கள், மயில்கண்கள், மிருகங்கள், தானியங்கள் இவற்றையெல்லாம் புத்துக்குளியில் பல வர்ண நூல்களால் கோத்தர்களும், தொதவப் பெண்களும் செய்கிறார்கள். சிறுபிராணிகளில் அணில், பாம்பு, தானியங்களில் அரிசி இவைகளை விசேஷமாகப் புத்துக்குளி நூல் வேலையில் பார்க்கலாம். இப்புத்துக்குளித் தொழில் அனுதி கால

மாக உள்ளது என்று சொல்கிறுர்கள். அணில் சித்திரத்தை அணில் புகூர் என்றும், பாம்புச் சித்திரத்தை பாம்புப் புகூர் என்றும் இரண்டரிசி சித்திரத்தை எண்டங்கி புகூர் என்றும், மூன்றரிசி, நான்கரிசி, ஐந்தரிசி சித்திரங் களே முண்டஸ்க் புகூர், நான்காஸ் புகூர், ஐஸ்ஜாஸ் புகூர் என்றும் சொல்லுகிறுர்கள்.

## நுண்கலேகள்

தொதவர்களிடம் நுண்கலேகள் அவ்வளவாக இல்லே என்பது உண்மைக்குப் புறம்பானது. அவர்களிடம் மூன்று விதமான நுண்கலேகளேக் காணலாம். ஒன்று பாட்டுக்களேக் 'கவனம்' செய்வதில் (இயற்றி இசைப்பது) தொதவப் பெண்களும் ஆண்களும் கெட்டிக்காரர்கள். இரண்டாவதாக மரத்தில் கலேத்திறன் மிக்க சிற்சில சாமான்களேயும் செய்கின்றனராம். அவற்றை நான் பார்க்கும் படியான வாய்ப்பு இதுவரை ஏற்படவில்லே. மூன்ருவது புத்துக் குளியைப் பல வண்ண நூல்களேக் கொண்டு கையால் தைப்பது.

தொதவர் சமூகத்தில் புத்துக்குளி தைப்பதில் தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு அதிக கௌரவம் உண்டு. நூல் வேலே செய்வது சாதாரணம் என்று நாம் கருதிய போதிலும் பொறுமையுடனும், சந்தோஷத்துடனும் பல நாட்கள் கை நோகக் கண்பூத்துப் போக நூல் வேலே செய்தல் வேண்டும். ஒரு புத்துக்குளியைப் பார்த்தால் நாம் அதைச் செய்தவரின் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதன் வேலேப்பாடு நமது கவனத்தை ஈர்க்கிறது. அது கையால் செய்யப்பட்டதா அல்லது தறியில் நெய்யப்பட்டதா என்று ஐயுறும்படி இருக்கிறது. தொதவர்கள், கோத்தர்களின் முன்னேற்றத்தில் அக்கறை யுள்ள சமூகநலத் தொண்டர்களும் அரசாங்கத்தாரும் கூட்டுறவு முறையில் இப்புத்துக்குளிக் கைத்தொழிலே

ஆதரித்து இப்பூர்வீகக் குடிகளின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தலாம். மத்திய அரசாங்கத்தார் நியமித்துள்ள குடிசைத் தொழில் போர்டு இதில் அக்கறை கொண்டு இப்புத்துக்குளிக் கைத்தொழிலைத் தக்க முறையில் திருத்தியமைத்துப் படுதாக்கள், மேஜை விரிப்புகள், மெத்தை விரிப்புகள், தலையணை உறைகள் போன்றவைகளைச் செய்வித்து விலையாக்கி இப்பூர்வீகக் குடிகளுக்கு உதவி செய்யலாம்.

இந்தப் புத்துக்குளித் தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. தொதவர்களும் கோத்தர்களும் மற்றவர்களைப் போல் சட்டையும் கோட்டும் போட ஆரம்பித்து விட்டார்கள். ஆதலால் புத்துக்குளிக்கு அவ்வளவு கிராக்கி இல்லை. இது ஒரு பூர்வீகக் குடிகளின் தனிச்சிறப்பு வாய்ந்த கைத்தொழிலாதலால் அரசாங்கத்தார் உடனே தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, இப்புத்துக்குளி குடிசைத்தொழிலுக்கு ஆதரவளிக்க வேண்டியது அவசியம்.

**சகுனம் — மந்திரம்**

தொதவர்கள் சகுனம் பார்க்கிறார்கள். சில பறவைகளையும், மிருகங்களையும் கண்டால் அபசகுனம் என்றெண்ணுகின்றனர். **கார்ப்புள்** என்ற கருங்குயிலைக் கண்டால் அது அபசகுனமாம். ஒரு தொதவன் ஒரு வேலை நிமித்தமாகப் போகும்போது இக்கார்ப்புள் வலமிருந்து இடம் போனால் 'அபசகுனம்; செல்லும் காரியம் கை கூடாது' என்று எண்ணித் தொதவன் வீடு திரும்புவான். ஆனால் இதே கார்ப்புள் இடமிருந்து வலம் போனால் நல்ல சகுனமாம். ஹிந்துக்கள் காகம் வலமானாலும், கருடன் இடமானாலும் நல்ல சகுனம் என்று எண்ணுகிறார்கள்.

சிறு குழந்தைகள் மூச்சுவிடும் போது மார்பு குழிந்தாலும், விலாவில் வலியுண்டானாலும், கண்ணில் ஏதேனும் விழுந்தாலும், வெட்டுக் காயம் பட்டாலும், பாம்பு கடித்தாலும் உத்காரன் மந்திரம் போடுவான். பாம்பு கடித்தால் ஒரு பெண்ணின் தலைமயிரைக் கயிருகத் திரித்து, அதனுல் பாம்பு கடித்த அவயவத்தில் மூன்றிடங்களில் கட்டுவார்கள். மந்திரவாதி ஒரு தடியைக் கொண்டு கடிபட்ட இடத்தை அடித்து ஏதோ மந்திரத்தை முனகுவான். கட்டு மூன்று நாட்கள் வரை அப்படியே இருக்கும். தினமும் மந்திரவாதி மூன்று தடவை மந்திரம் போடுவான். பாம்பு யாரைக் கடிக்கிறதோ அவர் எக்காரணங் கொண்டும் நீரோடையைத் தாண்டக் கூடாது. அவசியமானுல் அவரைப் பிறர் தூக்கி நீரோடையைத் கடந்து மறு கரையில் சேர்க்கவேண்டும்.

எருமைகளைத் தாக்கும் துஷ்ட மிருகத்தின் வாயைக் கட்ட அவர்களுக்கு மந்திரம் தெரியும். மந்திரித்த ஒரு ரக்ஷையையும் எருமையின் கழுத்தில் கட்டிவிடுவார்கள். அந்த ரக்ஷை எருமையின் கழுத்திலிருக்கும் வரை அதற்கு ஒருவிதமான தொந்தரவும் துஷ்ட மிருகங்களால் ஏற்படாதாம்.

தொதவர்கள் சாதாரணமாகத் தமது தலைமயிரைக் கத்தரிப்பதுமில்லை; தமிழ் நாட்டார் போல் முடிபோடுவதுமில்லை. ஆனுல் சிறுவர்கள் தலையின் நடுவில் முன் பாகத்தில் உள்ள மயிரை விட்டு விட்டு. மற்றைய பாகம் முழுவதையும் க்ஷவரம் செய்து கொள்கிருர்கள். சில விசேஷ காலங்களில் பெரியவர்களும் க்ஷவரம் செய்து கொள்கிருர்கள்.

சிரைத்த மயிரைத் தொதவர்கள் பத்திரமாக ஒரு குழியில் போட்டுப் புதைப்பார்கள்; அல்லது அடர்ந்த புதரில் போட்டு விடுவார்கள். மயிரைக் காகங்கள்

எடுத்துச் செல்லக் கூடாதாம், வெட்டின நகங்களையும் அவ்வாறே நிலத்தில் புதைத்து விடுவார்கள். எருமை அவற்றைத் தின்னுமலிருக்கவே இவ்விதம் செய்கின்றனர்.

**கடாப்பலி**

வருஷத்தில் ஒரு தடவையாவது தொதவர்கள் ஒரு எருமைக் கடாக்கன்றைக் கொன்று, அதன் மாமிசத்தைச் சாப்பிடும் பழக்கமுண்டென்று சில மேனுட்டு ஆசிரியர்கள் எழுதியிருக்கிருர்கள். இந்தச் சமயத்தில் தான் மாமிசத்தைத் தொதவர்கள் சாப்பிடுகிருர்கள். மற்றைய சமயங்களில் மாமிசத்தை எக்காரணங் கொண்டும் தொடமாட்டார்கள். எருமைக்கடாக் கன்றைப் பலியிடும் சடங்கு மிக மிகச் சிறப்பு வாய்ந்த தாகும். அதற்கும் இடம் நாள் எல்லாம் பார்த்துத்தான் செய்வார்கள்.

**பிராயச்சித்தச் சடங்கு**

தொதவர்கள் ஏதாவது குற்றங்கள் செய்தால் அதற்குப் பிராயச்சித்தம் போல் சில சடங்குகளை நடத்து கின்றனர். அவை ஒவ்வொன்றுக்கும் தனிப்பெயர் உண்டு. பிராயச் சித்தம்செய்து கொள்பவன் எருமைக் கன்றையும், துணியையும், வெள்ளி மோதிரத்தையும் தானமாகக் கொடுக்க வேண்டும். பால் வெண்ணெய் மோர் நெய் திருடுதல், பகலில் ஒரு பெண்ணொடு கூடிப் பால் மடத்துக்குள் போவது, ஒரு பண்டிகை நாளன்று சுற்றத்தாரோடு சண்டையிடுதல், பால் மடத்தில் சண்டை போடுதல், தீட்டுடன் பால் மடத்திற்குள் போவது. பால் மடத்தின் விசேஷ நாட்களில் எருமையை விற்றல் போன்ற குற்றங்களைச் செய்பவன் ஒரு எருமைக் கன்றையோ துணியையோ தானம் செய்ய வேண்டும்.

**கர்ப்பிணிச் சடங்கு**

குழந்தைகள் பிறப்பதற்கு முன்பு, தாய் கர்ப்பிணியா யிருக்கும் போது சில சடங்குகளைத் தொதவர்கள் நடத்து கிறார்கள். ஒரு பெண் கருத்தரித்த ஐந்தாம் மாதத்தில் இரண்டு சடங்குகள் நடக்கின்றன. ஒன்றுக்குப் பெயர் **'ஊர்வத்புமி'.** கிராமத்தை விட்டு வெளியே போகிறோம் என்பது அதன் பொருள், இதில் 'ஊர்வத்' என்பதில் 'ஊரைவிட்டு என்ற தமிழ்ப் பதம் ஒலிக்கிறது. மற் றொன்று **'கைதூத்துப்புமி'** அல்லது கையில் சூடு வைப்பது. கைதூத்து என்பதில் கை தீய்த்தல் என்ற தமிழ்ப் பதம் ஒலிக்கிறது. புமி என்ற பதம் போகிறோம் என்ற பதத்தின் சுருக்கமாயிருக்கலாம். கர்ப்பிணி கிராமத்தை விட்டுத் தனியே வெளியில் ஒரு குடிசையில் வசிக்க வேண்டும். அப்போது புருஷனும் அங்கே சென்று சில சுள்ளிகளைக் கொளுத்தி அவள் கையில் சூடு வைப்பான்.

இதை அமாவாசை அன்று நடத்துவார்கள். அவளுடைய புருஷன் இல்லாவிடில் அவளது சகோதரனோ, வேறு ஆண் உறவினர்களோ வந்து அக்குடிசையை வழக்கப்படி கட்டுவார்கள். அதில் இரண்டு அறைகள் உண்டு. ஒரு முழ நீளமுள்ள நான்கு மூங்கில் குழாய்களில் புருஷன் ஒரு ஓடையினின்றும் நீரைக் கொண்டு வந்து வைப்பான். இக்குழாய்களின் இரண்டின் பெயர் எர்தாத்பர். 'எர்தாத்பர்' என்றால் புனிதமான பாத்திரம் என்று பொருள்படும். எர்தாத்பர் இரண்டையும் எடுத் துக்கொண்டு போய் புருஷன், இரண்டு வயதுள்ள ஒரு பெண் எருமைக் கன்றின் முதுகின் நடுவில் அதன் இடது பக்கத்தில் ஒரு எர்தாத்பர் பாத்திரத்திலிருக்கும் நீரை ஊற்றுவான். அதே நீரை மற்றொரு எர்தாத்பர் பாத் திரத்தில் பிடிப்பான். பிறகு கர்ப்பிணியின் கையில் இரண்டு இலைகளைக் கொடுப்பான். அவள் அவற்றால் ஒரு தொன்னையைச் செய்து அதில் புருஷன் மூன்று தடவை



கருவுற்ற ஏழாம் மாதத்தில் காட்டுக் குடிசையில்
மனைவியும் கணவனும்
பெண் விளக்கைப் பார்க்கிறாள்

ளர்தாத் பாத்திரத்திலிந்து ஊற்றும் நீரைத் தொன்னை யோடு தனது நெற்றி வரை தூக்கிப் பின் குடிப்பாள். பிறகு அக் குடிசையின் வாயிற்படியில் தலையை வைத்துக் கும்பிடுவாள். அதன் பிறகு நெருப்பில் ஒரு குச்சியைக் கொளுத்தி, தனது இரண்டு கைகளின் மணிக்கட்டுகளிலும் கட்டை விரலுக்கு அடியிலும் சூடு போட்டுக் கொள் வாள்.

இச்சடங்குகளின் உட்கருத்தை ஒரு தொதவனும் சொல்லவில்லை. பிறக்கும் ஆண் குழந்தை பால் கறக்கும் தொழிலில் ஈடுபட வேண்டும். பால் கறப்பதற்குப் பல மான மணிக்கட்டும், கட்டை விரலும் அவசியம். இம்மாதிரி மணிக்கட்டிலும், கட்டை விரலின் அடியிலும் சூடு போட்டுக் கொண்டால் அவன் சலியாது, கை விரல்கள் வலியாது கறக்கலாம் என்று தொதவர்கள் இம்மாதிரி செய்யலாம். மற்றொரு காரணமும் இருக்கலாம். இப்படிச் சூடு போடுவதால் பிரசவமும் கஷ்டமில்லாமல் ஏற்படுமென்றும் தொதவர்கள் எண்ணு கிறார்கள் போலும்.

கர்ப்பம் தரித்த ஏழாம் மாதத்தில் 'புர்சத்புமி' என்ற சடங்கு நடக்கிறது. புர்சத்புமி என்றால் வில்லும் அம்பும் தொடுகிறோம் என்பது பொருள். இது அமாவாசைக்கு முதல் நாள் மாலையில் நடக்கும். ஊருக்கு வெளியில் ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள காட்டிற்குக் கர்ப்பிணியும், அவளது கணவனும் போவார்கள். பலகணவர் இருப்பின் எந்தப் புருஷன் வில்லையும் அம்பையும் தன் மனைவிக்குக் கொடுக்க இஷ்டப்படுகிறானோ அவன் மாத்திரந்தான் செல்வான். பிறகு இருவரும் அக்காட்டிலுள்ள ,பூவ்' மரத்தின் கிளையை வெட்டி அதனின்றும் ஒரு வில் செய்து அத்துடன் தமது உறவினர்கள் கூடியிருக்கும் இடத்திற்கு வந்து சேருவார்கள். பிறகு புருஷனும் பெண்சாதியும் சில முதியோர்களுக்குக் கால் மேல் படுத்து நமஸ்காரம்

செய்வார்கள். பிறகு புருஷன் மனேவிக்கு வில்லையும் அம்பையும் சில மந்திரங்களை உபதேசித்துக் கொடுப்பான்.

இந்த புர்சத்புமி சடங்கு தொதவர்களுக்குள் மிகவும் முக்கியமானது. குழந்தையின் தகப்பன் யார் என்பதை நிர்ணயிக்கும் சடங்கு இது. எந்தப் புருஷன் தன் மனேவிக்கு புர்சத்புமி அதாவது வில்லும் அம்பும் கொடுக்கிருனே அவனேதான் தகப்பன் என்று தொதவர்கள் எண்ணுகிருர்கள்.

மேலே கூறிய சடங்குகள் நடந்த பின் கர்ப்பிணி தன் குடிசைக்கு வந்து அங்கேயே பிரசவிப்பாள். பிரசவிக்கும் போது புருஷனும், வயதான ஒரு மாதும் அங்கிருந்து பிரசவத்தை நடத்துவார்கள். பிரசவம் நடந்த மூன்ரும் நாள் குழந்தையொடு தாய் மறுபடியும் ஊருக்கு வெளியில் இருந்த குடிசைக்குப் போய் அங்கே சில சடங்குகளைச் செய்வாள். அங்கேயே ஒரு மாத காலமளவும் தன் கணவனேடும், தனக்குப் பிரசவத்தின் போது உதவி செய்த பெண்ணேடும் வசிக்க வேண்டும்.

**குழந்தைச் சடங்கு**

பிறந்து நாற்பது நாட்களுக்கப்புறம் முகந்திறக்கும் சடங்கு ஒன்று நடக்கும். ஆண் குழந்தையைத் தகப்பன் காலையில் பால் மடத்திற்கு எடுத்துச் செல்வான். அதன் முன் நின்று இருவரும் வணங்குவார்கள். தகப்பன் குழந்தையைக் இறக்கி அதன் நெற்றி பால் மடத்தின் வாசல் படியின் மீது படும்படி செய்வான். பிறகு எருமைகள் இருக்கும் இடத்திற்குக் குழந்தையை எடுத்துக் கொண்டு போவான். அங்கே குழந்தையின் முகத்தை மூடியிருக்கும் துணியை விலக்கி அதன் மீது சூரிய வெளிச்சம் விழும்படி செய்வான்.

பெண் குழந்தையாக இருந்தால் தாயார் அதை எடுத்துக் கொண்டு பெண்கள் தயிர் வாங்கிக் கொணடு வர ஏற்பட்டிருக்கும் கல் சுவர்களின் வழியாகப் பால் மடத்தருகே வந்து குழந்தையின் முகத்தின் மீது மூடி யிருக்கும் துணியை விலக்குவாள்.

குழந்தையின் முகத்தைத் திறக்கும் சடங்கின் உட் கருத்து என்னவென்றால் அதனல் திருஷ்டி, கண்படுதல் ஏற்படாமல் இருக்குமாம்.

**வேறு சில சடங்குகள்**

தொதவர்களுள் பல சடங்குகளுண்டு என்பதையும் அவற்றுள் சிலவற்றைப் பற்றியும் முன்னமேயே எழுதி யிருக்கிறேன். இங்கு வேறு சிலவற்றைக் குறிப்பிடு கிறேன்.

ஹிந்துக்கள் தம் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பது வழக்கம். அதற்கு நாமகரணம் என்று பெயர். குழந்தையின் முகத்தைத் திறந்த பிறகு தொதவர்கள் தமது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டு விழா செய்து, விருந்தும் நடத்துவார்கள். ஆண் குழந்தைக்குத் தாய் மாமனும், பெண் குழந்தைக்கு அத்தையும் பெயர் வைப்பார்களாம். ஹிந்துக்களைப் போலவே குறித்த காலத்தில் குழந்தைக்குச் சோறு ஊட்டு விழா, காது குத்தல் போன்ற சடங்குகளையும் தொதவர்கள் விமரிசை யாக நடத்துவது உண்டு.

**மட் நாள்**

ஹிந்துக்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்றால், திதி, நட்சத்திரம், யோகம் போன்ற வற்றைப் பார்த்து நல்ல நாளாயிருந்தால் மாத்திரம்

அவ்வேலையைத் தொடங்குவார்கள். தொதவர்கள் அவ்விதமே சில நாட்களையும், எண்களையும் புனிதமாக எண்ணி அன்று எப்படி வாழ்க்கையை நடத்த வேண்டுமோ அப்படி நடத்துகிறார்கள். ஆனால் இப்புனித நாட்கள் கிராமத்துக்குக் கிராமம் வேறுபடும். புனித



தொதவர் விருந்து

பால் மடங்கள் எல்லாம் ஒரே நாளைப் புனித நாளாகக் கொண்டாடாது. ஒவ்வொரு கிராமத்திற்கும் வெவ்வேறு புனித நாட்களுண்டு. தொதவர்களுள் ஒவ்வொரு வர்க்கத்தினரும் வெவ்வேறு நாட்களைப் புனித நாட்களாகக் கொண்டாடுகின்றனர். அவர்கள் கொண்டாடும் புனித நாளன்று, அவர்கள் ஒரு தொழிலையும் செய்ய

மாட்டார்கள். இந்தப் புனித நாட்களுக்குப் பல பெயர் களுமுண்டு. மட் நாள் அல்லது கிராம நாள் என்பது ஒன்று. 'பாலி நாள்' அல்லது பால் மடத்து நாளென்றும் சொல்லுகிருர்கள். ஒரு தொதவன் எந்தக் கிழமையன்று இறக்கிருனே, அந்தக் கிழமையை அவனது குடும்பத்தார் ஒரு புனித நாளாகக் கருதுவார்கள். அதற்கு 'அர்பட்ஜ்' நாள் என்று பெயராம்.



தொதவர் வட்டமாகக் கூத்தாடுதல்

மட்நாளை ஒரு கிராமம் முழுவதும் கொண்டாடும். இந்த 'மட்' நாளை ஏறக்குறைய எல்லாக் கிராமத்தாரும் ஒரே தினத்தில் கொண்டாடுகிருர்கள்.

மட் நாளில் சில வேலைகளைச் செய்யக் கூடாது. அன்றைய தினம் யாருக்கும் விருந்து அளிக்கக் கூடாது. அன்று இறந்தவர்களுக்குச் சடங்குகள் செய்யக் கூடாது. அன்று கிராமத்திலிருந்து ஒரு சாமானையும் வெளியே எடுத்துக் கொண்டு போகக் கூடாது. பெண்கள் கிராமத்தை விட்டு வெளியே போகக் கூடாது. வெளியூரிலிருந்தும் பெண்கள் அந்தக் கிராமத்துக்குள் வரக் கூடாது. அன்று ஒருவரும் தலைமயிர் வெட்டிக் கொள்ளக் கூடாது. நகத்தைக் கிள்ளி எறியக் கூடாது. துணி துவைக்கக் கூடாது. வீட்டை எருமைச் சாணி கொண்டு மெழுகக் கூடாது. சாதாரணச் சமையல் மாத்திரந்தான் செய்யலாம். பாலோடு சோறு சமைக்கக் கூடாது. 'தூக்கித்கர்' என்ற கல்லைத் தொட்டு விளையாடும் விளையாட்டை விளையாடக் கூடாது. பால் பண்ணைக் காரன் கிராமத்தை விட்டு வெளியே போகக் கூடாது. அந்தக் கிராமத்தை விட்டு வேறு கிராமங்களில் குடியேறக் கூடாது. எருமைகளையும் வேறு கிராமத்திற்கு ஓட்டிக் கொண்டு போகக் கூடாது. இன்னும் பல விலக்குகள் உண்டு. ஆனால் அவசியமான போது இந்த விலக்குகளை மீறி நடக்கத் தோதவர்கள் பல பரிகாரங்களை அனுஷ்டிக்கின்றனர்.

புனித நாளன்று கிராமத்தில் வியாபாரம் செய்யக் கூடாது என்பது ஒரு விலக்கு. இந்த விலக்கை மீறி ஒவ்வொரு சமயத்தில் நடக்க வேண்டியிருக்கும். அப்போது தோதவன் புனித நாளுக்கு முந்தின நாள் பணத்தைக் கொண்டு போய் கிராமத்துக்கு வெளியில் ஓரிடத்தில் புதைத்து வைப்பான். அப்புனித நாளன்று கட்டாயமாக ஏதாவது வாங்க வேண்டியிருந்தால், அப்போது கிராமத்திற்கு வெளியே புதைத்திருக்கும் பணத்தை எடுத்து வேண்டிய சாமானை வாங்குவான். அது போல ஒரு பெண் மற்றொரு கிராமத்திற்குப் போக வேண்டுமானால் விடியுமுன் கிராமத்தை விட்டு வெளியே

போகலாம். அதே மாதிரி வெளியூரிலிருந்து ஒரு பெண் கிராமத்திற்கு வரவேண்டுமானால் சூரியன் மலை சாய்ந்த பிறகுதான் வர வேண்டும். இவ்விதிகளை மீறி நடந்தால் கிராமத்திற்கும், எருமைகளுக்கும் பலவிதமான தீங்குகள் ஏற்படும் என்று பயந்து தொதவர்கள் இப்புனித



பால் பண்ணை விழாவில் களித்தல்

நாட்களில் செய்யத் தகாத வேலைகளைச் செய்ய மாட்டார்கள்.

### திருமண முறைகள்

தொதவர்கள் தங்களது குழந்தைகளுக்கு இரண்டு மூன்று வயதிலேயே மணம் செய்விக்கின்றனர். ஒரு

தொதவன் தன் மகனுக்கு மணம் செய்விக்க எண்ணினல் மகனின் மாமன் அல்லது அத்தை மகளை ஏற்பாடு செய்வான். பையனின் தகப்பன், பெண்ணின் பெற்ருேர் களைக் கண்டு மணப் பேச்சு நடத்தி எல்லாம் அனுகூல மாக முடிந்தால் இரவில் அவர்கள் வீட்டில் தங்கி, மறு



கல்யாணத்தில் கால் கும்பிடுதல்

நாள் காலை வீடு திரும்புவான். சில நாட்கள் கழித்துத் தகப்பனும், மகனும் தாடர்ப் என்ற ஒரு துணியை எடுத்து கொண்டு பெண் வீட்டிற்குச் சென்று அதைப் பெண் ணுக்குக் கொடுப்பர். பிறகு பையன் பெண்ணின் தகப்பனுருக்கும், தாயாருக்கும் கால் மேல் படுத்து முறைப்படி வணங்குவான். பிறகு அந்த தாடர்ப் துணியைப் பெண்ணுக்குக் கொடுப்பான். அன்று இரவு தகப்பனும், மகனும் பெண்ணின் வீட்டில் தங்கி

விட்டு மறுநாள் பெண்ணைத் தம் வீட்டிற்கழைத்துச் செல்வார்கள். சில சமயங்களில் பெண் 15 வயதாகும் வரை தன் பெற்றோர்கள் வீட்டிலேயே வசித்து வருவாள். கலியாணம் நிச்சயமானது முதல், பெண்ணுக்குப் பத்து வயதாகும் வரை அவளது புருஷன் ஒவ்வொரு வருஷமும் ஒரு தாடர்ப் துணியை இரண்டு தடவை கொடுக்க வேண்டும். பத்து வயதுக்கு மேல் புத்துக்குளி என்ற துணியைக் கொடுப்பான்.

### ஒரு மனைவி — பல கணவர்

ஒரு பெண்ணை எல்லாச் சகோதரர்களும் சம உரிமையுடன் தமது மனைவி போல் பாவித்து அனுபவிக்கும் வழக்கம் தொதவர்களிடையே பல வருஷங்களாக இருந்து வருகிறது. இப்போது இந்தப் பழக்கம் குறைந்து வருவதாகச் சொல்லுகிறார்கள். ஒரு பெண ஒரு ஆண மகனை மணந்தால் அவள் தன் கணவனின் சகோதரர்கள் எல்லோருக்குமே மனைவியாவள். கலியாணமாகும் போது இருக்கும் சகோதரர்களும், கலியாணத்திற்குப் பிறகு பிறக்கும் சகோதரனின் மனைவியைத் தம் மனைவி போலப் பாவிப்பர். இப்படிப் பாவிக்கும் உரிமையைத் தொதுவர்கள் சமூகம் ஏற்கிறது.

'ஒருத்திக்குப் பல கணவர்' என்ற மண முறையைச் சாதாரணமாக ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் அனுசரிப்பதுடன், ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த ஏறக்குறைய ஒரே வயதுள்ள சிற்றப்பன், பெரியப்பன் பிள்ளைகளும், ஒரு பெண்ணைப் பொதுவில் மனைவியாகப் பாவிக்கும் வழக்கமும் உண்டு.

தொதவர்களின் மணமுறையும் இல்லற வாழ்க்கை முறையும் பல வகைப்பட்டன. ஒரு குடும்பத்தில் நாலைந்து சகோதரர்கள் இருந்தால் அவர்கள் எல்லோரும் தனித்

தனியே ஒரு பெண்ணை மணம் செய்துகொள்கின்றனர். மணமான பிறகு இந்தச் சகோதரர்கள் எல்லோரும் பெரிதும் தமது மனைவிகளைச் சம உரிமையுடன் அனுபவிக்கின்றனர். இதனை ஆங்கிலத்தில் பாலிஜைனி Polygyny என்கின்றனர்.



தோடர் இளைய தம்பதியர்

## தொரஸதி

அடிக்கடி ஒரு தொதவன் தன் மனைவியை வேறு ஒருவனோடு சென்று வசிக்க அனுப்பி விடுவான். அவன் மனைவியை ஏற்றுக் கொள்பவன் பெண்ணின் முதல் கணவனுக்கு அவன் கேட்கும் எருமைகளைக் கொடுக்க வேண்டும். 'தொரஸதி' என்று இதனைக் கூறுவர்.

### விவாக ரத்து

தொதவர்களிடை விவாகரத்து உண்டு. மனைவி அசடாயிருந்தாலும், சோம்பேறியாயிருந்தாலும் ஒரு தொதவன் அந்த விவாகத்தை ரத்து செய்யலாம். மனைவி மலடாயிருந்தாலும் அல்லது வேறு ஆண்களோடு காதல் கொண்டு கூடினாலும் ஒரு தொதவன் மணத்தை ரத்து செய்ய முடியாது. புருஷன் நோயாளியாயிருந்தால் பெண் விவாகத்தை ரத்துச் செய்து கொள்ளலாம் பெண் வேறு புருஷர்களோடு கூடி வாழ்ந்தால் அக்காரணத்திற்கு அவளை விலக்கி வைப்பதுமில்லை; இழிவாக நடத்துவதுமில்லை.

### ஈமச்சடங்கு

தொதவர்கள் ஈமச்சடங்குகளை அதிக விமரிசையாக நடத்துவார்கள். முதலில் சவத்தை ஒரு பாடையில் வைத்து அதை ஒரு தேரில் வைத்து ஊருக்கு வெளியில் உள்ள சுடுகாட்டிற்கு இழுத்துச் செல்வார்கள். அவர்கள் சவங்களைப் புதைப்பதில்லை; எரிக்கிறார்கள். தொதவர்களுள் ஒரு சாவு ஏற்பட்டால் அதற்கு அக்கம் பக்கத்து ஊரிலுள்ள தொதவர்கள், பெண்கள் சகிதம் வருவார்கள். தொதவர்களுள் ஒருவன் இறந்தால் அவனுடைய அந்தஸ்துக்குத் தக்கவாறு பல எருமைகளைப் பலியிடுவார்கள். பெண்கள் அப்படிக் கொன்ற எருமைகளின் கொம்பை வணங்குகிறார்கள். கொல்லப்படும் எருமை, புனித எருமை வர்க்கத்தைச் சார்ந்ததாயிருக்கும். பெண்கள் துக்கம் விசாரிக்க வந்தால், எல்லோரும் ஒன்று கூடி ஒருவர் தலையை மற்றொருவர் தலையோடு சேர்த்துத் துக்கம் கொண்டாடுவார்கள். (படம். பக். 122) ஒரு பெண் இறந்தால் அவளுடைய சில சின்னங்களை வைக்க ஒரு குடிசையைக் கட்டுவார்கள். அதே மாதிரி ஒரு ஆண் மகன் இறந்தால் அவனுடைய சின்னங்களையும் ஒரு தனிக் குடிசையில் வைப்பார்கள்.

**இன்றைய இழிநிலை**

தொதவர்களுக்கு 'ஆள்' என்ற பெயரும் உண்டு. 'ஆள்' என்பது தமிழ் வார்த்தைதான். ஆண்மை நிறைந்தவன் என்பது பொருள். தொதவர்களும் தங்களைப் பற்றி அப்படியேதான் எண்ணுகிறார்கள்



சாவில் தலைமுட்டித் துக்கம் காத்தல்

என்றும் தங்களின் மிக்கார் ஒருவருமில்லை என்பது அவர்களது எண்ணம் என்றும் சொன்னேன். ஆனால் இந்த ஆள்களது நிலை வருந்தத் தக்கதாயுள்ளது.

சென்ற ஐம்பது வருஷங்களாகவே தொதவர்களின் ஜனத்தொகை குறைந்து வருகிறது. 1901—ம் வருஷ ஜனகணிதப்படி 805 பேர் இருந்தனர். இப்போது இருப்பது 490 தொதவர்கள்தான். இவர்கள் இவ்வாறு குறைந்து போனதற்குத் தொதவர்களிடை, உள்ள தீராத மேகவியாதி தான் காரணம். மேக நோயினுல் கஷ்டப் படும் தொதவர்கள் நூற்றுக்கு ஐம்பது பேர் என்ருல் அது மிகைபடக் கூறியதாகாது. பெரும்பாலான பெண்கள் மலடிகளாயிருக்கின்றனர். சிசுக்கள் பிறந்த ஒரு வருஷத்திற்குள் இறப்பதும் அதிகம். இவர்கள் ஜனத்தொகை குறைவதற்கு ஒரு காரணம் தொதவர் களுள் பிறக்கும் பெண் குழந்தைகளேப் பிறந்தவுடனேயே கொன்று விடும் பழக்கம் இருந்து வந்ததாம். அவ்வழக்கம் இப்போது மறைந்து விட்டது என்றே சொல்லலாம்.

கள் குடிப்பது ஓரளவுக்குத் தொதவர்களிடை உண்டு. எருமை மோரோடு ஸ்பிரிட்டைக் கலக்கித் திருட்டுத்தனமாகச் சிலர் சாப்பிடுவது இன்றும் இருக் கிறதாம்.

அவர்களது எண்ணிக்கை குறைந்து போவதற்கு அவர்களின் மணமுறையும், ஆண்பெண் உறவு முறையும் மற்ெருரு காரணமாக இருக்கலாம் என்று சொல்பவர் உண்டு. அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. முக்கியமாக ஆங்கிலேயர்கள் நீலகிரியில் குடியேறியதி லிருந்துதான் தொதவர்கள் மேக வியாதிகளுக்கு உள்ளானுர்கள். இவர்களேப் போன்ற மணமுறையை அனுசரிக்கும் மற்ற வகுப்பினர் எண்ணிக்கை குறை யாததே இதற்குச் சான்று. தொதவர்களின் சந்ததி வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது மற்ெருரு வழக்கமு முண்டு. பருவமடையாத தொதவப் பெண்களே தேக்கிழ வர்க்கத்தைச் சேர்ந்த தொதவன் கூட வேண்டு

மென்ற கெட்ட வழக்கம் இன்றளவும் மறைமுகமாக நடக்கிறது என்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கட்டுப்பாடின்றி வாழ்ந்து, ஒருவன் மனைவியை மற்றவன் அபகரித்தோ, விலை கொடுத்தோ வாங்குவது கட்டிக் கொண்ட புருஷர்கள் நீங்கலாகப் பெண்கள்



**கோயில் அருகில் தோடர்**

வேறு காதலரோடு கூடி வாழ்வது, அம்மாதிரியே ஆடவர்களும் தமது மனைவியிருக்கப் பிறபெண்டிரொடு கூடி வாழ்வது, ஒருத்தியைப் பல ஆண்கள் தன் மனைவி போல் பாவித்து வாழ்வது இன்றும் இவை போல் அவர்களுள் இருந்து வரும் புராதன பல இல்லற வழக்கங்களே அவர்கள் சந்ததி பெருகாததற்குக் காரணங்களாயிருக்கலாம்.

அரசாங்க நிர்வாகத்தால், தொதவர்களுக்கு நிலத்தை யொட்டிச் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன் காலத்தில் நீலகிரி முழுதும் தொதவர்களின் சொத்தாக இருந்தது. அரசாங்கத்தார் தொதவர்களின் நிலங்களை எடுத்துக் கொண்டதனுல் விளைந்த சங்கடங்களை எடுத்துக் கூறினுல் அது ஒரு கதை போல் வளரும். எனினும் அதைப் பற்றி இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின்பு, 1843-ம் வருஷத்தில் கிழக்கிந்திய கம்பெனியார், தொதவர்கள் பூமிகளை யெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு அவர்கள் கண்ணைத் துடைக்கத் தற்காலிகமாக பட்டாக்களைக் கொடுத் தார்கள். அவற்றிற்குத் Toda Patta 'தொதவர் பட்டாக்கள்' என்று பெயர். இந்தப் பட்டாக்கள், தொதவர்களுக்கு சாசுவதமான ஒரு உரிமையையும் அளிக்கவில்லை. அவர்கள் இந்த நிலங்களில் தமது எருமைகளை மாத்திரம் மேய்க்கலாம். இப்படி அவர்களின் உபயோகத்திற்காகக் கொடுத்த பூமியின் விஸ்தீரணம் 2948 ஏக்கர்கள்தான். இதற்காகத் தொதவர்கள் கொஞ்சம் வரியும் கொடுத்தார்கள், பிறகு தொதவர்கள் தான் நீலகிரி பீட பூமிக்குச் சொந்தக்காரர்கள் என்பதை அங்கீகரித்து அவர்களிடமிருந்து ஆங்கிலேயர் வசப் படுத்திக் கொண்ட பூமிகளுக்கெல்லாம் வருஷம் 'ஈடு' என்று ரூபாய் 150 கொடுத்தார்களாம்.

பிறகு 1882—ம் வருஷத்தில் அமுலுக்கு வந்த சென்னை காடு சட்டத்தில் 33—வது பிரிவுப்படி தோடப் பட்டா பூமிகளெல்லாம் காட்டு இலாகாவின் ஆளுகைக்குக் கீழ் வந்தது. 1884—ம் வருஷத்தில் காட்டிலாகாவினர், தொதவர்கள் அப்பூமிகளில் உள்ள மரங்களை வெட்டக் கூடாது என்றும், கூரை வேய வேண்டிய ஓலைகளை, புற்களைக் காட்டு இலாகாவினர் உத்தரவின்றி வெட்டக் கூடாது என்றும் மேய்ச்சல்

தரையில் உள்ள புற்களை எரிக்கக் கூடாது என்றும் இன்னும் பலவாறு கட்டுப் படுத்தினார்கள். பிறகு 1893-ம் வருஷம் ஏப்ரல் 1—ந் தேதி வெளி வந்த சர்க்காரின் விளம்பரப்படி அரசாங்கத்தாரே தொதவர்களின் பட்டா நிலங்களை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பை ஏற்றனர். அதே விளம்பரத்தில் தொதவர்கள் விவசாயத்



கோயில் கட்டக் கல்தூண் நடுதல்

திற்காக வேண்டிய பூமிகளுக்கு நீலகிரி ஜில்லா கலெக்டரே பட்டா கொடுக்கலாமென்றும் கண்டிருந்தது.

அரசாங்கத்தார் தொதவர்களின் முன்னேற்றத்திற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் தொதவர்களுக்கு நன்மையை உண்டாக்கின என்பதில்

ஐயமில்லை. ஆனால் 1948—ம் வருஷத்திலிருந்து தொதவர்கள் தமது உரிமைகள் எல்லாம் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன என்றும் அவற்றைத் தடுத்து நிறுத்தத் தங்களுக்குப் போதுமான சக்தியில்லையென்றும் புகார் செய்தார்கள்; கிளர்ச்சியும் செய்தார்கள்.

இங்கு, இந்தியா உரிமையடைந்த பிறகு இந்திய அரசு நில உரிமைகளைப் பற்றி ஏற்படுத்திய சட்டங்களின்படி, தொதவர்கள் மாதிரி ஜமீன்தார்களும் மிராசுதார்களும் மற்றவர்களும் தங்களது அபரிமிதமான பூமியை இழந்ததை நாம் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த முறையிலேயே அரசு பல உத்திரவுகளைப் பிறப்பித்தது. ஜி. ஓ. 1624/48 ஏப்ரல் 2, 1948—படி நீலகிரி கலெக்டர் ஒவ்வொரு தொதவனுக்கும் விவசாயத்திற்காகச் சிறிதளவு தொகைக்குப் பத்து வருஷ காலத்துக்கு நிலத்தை அனுபவிக்கப் பட்டா கொடுக்கலாம். ஜி. ஓ. எம். எஸ் 3098 டெவலப்மெண்ட் ஜூன் 8-ந் தேதி 1949—ன்படி ஏற்கெனவே விவசாயம் செய்துவரும் தொதவர்களுக்கு அதிகமாக 154 ஏக்கர் பூமி குத்தகைக்கு விடப்பட்டது. இன்றைய தொதவர் வாழ்க்கை நிலை இதுவே.

தொதவர்களின் உரிமையிழந்த இந்த இழிநிலை மேம்பாடடைய வேண்டுமானால் அவர்களது சமூகப் பொருளாதார கலாசாரத் துறைகளில் அவர்களுக்கேற்ற தேவையான நல்ல திட்டங்களைப் போட்டு அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

**நோயற்ற வாழ்வு பெற**

தொதவர்கள் ஜனத்தொகை குறைந்து வருவதற்குக் காரணம் அவர்களிடம் பரவியுள்ள மேகநோயே. இதைப்பற்றி இந்திய ஊழிய சங்கத்தார் அரசாங்கத்

துக்கு மேக நோய்ப் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டி ஒரு நகரும் வைத்தியசாலை வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர். அதன்படி அரசாங்கத்தாரும் சென்ற மூன்று வருஷங்களாகக் கிராமம் கிராமமாக மோட்டார் வண்டியில் வைத்தியர்களை அனுப்பி மேக நோய் உள்ளவர்களுக்கு ஊசி போட்டு வருகின்றனர்.



தோடர் கோயில்

இதற்கு முதலில் தொதவர்கள் ஒத்துழைப்பு சுலபமாகக் கிடைக்கவில்லை. கொஞ்சம் எதிர்ப்பும் இருந்தது. சென்ற மூன்று வருஷங்களாகச் சிகிச்சை செய்து வந்ததில் தொதவர் பெண்களின் மலட்டுத் தன்மைப் போய் 1935-ம் வருஷத்தில் முப்பது குழந்தைகளைப் பெற்றனர். இதனால் தொதவர்களிடை ஒரு புதிய உணர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டாவது

அவர்களுடைய இல்லற வாழ்க்கை மணமுறை இவற்றிலும் சீர்திருத்தம் வேண்டும். இது ஒரு சிக்கலான விஷயம். இதற்கு என்ன வழி என்பதைத் தொதவர்களும் எண்ணி ஒரு யோசனை சொல்ல முன் வருவதில்லை. மற்றவர்கள் சொல்வதையும் அவர்கள் கேட்பதில்லை. ஆயினும் படித்த சில தொதவர்கள் இத்துறையில் சீர்திருத்தங்கள் அவசியம் என்று எண்ணிய போதிலும் அவர்களுக்குச் சமூகத்தில் இன்னும் போதிய செல்வாக்கு ஏற்படவில்லை. தொதவர்களிடை அனுதி காலமாக இருந்து வந்த மணமுறைகள் பலவும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருகின்றனவென்றாலும் உண்மையில் அவை இன்னும் சில கிராமங்களிலும் பழக்கத்திலிருந்து தான் வருகின்றன. ஆகவே இப்போது சில தொதவர்களிடை காணப்படும் சீர்திருத்த மனப்பான்மைக்கு அனுகூலமான ஒரு சூழ்நிலையைப் பிற தொதவர்களிடையேயும் பொது நல ஊழியர்களும் அரசாங்கத்தாரும் சீர்திருந்திய தொதவர்களின் உதவிகொண்டு இந்தப் பணியைச் செவ்வனே செய்ய இயலும்.

## முன்னேற்றும் வழி

'தம் வாழ்க்கை முறை மாறவேண்டும்; தாம் திருந்த வேண்டும்' என்ற எண்ணத்தைத் தொதவர்களிடம் வளர்க்க அவர்களுக்குப் போதிய கல்வி வசதிகளைக் கொடுக்க வேண்டும். அவர்கள் பள்ளியில் உபாத்தியாயர்களாகத் தொழில் செய்வோர் அவர்களின் பூர்வீகம், சரிதம், கலாசாரம் அவர்களது மனப்பான்மை போன்றவைகளை நன்கறிந்து அவற்றில் சிறந்த அம்சங்களை மாத்திரம் எடுத்துப் போதித்து அவர்களுடைய நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற வேண்டியது அவசியம். இந்தத் துறையிலும் இந்திய ஊழியர் சங்கத்தார் தொதவர்களுக்கென்று நிர்காஜிமண்டு என்ற

விடத்தில் (உதக மண்டலம் மைசூர் ரஸ்தாவில் ஏழு மைலுக்கப்பால் உள்ள இடம்) ஒரு பள்ளிக் கூடத்தை 1952-ம் வருஷம் மே மாதத்திலிருந்து நடத்தி வருகின்றனர். இதற்காக அரசாங்கத்தாரிடமிருந்து இரண்டு ஏக்கர் பூமியை வாங்கி அதில் சுமார் 20,000 ரூபாய் செலவில் பள்ளிக்கூட கட்டிடங்கள் அமைத்து, சுமார் நூறு தொதவ கோத்தப் பழங்குடிக் குழந்தைகள் இரு பாலருக்கும் உண்ண—உடுக்க—இருக்க வசதியளித்துப் படிப்பும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

தொதவர்கள் அனாதி காலமாக எருமை வளர்ப்பதையே தம் முக்கியத் தொழிலாகக் கொண்டு இன்றும் அத்தொழிலையே செய்து வருகின்றனர். ஆனால் இப்போது மேய்ச்சல் தரையின்மையாலும், ஏற்ற முறையில் பால் பண்ணைகளை நடத்திப் பால் கொடுக்கும் எருமைகளின் தரத்தை உயர்த்த வழி தெரியாமையாலும் தொதவர்கள் தாழ்வுற்றிருக்கின்றன்ர். அரசாங்கத்தார் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக ஒரு பால் விநியோகிக்கும் சங்கத்தை நிறுவித் தொதவர்களுக்குப் பல வகையில் உதவி செய்ய வேண்டும். போதுமான மேய்ச்சல் தரைகளை ஒதுக்க வேண்டும். எருமைகளுக்கு வரும் வியாதிகளைக் கவனிக்க வைத்திய வசதி, ஒழுங்கான நவீன முறையில் எருமைகளுக்குத் தீனி போடுவது, வளர்ப்பது, பால், வெண்ணெய், தயிர், மோர் இவற்றைச் சுகாதார முறையில் கையாளுவது, பத்திரப்படுத்தி விநியோகிப்பது போன்ற வசதிகளைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவற்றின் வழியாகத் தொதவர்களுக்கு அளிக்கவேண்டும். ஆனால் தொதவர்கள் எல்லோருமே இதில் ஈடுபட வேண்டுமென்பதில்லை. ஆரம்பத்தில் விருப்பமுள்ளவர்கள் வந்தால் அதுவே போதுமானதாகும். பின்னர் அதுவே எல்லாத் தொதவர்களையும் அணைத்து வளர்க்கும் அமைப்பாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

தொதவர்களுக்கு வேளாண்மையே தெரியாது என்று ஒரு புகார் இருக்கிறது. இது ஒரு விதத்தில் உண்மை தான். தமக்குச் சொந்தமான பூமிகளைத் தொதவர்கள் சாதாரணமாக வேறு விவசாயிகளுக்குக் கொடுத்துப் பயிர் செய்கின்றனர். தொதவர்கள் முன்னேற வேண்டு மானால் அவர்களும் விவசாயத்தில் ஈடுபடவேண்டும். உருளைக்கிழங்கு, சீமைக் காய்கறிகள் தோட்டம் போடலாம். இவற்றிற்கு வேண்டிய உதவிகளை அரசு கூட்டுறவு முறையில் தொதவர்களுக்கு அளிக்கலாம்.

தொதவர்கள் ஒரே இடத்தில் வசிப்பதில்லை. வெவ் வேறு கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் இடங்களையே கேந்திரமாக வைத்துக் கொண்டு பால் பண்ணைத் தொழிலையோ, எருமைகளை மேய்க்கும் தொழிலையோ, விவசாயத் தொழிலையோ மேற் கொள்ளலாம்.

தொதவர்களுக்குச் சில கைத்தொழில்களும் தெரியும். புத்துக்குளிக்கு அலங்காரமாகக் கரைகளை அமைப்பது, தலைப்புத் தைக்கும் வேலை தொதவர்களுடைய பெண் களுக்குத் தெரியும். கோத்தர்களுக்கும், வடுகர்களுக்கும் இந்தத் தையல் வேலை தெரியும். இதற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி, அதன் வாயிலாக, தற்காலத் தேவைக் கேற்றவாறு படுதாக்கள் விரிப்புகள் முதலியவற்றைத் தயாரிக்கலாம். அதனால் தொதவப் பெண்கள் பலருக்கு வேலை கிடைக்கும். புத்துக்குளியின் வேலைப்பாட்டிற்காக நகரங்களிலுள்ள பணக்காரர்களும், மற்றவர்களும் அதை வாங்கித் தொதவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தலாம்.

இந்த நிர்மாண வேலையில் அரசாங்கமும், பொது நல ஊழியர்களும், தொதவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி உழைக்க வேண்டியது அவசியம்.

தொதவர்களின் வரலாற்றைப் பற்றி நான் நேரில் கண்டு கேட்டறிந்தும், அவர்களது சமூக அமைப்பைப் பற்றிப் பரிசீலனை செய்து வரும் ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ கோபிநாத் தாஸ் அவர்களிடமிருந்து சில விஷயங்களைக் கேட்டறிந்தும், பல ஆங்கிலேய மானிட வர்க்க சாஸ்திர நிபுணர்களான ரிவர்ஸ், தர்ஸ்டன், எமனோ. கிரீஸ் தேசத்து இளவரசர் பீடர்ஸ், டாக்டர் ஐயப்பன் போன்றவர்களின் நூல்களைப் படித்தும் இக் கட்டுரைகளை எழுதினேன். சில விஷயங்களை நான் எழுதாமல் விட்டிருக்கலாம். இதற்குக் காரணம் தொதவர்கள் தமது பூர்வீக வரலாறுகளை மனம் விட்டு விருப்பு வெறுப்பின்றிச் சொல்ல முன் வராததுதான்.

# 12. குறும்பர்

நீலகிரிப் பிரதேசத்தில் உள்ள நான்கு பழங்குடிகளுள், இருளர் தொதவர் இவ்விரண்டு குடிகளைப் பற்றிப் பார்த்தோம். இப்போது மூன்ருவது குடியான குறும்பர்களைப் பற்றிக் கவனிப்போம். இவர்களைக் குறுமன் என்றும், குறுபன் என்றும் அழைக்கிருர்கள். 1891-ம் வருஷத்திய சென்ஸஸ் ரிபோர்ட்டில், இக்குறும்பர்களெல்லாம் ஒரு காலத்தில் தமிழ் நாட்டையாண்ட பல்லவர்களின் சந்ததிகள் என்று கூறப்பட்டிருக்கிறது. கி. பி. ஏழாம் நூற்ருண்டில் பல்லவப் பேரரசு உச்ச நிலைமையையடைந்து தமிழ்நாடு முழுதும் அதற்கப்பாலும் கூட பரவியிருந்தது. அதன் பிறகு கொங்கு, சோழ, சாளுக்கிய அரசர்கள் பல்லவர்களைத் தோற்கடித்தனர். தொண்டை என்ற சோழ அரசன் குறும்பர்களைத் தோற்கடித்துச் சிதற அடித்தான். அப்போதுதான் அவர்களில் பலர் நீலகிரி மலையிலும் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் வயனடு, குடகு, மைசூர் நாடுகளிலும் குடியேறினர். வீரம் பொருந்திய இக்குடிகளின் சந்ததிகள் இப்போது காடுகளில் நாகரிகமற்ற முரட்டுத் தனமுள்ள குறும்பர்கள் என்றழைக்கப்பட்டு வாழ்கின்றனர்.

நீலகிரியில் உள்ள குறும்பர் கிராமங்களை 'மொட்டா' என்றும் 'கோம்பை' என்றும் சொல்லுகிருர்கள். அவர்கள் மண்ணல் கட்டப்பட்டு மூங்கிலால் வேயப்பட்ட குடிசைகளில் வசிக்கின்றனர். சில குறும்பர்கள் வெளிப்

புறச் சுவருக்குச் சுண்ணும்பு பூசி அதன் மீது செம்மண்ணுலும், கரியினுலும் மனித, மிருக, பறவை உருவங்களை வரைந்து அலங்கரிக்கின்றனர்.

சிவனருட் செல்வர்களில் பெருமிழலைக் குறும்பர் என ஒப்பற்ற சிவபக்தர் ஒருவர் உள்ளார். இவரைப் பற்றிய வரலாற்றினைப் பெரிய புராணத்தில் காணலாம்.

1, 50, 827 குறும்பர்கள் இருந்ததாகப் பழைய சென்ஸஸ் அறிக்கைகள் கூறுகின்றன. இவர்கள் தமிழ் நாட்டில் பல ஜில்லாக்களில் வசித்து வந்தனர். 1921—ம் வருஷத்து சென்ஸஸ்படி, வட ஆற்காட்டில் 14,775. சேலத்தில் 35450, கோயமுத்தூரில் 32296, தென்னுர்க் காட்டில் 8691, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் 30628, மதுரையில் 18219, ராமனுதபுரத்தில் 1885, நீலகிரியில் 3189, புதுக்கோட்டையில் 5754 ஆக மொத்தம் 1,50,827 குறும்பர்கள் இருந்ததாகத் தெரிகிறது. இப்போது இவர்களின் ஜனத்தொகை தெரியவில்லை.

தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலும் குறும்பர் பரவியிருந்தாலும் இவர்களைப் பற்றி மானிடவர்க்க நிபுணர்கள் எழுதும்போது நீலகிரியில் உள்ள குறும்பர் களைப் பற்றித்தான் அதிகமாக எழுதியிருக்கின்றனர். இதற்கு ஒரு காரணம் இருக்கலாம். நீலகிரிக் குறும்பர்கள் புதிதாகக் குடியேறிய நீலகிரியில், தம்மைப் போன்ற பழங்குடிகளான இருளர், கோத்தர், தொதவர்களொடு கூடி வாழநேர்ந்த காரணத்தால் வாழ்க்கையில் அவர்கள் மற்ற ஜில்லாக்களில் உள்ள குறும்பர்களைப் போல மேம் பாடடைய முடியவில்லை என்று எண்ண இடமிருக்கிறது. ஒரே விதமான வாழ்க்கைத் தரமும், பழக்க வழக்கமு முள்ள சமூகத்தில் முன்னேற்றத்திற்கு அதிக வசதி கிடையாது. நீலகிரிக் குறும்பர்கள் இன்னும் தாழ்ந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணம் சமவெளிகளில்

உள்ள பலதரப் பட்ட தொழில் வசதிகள் நீலகிரியில் இல்லாமையே காரணமாயிருக்கலாம். இக் காரணத்தைக் கொண்டேதான் சமவெளிகளில் வசிக்கும் குறும்பர்களை ஊர்க்குறும்பர் என்றும், மலைகளில் வசிக்கும் குறும்பர் களைக் காட்டுக் குறும்பர் என்றும் இரண்டாகப் பிரித் திருக்கிறார்கள். இந்தக் காட்டுக் குறும்பர்களுள் ஆனைக் குறும்பன், வேப்பிலைக் குறும்பன், கொள்ளி (நெருப்பு)க் குறும்பன், ஜேன் குறும்பன் அல்லது தேன் குறும்பன் என்று பல பிரிவுகள் உண்டு.

தேன் குறும்பர் வயனாட்டிலும் நீலகிரியிலும் வசிக் கின்றனர். தேன் குறும்பர்கள் கன்னடமும் தெலுங்கும் கலந்த கொச்சைத் தமிழ் பேசுகிறார்கள். இவர்கள் கரும்பு நிறமுள்ளவர்கள். பெட்ட குறும்பர் என்ற மலைக் குறும்பர்களைக் காட்டிலும் கீழ்த்தர மானவர்கள் தேன் குறும்பர்கள் என்று சொல்லப் படுகிறார்கள். அவர்கள் காடுகளின் நடுவே தனித்துக் குடிசைகளில் வசிக்கின்றனர். மணமாகாத பெண்களுக்கும் மண மாகாத ஆண்களுக்கும் தனித்தனிச் சாவடிகளைக் க்ட்டி வைத்திருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் தத்தம் சாவடியில் அதற்கேற்பட்டுள்ள கட்டுப்பாடுகளின்படி நடக்க வேண்டும். இந்தச் சாவடி எப்படி நடக்கிறது என்ற விவரங்களை இன்னும் ஒருவரும் விசாரித்து எழுதவில்லை.

ஒவ்வொரு தேன் குறும்பர்களின் ஊரிலும் 'முதலி' என்ற ஒரு தலைவனிருப்பான். இந்தப் பதவியைத் தகப்பனுக்குப் பிறகு அவனது மூத்த பிள்ளையோ, வேறு பிள்ளைகளில் ஒருவனோ வகிப்பான். முதலிக்குப் பிள்ளை களில்லாவிட்டால் தேன் குறும்பர் கூடிப் புதிதாக ஒரு முதலியைத் தேர்ந்தெடுப்பார்கள். முதலி, குறும்பர் சமூகத்தின் நலத்தைப் பல விதத்திலும் பாது காக்கக்

கடமைப் பட்டவன். முதலி ஒரு காவல்காரன் போன்ற வன். அந்த முதலியின் கண் காணிப்பில் படுகர்களும் (நீலகிரியிலிருக்கும் மற்ருெரு ஜாதி) இருப்பார்கள். அவர்களைக் குறும்பர்கள் துன்புறுத்தாமலிருக்கும்படி பார்த்துக் கொள்வதும் முதலியின் கடமை. முதலிக்கு மாந்திரீகம், ஏவல் எல்லாம் தெரியும். ஆகவே குறும்பர் களுக்கும், படுகர்களுக்கும் முதலியிடம் பயமுண்டு. அவனிடம் ஒருவரும் முரண்டிக் கொள்ள மாட்டார்கள். படுகர்களுக்கும், பொதுவாகக் குறும்பர்களிடம் பயமுண்டு. குறும்பர்கள் தமக்குத் தீங்கிழைக்காமல் இருக்கப் படுகர்கள் வருஷந்தொறும் குறித்த காலங்களில் கப்பமும் கட்டுகிருர்கள். ஒரு குறும்பனுக்குக் கலியாணத் தின் போது படுகன் போதுமான பணம் கொடுத்து மரியாதை செய்யாவிடில் மணப் பெண்ணின் இல்லற வாழ்க்கையில் பல சங்கடங்கள் ஏற்படுமாம்.

குறும்பர்கள் சூரியனை மனிதன் என்றும், சந்திரனைப் பெண் என்றும் கருதுகின்றனர், சந்திரனுள் முயல் ரூபத்தில் இருக்கும் மனிதனைப் பாம்பு துரத்துகிறதாம்! பொழுது விடியும்வரை முயலைப் பாம்பு தின்னுதபடி சந்திரன் அதாவது பெண் தடுக்கிருளாம்! என்ன கற்பனை பாருங்கள்!

பெண்கள் பருவமடைவதற்கு முன்பே கலியாணப் பேச்சு நடந்துவிடும். மணமகன், பெண்ணின் தகப்பன் வீட்டில் பெண் பருவம் அடையும் வரை வசித்து, வேலை செய்வான்; பருவமடைந்தவுடன் ஒரு நாள் அந்தப் பெண்ணைக்கூட்டிக் கொண்டு வெளியே போய்விடுவான். கலியாணச் சடங்குகள் ஒன்றும் கிடையாது. இவர்கள் மணமுறை மிகவும் எளிதானது. விதவைகள் மறு விவாகம் செய்து கொள்ளலாம்.

சாவு நேரின் பிணத்தை எரிப்பதே அவர்களது வழக்கம். ஆனால் முதலியின் பிணத்தையும், குழந்தையின் பிணத்தையும் புதைக்கிறார்கள். ஒவ்வொரு குறும்பர் வீட்டிலும் இறந்தவர்களின் நினைவுக்காக ஒரு குகையில் ஒரு கல் நடுவது அவர்கள் வழக்கம்.

குறும்பர்கள் குழல் வாசிப்பதில் சமர்த்தர். குழல்களைத்தாமே செய்து கொள்கின்றனர். மற்றைய ஹிந்துக்களைப் போல் தலையின் முன் பாகத்தை க்ஷவரம் செய்து கொள்கிறார்கள். தலையில் குடுமியுண்டு. இவர்கள் தேன், மூங்கிலரிசி, கிழங்குகள் இவற்றை உண்டு வசிக்கின்றனர். வயனாட்டில் உள்ள குறும்பர்கள் காப்பி, மிளகு, ஆரஞ்சுத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். அவர்கள் தங்களுக்கு வேண்டிய தானியங்களையும் பயிர் செய்கின்றனர். காட்டெருமையையும் கொன்று அதன் மாமிசத்தைத் தின்கின்றனர்.

குறும்பர்கள் சாதாரண நிலச்சுவான் தார்களிடமும், அரசின் காட்டிலாகாவிலும், காபி, தேயிலை, தோட்டக் காரர்களிடமும் வேலை செய்கின்றனர். இவர்களுடைய தெய்வம் சிவன். குரிபல்லராயா (பல ஆடுகளின் ராஜா) என்ற மற்றொரு தெய்வத்தையும் வணங்குகின்றனர். வேட்டையாடுவதிலும், அம்பெய்வதிலும், குறும்பர்கள் தேர்ச்சி பெற்றவர்கள்.

வயனாட்டில் உள்ள அரசின் காடுகளில் சுமார் 3,000 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு ஏற்றபடி உள்ளது. அவற்றைக் குறும்பர்களுக்குப் பகிர்ந்தளித்து விவசாயத்திற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்தால் அவர்கள் விவசாயம் செய்து சீரான வாழ்க்கையை நடத்தி மேம்பாடு அடையலாம். இவர்களுக்குப் படிப்பு என்பதே இல்லை. சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள், வைத்திய வசதிகளைப் பற்றி எழுத எதுவுமே இல்லை. காரணம் அவை கொஞ்சமும் இல்லாமைதான்.

# * கோண்டர்

இந்திய நாட்டுப் பழங்குடிகளுள் கோண்டர்கள் ஓர் வகையினர். இவர்கள் கோதாவரி நதிக்கரையிலிருந்து வடக்கே கங்கைநதிக் கரை வரையுள்ள பிரதேசத்தில் வசிக்கின்றனர். 1941-ம் வருஷத்து ஜன கணிதப்படி இவர்களின் மொத்த ஜனத்தொகை 32 லக்ஷம்.

இவர்களுள் 24 லக்ஷம் பேர் மத்தியப் பிரதேசத்தில் வசிக்கிறார்கள். இவர்கள் வசிக்கும் மாவட்டத்திற்கு 'கோண்டவாஞ' என்று பெயர். ஆதிகாலத்தில் அதாவது மொகலாயர் காலத்திற்கு முன்பிருந்தே இவர்கள் கோண்டவாஞவை ஆண்டு வந்தார்கள். மீதியுள்ள கோண்டர்கள் ஒரிஸ்ஸாவிலும், மத்திய இந்தியாவிலும், உத்தரப் பிரதேசத்திலும் வசிக்கின்றனர்.

கோண்டர்களுக்கு 'மரியா' என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஆகவே பொதுவாக எல்லாக் கோண்டர்களையும் மரியா கோண்டா என்றும் அழைக்கிறார்கள். இவர்களுள் மலைமரியா என்றும் (Hill Marias) காட்டெருமைக் கொம்பு மரியா என்றும் (Bison horn Maria) பட்ர கோண்ட் என்றும் (Bhattra Gond) மூன்று பிரிவுகள் உண்டு.

இவர்களுள் மலை மரியாக்கள் மிகவும் பிற்போக்கான வர்கள். இவர்களுக்கும் வெளியாருக்கும் தொடர்பே

---

* நூலாசிரியரின் வானொலிப் பேச்சு

கிடையாது. இவர்களுடைய பழக்க வழக்கங்கள், கடவுள் வழிபாடு யாவும், பல நூற்றுண்டுகளுக்கு முன் எவ்விதம் இருந்தனவோ அவ்விதமே இன்றும் மாருமல் இருக்கின்றன.

மலை மரியாக்கள் அந்நியரைக் கண்டால் நாணிப் பயந்து ஒளியும் தன்மையினர். பார்ப்பதற்குக் கவர்ச்சியான தோற்றமுடையவர்கள்.

காட்டெருமைக் கொம்பு மரியாக்கள் காட்டெருமைக் கொம்புகளாலான தலைப்பாகை அணிந்து கூத்தாடுவார்கள், அதனால்தான் அவர்களுக்கு இந்தப் பெயர் வந்தது. மணச் சடங்குகளில் காட்டெருமைக் கொம்புகளால் செய்த தலைப்பாகையை அணிந்து இவர்கள் நடனமாடுவது பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.

பட்ரா கோண்ட் என்பவர்கள் மார்பில் பூணூல் அணிகிருர்கள். இப்பழக்கம் மற்ற கோண்டவர்களுக்குள்ளேயும் பரவி வருகிறது. இப்பூணூல் அணியும் வழக்கத்தின் வரலாறு ருசிகரமானது. கோண்டவானவை கோண்ட அரசர்கள் ஆண்டு வந்தபோது, சில கோண்டர்கள் பூணூல் அணிய ஆரம்பித்தார்கள். இதையறிந்த அரசன் பூணூல் அணிய ஆசைப்படும் கோண்டர் அரசாங்கத்திற்கு ஒரு வரி செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டானும். இந்தப் பூணூல் வரியை அநேக கோண்டர்கள் விரும்பியே ஒவ்வொரு வருஷமும் செலுத்தி வந்தார்கள்.

தோற்றத்தில் கோண்டர்கள் குள்ளமானவர்கள். நீண்ட தலை; அகன்ற கன்ன எலும்புகள். முகத்தின் மேல்பாதி அகன்று, கீழ்ப்பாதி குறுகிப் பம்பரம் போன்றிருக்கும். தட்டையான அகன்ற மூக்கு, தடித்த உதடு. முகவாய்க் கட்டை உள்ளே அடங்கியிருக்கும். அவர்கள்

நிறம் பொதுவாகக் காப்பிப் பொடி வர்ணம். சிலர் பழுத்த மஞ்சள் நிறமுடையவர்கள். அவர்களது மயிர் தடித்து நேராகப் படிப்படியாகப் படிந்திருக்கும். தலை மயிர் அடர்த்தியாயிருக்கும். உதட்டிலும், முகத்திலும் மயிர் குறைவாயிருக்கும்.

கண்கள் சிறியன. விழிகள் கருப்பு. சாதாரணமாக எல்லோருக்கும் கண்கள் நீண்டிருக்கும். சிலருக்கு மங்கோலியரைப் போல் கோணலாயிருக்கும்.

கோண்டர்களின் கிராமங்கள் வனப்புமிக்க சோலைகளுக்கிடையே அமைந்திருக்கின்றன. வீட்டைச் சுற்றியும் நிழல் கொடுக்கும் மரங்கள் பல உண்டு. அவர்கள் வீடு ஒரு வயலின் நடுவே இருக்கும். வீட்டைச் சுற்றி மூங்கில் வேலிகள் உண்டு. காட்டிலுள்ள மரம், மூங்கில், புல், ஓலை, இவற்றைக் கொண்டு கோண்டர்கள் தமது வீட்டைக் கட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் வீட்டில் ஒருசிறப்பு என்னவென்றால் வீட்டின் வராண்டா அல்லது தாழ்வாரம் அகன்றும் நீண்டும் இருக்கும். இத்தாழ்வாரம் பல வகையில் உபயோகமுள்ளது.

பொதுவாக வீடுகள் பார்ப்பதற்கு அழகாயும், வசிப்பதற்கு வசதியுள்ளதாயும் இருக்கும். வீட்டினுள் சென்று பார்த்தால், எங்கும் மூங்கிலினால் செய்த சாமான்களே கண்ணைக் கவர்கின்றன. மூங்கில் தண்ணீர்க் குழாய், மூங்கில் சுருட்டுக் குழாய், மூங்கிலினால் செய்த சீப்பு, குடைகள், உலர்ந்த இலைக் கட்டுகள், மரத்தால் செய்த தட்டு முட்டுச் சாமான்கள், மீன் தூண்டில்கள், வலைகள், பறைகள், வில், அம்பு, கோடரி இவற்றைப் பார்க்கலாம். வீட்டிற்குள் இறந்தவர்களின் சின்னங்களை வைத்து ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிறார்கள். கோண்டர்கள் தமது கிராமங்களையும், வீட்டையும், அதன் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள்.

மலை மரியா ஆண்கள், தமிழ் நாட்டாரைப் போல் தலையின் முன் பாகத்தை மயிர்கழித்துக் குடுமி வைத்திருக்கிறார்கள். இவர்களுள் முடி எடுப்பவர் என ஒருவர் கிடையாது. ஆனால் ஒவ்வொருவனிடமும் ஒரு க்ஷவரக் கத்தி உண்டு. ஒருவருக் கொருவர் க்ஷவரம் செய்யும் வழக்கம் இவர்களிடம் உண்டு.

மரியா பெண்கள் மரத்தினால் செய்த சீப்புகளைத் தலையில் அழகுக்காக அணிகிறார்கள். இச்சீப்புகள் வேலைப்பாடுள்ளவை. அகலமாகவும். உயரமாகவும் இருக்கும். அவர்கள். தம் தலையைச் சுற்றிப் பித்தளைத் தகட்டினால் செய்யப் பட்ட சுற்று வட்டத்தை அணிகிறார்கள்.

இவர்கள் இடுப்புக்கு மேல் துணி அணிவதில்லை. சில பெண்கள் தமது மார்பை ஒரு சிறு துணியால் மறைத்துக் கொள்கிறார்கள்.

ஆதிகாலத்தில் மலைமரியாக்கள் இலைகளை ஆடையாக அணிந்து வாழ்ந்தார்களாம். ஆனால் இன்றைக்கும்' அவர்களுள் அநேகர் இடுப்பைச் சுற்றி ஒரு துணியை மாத்திரமே அணிந்து வாழ்கின்றனர். அதன் அகலம் சுமார் ஒரு முழமும், நீளம் சுமார் மூன்று முழமுமிருக்கும். தமிழ் நாட்டுக் குடியானவர்களின் உடையைப் போன்றிருக்கும். இந்தத் துணிக்கு மேல் சோழிகளால் செய்த ஒரு இடுப்புப் பட்டையையும் அணிகிறார்கள். காலுக்குச் செருப்பு அணியும் வழக்கம் கிடையாது.

ஆண்களும் பெண்களும் பலவிதமான ஆபரணங்களை அணிகிறார்கள். கண்ணாடிப் பாசி மணிகளாலும், எலும்புகளாலும் செய்யப்பட்ட நகைகளைக் கழுத்திலும், மார்பிலும், அணிகிறார்கள். சிறுவர்கள் முழங்கைக்கு மேல் ஒன்றிலிருந்து ஐந்து வரை பித்தளைக் காப்புகளை

அணிகின்றனர். கழுத்தில் ஐந்தாறு பாசிச் சரங்களையும் அணிகின்றனர். காதில் துளை செய்து காது வளையங்களையும் அணிகின்றனர். மேல் காதிலிருந்து, பாசிச் சரங்களை, நேராகத் தொங்கும்படி அணிகிறார்கள், இவ்வாபரணங்கள் எல்லாம் பல வர்ணப் பாசிகளாலும் மணிகளாலும் செய்யப்பட்டவை. பார்ப்பதற்கு அழகாக இருப்பதுடன் அவற்றைச் செய்தவரின் கலைத் திறனையும் காட்டுகிறது.

பெண்கள் கழுத்தில் ஒன்றிரண்டு பாசிமணிச் சரங்களையும், பட்டைகளையும் அணிகிறார்கள். காதில் வளையங்களையும், சரங்களையும் மூக்கில் புல்லாக்குப் போன்ற பித்தளை நகைகளையும் அணிகின்றனர். கழுத்தில் மணிகள் கோத்த நீண்ட சரங்களை அணிகின்றனர். பித்தளை, அலுமினியம், இவற்றாலான வளையங்களையும் சங்கிலிகளையும் அணிகின்றனர். இவ்வாபரணங்கள் பெண்களின் உடலின் மேல் பாகம் முழுவதையும் மறைத்து விடுகின்றன. கையிலும், காலிலும் அலுமினியத்தாலான வளையங்களையும். காலணிகளையும் அணிகின்றனர். ஆனால் இவ்வாபரணங்களைப் பெண்கள் வீட்டில் வேலை செய்யும் போது அணிவதில்லை. வெளியில் சந்தைகளுக்குப் போகும் போதுதான் அணிகின்றனர். பெண்கள் பச்சை குத்திக் கொள்கிறார்கள். இது அவர்களின் இயற்கை அழகைக் குறைத்து விடுகிறது.

கோண்டர்கள் நடனமாடுவதற்கென்று தனி ஆடை ஆபரணங்களை அணிகிறார்கள். அவையெல்லாம் பறவைகளின் இறகுகளாலும், தோகைகளாலும், மற்றும் பகட்டு வர்ணக் காகிதங்கள், துணிகள், அட்டைகள் முதலியவற்றாலும் செய்யப்பட்டவை. இவையெல்லாம் கோண்டர்களின் கைத்திறனையும், ஓவிய உணர்ச்சியையும் காட்டுகின்றன.

கோண்டர்கள் செய்யும் விவசாயம் ஒரு தனி வகை, அதனை 'பெண்டா' விவசாயம் என்று சொல்லுகிறார்கள். ஆங்கிலத்தில் அதை Shifting Cultivation (இடம் மாற்றும் விவசாயம்) என்கிறார்கள். தமிழ் நாட்டிலும் பழங் குடிகள் அவ்வித விவசாயத்தைச் செய்கிறார்கள். அதற்கு 'புனப்' என்று பெயர். இந்த முறை விவசாயத்திற்குக் காடுகளை உழுவது கிடையாது. காட்டில் ஏதோ ஒரு பாகத்தில் உள்ள மரங்களையும், புதர்களையும் வெட்டி எரித்த பின்பு, மழை பெய்ததும், அந்த இடத்தை ஒரு கொம்பால் கிளறித் தானியத்தை விதைப்பார்கள். பயிர் விளைந்ததும் அறுவடை செய்வார்கள். இந்த விவசாயத் தில் அவர்கள் உபயோகிக்கும் கருவி கோடரி ஒன்றுதான். ஆகவே இதற்குக் கோடரி விவசாயம் Axe cultivation என்று பெயர். இக்காரணத்தைக் கொண்டு "கோடரியே நமக்குப் பால் கொடுக்கும் பசு" என்ற பழமொழியும் கோண்டர்களிடம் வழங்குகிறது.

இவர்கள் நாய், பன்றி, கோழி, ஆடு, எருமை, பசு, காளைமாடுகளை வளர்க்கிறார்கள், இவற்றை விசேஷ காலங்களில் பலியிடுகிறார்கள்.

ஒரு விநோதம் என்னவென்றால் மலை மரியாக்கள் எருமைகளையும், பசுக்களையும் வண்டியில் பூட்டுவதில்லை. ஏரிலும் பூட்டுவதில்லை. அவற்றின் பாலையும் கறந்து சாப்பிடுவதில்லை. ஆனால் அவற்றின் மாமிசத்தைச் சாப்பிடுகின்றனர். தவளைகளையும், எலிகளையும், மீன் களையும், முதலைகளையும், பறவைகளையும் சாப்பிடு கின்றனர். தேனைக் கோதுமையோடு கலந்து சாப்பிடு கிறார்கள். வில்லு, அம்பு, ஈட்டி, இவற்றாலும், வலை போட்டும் வனவிலங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தைச் சாப்பிடுகின்றனர். கோண்டர்களுக்குப் பலவகைத் தொழில்களும் தெரியும். கூடை முடைதல், பித்தளைச் சாமான்கள், ஆபரணங்கள் செய்தல், கத்தி,

ஈட்டி, கோடரி செய்தல், பிரம்பு வேலை செய்தல், துணி நெய்தல் போன்ற பல தொழிலிலும் வல்லவர்கள்.

கோண்டர்கள் மொழி திராவிட மொழிகளின் தொடர்புள்ளது என்று சொல்லுகிறார்கள். கோண்டர்கள் பேசும் போது சில தமிழ் வார்த்தைகளின் ஒலியைக் கேட்ட நான் அவற்றின் கருத்தைச் சொல்லுமாறு, கோண்டு மொழியும், ஆங்கிலமும் தெரிந்த ஒரு நண்பரைக் கேட்டேன். அம்மொழிகளும், அவற்றின் கருத்தும் தமிழ் மொழிகளோடு ஒத்திருப்பது ஓர் ஆச்சரியம்.

கோண்ட மொழியில் எண்ணெய்க்கு ''நெய், என்றும் சாவடிக்குச் ''சாவடி'' என்றும், மாமனுக்கு ''மாமா'' என்றும், இல்லை என்பதற்கு 'ஹில்லே' என்றும் மேட்டுப் பூமிக்கு 'மேட்பூம்' என்றும் வயதானவர்களுக்கு 'முதியாள்' என்றும், நடுபூமிக்கு 'நடும்பூம்' என்றும், பாட்டுக்குப் 'பாட' என்றும், பாட்டு ஓதுவாருக்கு ''பாட்டு ஓயவார்'' என்றும், மூங்கிலுக்கு ''வெதிர்'' என்றும் சொல்லுகிறார்கள். சிலப்பதிகாரத்தில் ''குடசமும் வெதிரமும்'' என்ற வாக்கியத்தில் 'வெதிரம்' என்பது மூங்கிலைக் குறிக்கிறது. ஆகவே பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு தமிழ் மொழி இந்திய நாடு முழுவதும் பரவியிருந்தது என்றுஊகிப்பதற்கு இது ஒரு சான்று.

கோண்டர்களுக்குச் சகுனத்தில் நம்பிக்கையுண்டு. 'உசிர்' என்ற பறவை இடப்பக்கத்தில் ''உயிங் உயிங்'' என்று கத்தினாலும், குத்தூர் பறவை ''கோ கோ'' என்று கத்தினாலும் நல்ல சகுனமாம். வலது பக்கத்தில் கத்தினால் அபசகுனமாம். ஒரு பெண் குடம் நிறைந்த தண்ணீருடன் எதிரே வந்தால் நல்ல சகுனம். பூனையைக் கண்டால் அபசகுனம். இந்த விஷயத்திலுங்கூட கோண்டர்

களுக்கும், தமிழ் நாட்டாருக்கும் உள்ள சில ஒற்றுமை களைக் காண்கிறோம்.

குழந்தைகளிடத்துக் கோண்டர்களுக்கு அளவு கடந்த அன்பு, பெருமைகூட. குழந்தைகளிடம் வெகு அன்புடனும், ஆதரவுடனும் நடந்து கொள்வார்கள். குழந்தைகளை அடக்குவது கிடையாது. இஷ்டம் போல் விட்டு விடுவார்கள். வாழ்க்கைக்கு வேண்டிய பழக்க வழக்கங்களை வெகு அக்கறையுடன் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். குழந்தைகள் நாளுக்கு நாள் வளர்வதைக் கண்டு மனம் பூரித்துப் போவார்கள். ''குழந்தை நடக்க ஆரம்பித்தால் இவ்வுலகமே இரண்டரை நாட்களுக்கு அதிர்கிறது'' என்ற கோண்டர் பழமொழியிலிருந்து குழந்தைகளிடத்தில் அவர்களுக் குள்ள அன்பு எவ்வளவு என்பது தெரிகிறது.

குழந்தை நடக்க ஆரம்பித்தால் அப்போதே அது வேலை செய்யும் திறனுடையது என்பது கோண்டர்களின் கொள்கை. வீட்டு வேலையிலும், விவசாயத்திலும், எல்லாவித வேலைகளிலும் கோண்டு சிறுவர், சிறுமியர் சிறுவயதிலிருந்தே பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

கோண்டர்களின் வாழ்க்கைக்கெல்லாம் ஆணி வேர் போன்றது. 'கோடுல்' (Gotul) என்ற ஸ்தாபனம். இது நாகர்களின் மோரங்கைப் போன்றது. இந்த கோடுல் சிறுவர் சிறுமியரின் பயிற்சி நிலையம். இதில் சேரும் சிறு வனுக்கு'' செலிக்'' என்றும், சிறுமிக்கு ''மொடியாரி'' என்றும் பெயர். ஒவ்வொரு ''செலிக்கும்'' ஒரு மொடி யாருடன் நட்புக் கொண்டு கோடுலில் ஒத்து வாழ் வார்கள். வயது வந்ததும் மணம் செய்து கொள் வார்கள். இவர்களுக்கு வேண்டிய பயிற்சி, கட்டுப்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அளிக்க ''செலிக்,

மொடியாரி'' தலைவர்கள் உண்டு. செலிக்கும், மொடியாரிக்கும் பல கடமைகளுண்டு. திருவிழாக்களிலும், ஊரில் நடக்கும் பலவிதமான விசேஷ தினங்களிலும் இவர்களுக்குப் பல கடமைகள் உண்டு. செலிக்கும் மொடியாரும் அவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பெரியவர்களுக்கு உதவியாயிருந்து செய்வார்கள். திருமணங்களிலும் இவர்கள் மணமகனுக்கும், மணப் பெண்ணுக்கும் தோழர்கள் என்ற முறையில் பல பணிகளிலும் வேடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள். செலிக்கும் மொடியாரும் சேர்ந்து கூத்தாடுவார்கள். அவர்கள் ஆடும் கூத்துக்களும், விளையாட்டுக்களும் கிராமத்திற்கே இன்பத்தை அளிக்கும். இதனால் வருத்தத்தொடு இருக்கும் கோண்டர்களைக் காண்பதரிது.

பொதுவாக கோடூரில் உள்ள 'செலிக்' நாள் முழுவதும் விவசாயத்திலும், உணவுப் பொருள்களைச் சேகரிப்பதிலும், சாராயம் காய்ச்சுவதிலும் வேட்டையாடுவதிலும், மீன் பிடிப்பதிலும், தேன் திரட்டுவதிலும் கழிப்பர். ''மொடியாரி'' வீட்டில் சமையல் வேலைகளைச் செய்வாள். கிழங்கு, பழம், கடுக்காய், தையல் இலை இவற்றைத் திரட்டுவாள்.

கோண்டர்களுள் பல பழமொழிகளும் புதிர்களும் வழங்குகின்றன.

1. சட்டிக்குள் சட்டி, தகப்பனை விடப் பையன் வெள்ளை. (தேங்காய்)
2. சின்னப் பையன் அரசனை அழ வைக்கிறான். (மிளகாய்)
3. போகும், வரும் ஆனால் அடிச்சுவடில்லை—(படகு)
4. இந்த மயிலுக்கு ஒரு கால்தான். (குடை)

5. தனக்குத் தெரியாது, பிறருக்குத் தெரியும்; அது மனிதனல்ல. ஆனால் இரவும் பகலும் நடக்கிறது.
(கடிகாரம்)

6. மாடு படுத்திருக்க, கயிறு காட்டில் மேய—
(பூசணி)

7. அண்ணனும் தம்பியும் எப்பவும் கூடியே இருப்பார். ஆனால் ஒருவன் மற்றவன் வீட்டில் புகுவதில்லை. (பூட்ஸ்)

கடைசியாக, இவர்களுள் வழங்கும் ஒரு பழங் கதையைப் பார்ப்போம்.

ஒரு கிராமத்தில் ஒரு கிழவனும், அவனது கிழ மனைவியும் வசித்து வந்தார்கள். கிழவன் உழுது விதைத்த காட்டில் பயிர் வளர்ந்து கதிர்கள் விட்டது. அப்போது மயில்கள் கூட்டமாக வந்து அவற்றைத் தின்ன ஆரம்பித்தன. அவற்றைத் துரத்த வேண்டிக் கிழவன் வயலுக்குத் தினமும் காவல் புரியச் சென்றான். அவனுக்கு ஒரு நாள் காவலில் கடும் காய்ச்சல் வந்தது. அதனால் வீட்டிற்குப் போக முடியவில்லை. தன் கணவன் வராததைக் கண்ட அவன் மனைவி காட்டிற்குச் சென்றாள். அங்கே அப்போது மயில் கூட்டங்கள் கவலையின்றிப் பயிர்களைத் தின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்; தன் கணவன் அதிகக் காய்ச்சலால் படுத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தாள்; அழுதாள். இதைக் கண்ட மயில்கள் அவளிடம் இரக்கங் கொண்டு "ஏன் அழுகிறாய்?" என்று அவளைக் கேட்டன. அதற்கு அவள் "என் வயதான புருஷன் சுரத்தினால் படுத்து, மிகவும் கஷ்டப்பட்டு, எழுந்திருந்து நடக்கவும் முடியாமல் இருக்கிறார். நீங்களே போய் அவர் நிலையைப் பாருங்கள்" என்று கூறினாள். உடனே எல்லா மயில்களும்

காட்டில் கிழவன் படுத்திருந்த குடிசைக்குள் சென்று, கிழவன் படுத்திருப்பதைப் பார்த்தன. உடனே கிழவன் தன் மனைவியிடம கதவைச் சாத்துமாறு சொன்னான். இதைக் கேட்ட மயில்கள் கிழவன் என்ன சொன்னான் என்று கிழவியைக் கேட்டன. அதற்குக் கிழவி "என் கணவன் சுரத்தினால் ஏதோ பிதற்றுகிறான்" என்று சொல்லிக் கொண்டே குடிசையின் கதவைப் 'படக்' கென்று மூடினாள். அவளது புருஷன் தன் படுக்கையை விட்டு எழுந்து எல்லா மயில்களையும் கொன்று, வீட்டிற்கு அவற்றை எடுத்துச் சென்று கணவன், மனைவி இருவருமாக அவற்றின் மாமிசத்தைச் சாப்பிட்டார்கள். இப்படி ஒரு கதை கோண்டரிடம் வழங்குகிறது.

## சில பொதுச் செய்திகள்

பழங்குடிகள் பெருமளவிற்கு ஆப்பிரிக்காவில்தான் வசிக்கிறார்கள். அதற்கடுத்த படியாக உலகிலேயே அதிகமான பழங்குடிகள் பாரத நாட்டில்தான் வசிக்கிறார்கள். 1971-ல் பத்தாண்டு கணிதப் பழங்குடிகள் பட்டியல்படி (Scheduled Tribes) பாரத நாட்டில் வசிக்கும் பழங்குடிகளின் ஜனத்தொகை 3,80,15,162. அதாவது பாரத நாட்டு ஜனத்தொகையில் (548159652) பழங்குடிகள் 6.9 சதவிகிதம் அல்லது 7 சதவிகிதம் ஆவர். இப்போது (1980—ல்) அவர்களது ஜனத்தொகை தோராயமாக நான்கு கோடி இருக்கலாம்.

1961—ம் ஆண்டு ஜன கணிதப்படி தமிழ் நாட்டில் பழங்குடிகளின் ஜனத்தொகை 2,52,000 ஆக இருந்தது. 1971—ம் ஆண்டு (Census) ஜன கணிதப்படி அவர்களின் தொகை பின்வரும் பட்டியலால் 311515 என்று தெரிய வருகிறது.

| மாவட்டம் | பழங்குடிகளின் ஜனத்தொகை |
|---|---|
| சேலம் | 94383 |
| வட ஆற்காடு | 70727 |
| தர்மபுரி | 30123 |
| செங்கல்பட்டு | 27189 |
| கோயமுத்தூர் | 26021 |
| திருச்சிராப்பள்ளி | 14731 |
| நீலகிரி—உதக மண்டலம் | 19869 |

| மாவட்டம் | பழங்குடிகளின் ஜனத்தொகை |
|---|---|
| தென்னுர்க்காடு | 14105 |
| எஞ்சிய மாவட்டங்கள் | 14367 |
| மொத்தம் | 311515 |

தமிழ் நாட்டில் உள்ள பழங்குடிகளில் 42 பிரிவுகள் இருக்கின்றன. 1956-ம் ஆண்டு, பாரத ஜனுதிபதி வெளியிட்ட பட்டியல்படி, மாவட்டம் வாரியாக 42 வகுப்புப் பழங்குடிகள் வசிக்கும் இடங்கள் பின் வருமாறு :—

தமிழ்நாடு எங்கும் (1) காடர்களும் (2) இருளர்களும் வசிக்கிருர்கள்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம், (செங்கோட்டைத் தாலுகாவைத் தவிர) பிற மாவட்டங்களிலெல்லாம் (3) அடியான், (4) அரநாடன், (5) கம்மர், (6) காட்டு நாயக்கன், (7) கொண்ட காபு (8) கொண்ட ரெட்டி, (9) கொரகர், (10) கோத்தர், (11) குடியர் அல்லது குடியன், (12) குரிச்சன், (13) குருமன், (14) மகா மலசர், (15) மலசன், (16) மலேயகருமான், (17) முதுகன் அல்லது முதுவன், (18) பாலியன், (19) பணியன், (2") புலேயன், (21) சோளகர், (22) தொதவர் ஆகியோர் வசிக்கின்றனர்.

வட ஆற்காடு, தென்னுர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளியில் உள்ள ஏலகிரி, ஜவ்வாது, கல்ராயன் மலே, ஏர்க்காடு, கொல்லி மலே, பச்சை மலே, பிராந்தியங்களில் (23) மலேயாளிகள் வசிக்கிருர்கள். மற்றெல்லாப் பழங்குடிகளேக் காட்டிலும் இவர்களின் ஜனத்தொகை அதிகம். அதாவது சுமார் இரண்டு லட்சம் இருக்கலாம்.

கோயமுத்தூர், திருநெல்வேலி (செங்கோட்டைத் தாலுகா தவிர) மாவட்டங்களிலும் (24) கனியர் அல்லது கணியன் என்ற பழங்குடியைக் காணலாம்.

நீலகிரி மாவட்டத்தில் (25) குறும்பர் வசிக்கிறார்கள். இங்கே தொதவர், கோத்தர், பனியன், இருளர் போன்றவர்களும் அதிகமாக வசிக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டைத் தாலுக்காவிலும் (26) ஏராவளன், (27) மலைப்புலையர், (28) காணிகாரன், (29) கொச்சுவேலன், (30) மலைக்குறவன், (31) மலை அரயன், (32) மலைப்பண்டாரம், (33) மலைவேடன், (34) மலையன், (35) மலையரையர், (36) மண்ணான், (37) முத்துவன், .(38) பன்றியன், (39) பாளியன் (40) உள்ளாடன், (41) ஊராளி, (42) விஷாவன் ஆகியவர்கள் வசிக்கிறார்கள்.

இந்த 42 வகுப்புக்களில் உள் வகுப்புகளும் உண்டு. உதாரணமாக இவர்களெல்லாம் ஆதியில் ஒரே பிரிவினர் என்று மானிட இயல் நூல் நிபுணர்கள் எண்ணுகிறார்கள்.

இறுதியாக, இவர்களைப் பற்றிய சில பொதுவான செய்திகளையும், பொதுவான வாழ்க்கை முறைகளையும் தொகுத்துச் சொல்லிப் பின் இவர்களை மேம்படுத்தச் செய்யப்பட வேண்டிய காரியங்களையும் கவனிப்போம்.

நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள், சமவெளிப் பிரதேசங்களில், போக்கு வரவு வசதியுள்ள, கிராமங்களிலும், பட்டணங்களிலும் வசித்து வருகின்றனர். ஒரு சிறு பான்மையினர் காட்டுப் பிரதேசங்களிலும், மலைப்பிரதேசங்களிலும், வசித்து வருகிறார்கள். பல நூற்றாண்டுகளாக, சமவெளிகளில் வசிக்கும் மற்ற

மக்களோடு, எவ்விதமான தொடர்புமின்றி வசித்து வரும் மக்களைப் பழங்குடிகள் என்றழைக்கிறோம்.

பலநூற்றுண்டுகளுக்கு முன்பு, இப்பழங்குடிகளின் முன்னோர்கள் சமவெளிகளில் வசித்து வந்த போது படை எடுத்து வந்த அந்நியர்களோடு எதிர் நின்று போர் செய்ய பயந்தோ, அப்போரில் தோல்வியடைந்தோ, வலிமை படைத்த பங்காளிகளுடன் சண்டை போட்டுக் கொண்டோ, தாம் வசித்த சமவெளிப் பிரதேசத்தை விட்டுக் காடுகளில் குடியேறி ஒளிவு மறைவாகத் தம் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்களின் சந்ததி களைத் தான் இக்காலத்தில் பழங்குடிகள் என்றழைக் கிறோம்.

இன்று இவர்கள் ஜனத்தொகை, இந்தியா முழுவதுமே சுமார் 4 கோடியிருக்கலாம்.

அஸ்ஸாமிலும், பீஹாரிலும், ஒரிஸ்ஸாவிலும், மத்தியப் பிரதேசத்திலும், ஆந்திராவிலும், தமிழ் நாட்டி லும், அந்தமான், நிக்கோபார் தீவுகளிலும் இப்பழங் குடிகள் மலைகளிலும், காடுகளிலும் தனிமையாக வசித்து வருகின்றனர்.

இப்பழங்குடி மக்கள் எல்லோருமே பலதுறைகளில் பிற்போக்கானவர்கள் தான். இவர்களுக்குச் சமவெளி களில் வசிக்கும் மக்களோடு எவ்விதமான தொடர்பும், உறவும் கிடையாது. இதற்கு ஒரு காரணமும் உண்டு. பழங்குடி மக்கள் வசிக்கும் காட்டு மலைப் பிரதேசங் களுக்கு இன்றைக்கும் சரியான போக்கு வரவு வசதிகள் கிடையாது. சமவெளிப் பிரதேசங்களில் மக்கள் எப்படி' நாளுக்கு நாள் மேம்பட்ட வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பதையும் இப்பழங்குடி மக்கள் அறியார்கள். ஆகவே, அக்காடுகளிலும், மலைகளிலும்,

பல கஷ்டங்களை அனுபவித்து மிகவும் பிற்போக்கான ஒரு வாழ்க்கையை இப்பழங்குடிகள் நடத்தி வருகிறார்கள்.

இதனோடு கூட, சமீபகாலம் வரை, சமவெளிகளில் வசிக்கும் பொது மக்கள், இப்பழங்குடிகளின் நலத்தில், போதுமான அக்கறையும் அனுதாபமும் காட்டவில்லை. தொண்டில் அவா கொள்ளவோ இப்பழங்குடிகள் வசிக்குமிடங்களுக்குப் போவதோ கிடையாது.

பழங்குடி மக்கள் கீழ்த்தரமான வாழ்க்கையை நடத்திய போதிலும், அவர்களிடம் பல நல்ல குணங்களுண்டு. அவர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகள். ஆனால் அவர்களது விவசாய முறையும் அவர்களைப் போலவே பிற்போக்கானது தான். அந்த விவசாயத்தோடு வேட்டையாடி மிருகங்களையும், பறவைகளையும், ஆறுகுளங்களிலுள்ள மீன்களையும், காட்டிலுள்ள பல கிழங்கு காய்கனிகளையும் உண்டு ஜீவிக்கிறார்கள். மலைபடுதிரவியங்களான கடுக்காய், ஏலக்காய், காப்பிக் கொட்டை, நெல்லிக்காய், தேன், தேன்மெழுகு, அரக்கு, புலித்தோல், மான்தோல், மான்கொம்பு, பல மூலிகைகள் மருந்துச் சரக்குகள் முதலியவற்றைச் சேகரித்து, வியாபாரிகளுக்கு மிகக்குறைந்த விலைக்கு விற்று ஜீவனம் செய்கிறார்கள்.

தொதவர்களைப் போன்றவர்கள் எருமை மந்தைகளை வைத்துப் பரிபாலித்துப் பால், நெய் வியாபாரம் செய்கிறார்கள். கோத்தர்கள் விவசாயத்தோடு, பலவிதமான கைத்தொழிலிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். சிலர் தேயிலை, காப்பி, ரப்பர், தோட்டங்களில் கூலி வேலை செய்து வாழ்கின்றனர்.

இவர்கள் பல கைத் தொழில்களிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மரங்களில் சித்திர வேலைகளையும்,

மூங்கிலினால் பல அழகான கூடைகள், வீட்டிற்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள், சீப்புகள், எண்டி பட்டு நெய்தல், வீடுகட்டுவது, போன்ற தொழில்களை இன்றைக்கும் பரம்பரைப் பாணியில் செய்து வருகின்றனர்.

அஸ்ஸாமிலுள்ள நாகர்களும், ஒரிஸ்ஸாவிலுள்ள கோண்ட்களும், தங்களுக்கு வேண்டிய துணிகளைத் தாமே நெய்து கொள்கிறார்கள். அவர்கள் துணிநெய்யும் தொழிலே ஒரு தனிக் கலை. அதேபோல் நீலகிரியில் உள்ள தொதவர்களும், கோத்தர்களும், அழகானதும், வேலைப் பாடமைந்ததும், பலவர்ண நூல்களைக் கொண்டு அலங்காரத் தையல் நிறைந்ததுமான புத்துக்குளியைத் தயார் செய்து அதை அணிகின்றனர். ஆனால் இப்போது, இப்பழங்குடி மக்கள் இத்தொழில்களில் அவ்வளவு அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. மில் துணிகளை ஆணும் பெண்ணும் வாங்கி உடுத்துவது மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கிறது.

பொதுவாக இப்பழங்குடிகளில் பெரும் பான்மையோர் கள்ளங்கபடற்ற வெள்ளை மனத்தினர். எல்லோரையும் நம்பி மோசம் போய்விடும் தன்மையினர் எனினும் அன்னியர்களிடத்தில் உண்மையான அன்பு உடையவர்கள். பேச்சில் இனிமையும், முகத்தில் களிப்பும், மனத்தில் அன்பும் உடையவர்கள். இப்பழங்குடி மக்கள், சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் உடையவர்கள்.

இப்பழங்குடிகளின் வாழ்க்கை, பண்பும் கலாசாரமும் நிறைந்தது. பாட்டும், கூத்தும், ஆட்டமும், களிப்பும், கேளிக்கையும், இப்பழங்குடி மக்களின் உயிர்நாடி. நாடோடிப் பாட்டுக்கள், நாடோடி ஓவியம், போன்றவைகளுக்கு இப்பழங்குடிகள் இருப்பிடம் என்றால், அது மிகையாகாது.

பழங்குடி மக்களின் சமூகம் கட்டுப் பாட்டோடு தனது அலுவலைச் செய்து வருகிறது. தலைவனின் ஆணைப் படி கீழ்ப்படிந்து அடங்கி நடக்கும் பண்புள்ளவர்கள் இப்பழங்குடி மக்கள். இவர்களுள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் கிடையாது. ஒருவனிடத்தில் அதிக மான உணவுப் பொருள் இருந்தால், அதை அவன் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வான். பெரியவர் களிடத்து மரியாதையோடும், குழந்தைகளிடத்து அன் போடும், பெண்களிடத்தில் கண்ணியமாகவும் நடந்து கொள்வான்.

இந்த நல்ல அம்சங்கள் ஒரு பக்கமிருக்க, அவர்களுள் வேறு சில அநாகரிக அம்சங்களுமிருக்கின்றன. அந்தமான், நிக்கோபார் தீவுகளிலுள்ள ஜரவாக்கள், ஓங்கே என்ற பழங்குடிகள் மிகவும் பிற்போக்கானவர்கள். அவர்கள் அந்நியர்களைக் கண்டால் அம்பெய்து கொல் லும் வழக்கமுடையவர்கள். அவர்களுக்கு விவசாயம் தெரியாது. நெருப்புண்டாக்கத் தெரியாது. ஆண், பெண் இரு பாலரும் ஆடை அணிவது கிடையாது. வில்லாலேயே மீன் பிடிப்பதில் திறமை பெற்றவர்கள். இவை அவர்களின் வாழ்க்கையைக் கெடுப்பதோடு மற்ற ஜாதிகளோடு சரிசமமான அந்தஸ்தை வகிக்கப் பெரும் தடையாயிருக்கின்றன. அத்தடைகள் நீங்க வேண்டுமானால் பழங்குடிகளுக்கு நாகரிகப் பயிற்சி அவசியம் என்பது தெளிவாகும். மனப்பண்பும் வாழ்க்கையில் ஒரு லட்சியமும் ஆசையும் தனித்து வாழ் வோருக்குக் கிடையாது. பலரோடு பழகி வாழ வேண்டும். ஒரு சமூகத்தில் பொருளாதார மேம்பாட்டிற்கு ரஸ்தாக்கள் அவசியம். ரஸ்தாக்கள் ஏற்பட்டால் பழங் குடி மக்கள் சமவெளியில் மக்களிருக்கும் ஊர்களுக்குச் சென்று அங்கே மக்கள் நடத்தும் வாழ்க்கை முறையைக் கண்டு, அவர்களோடு சல்லாபம் செய்து பல புதிய கருத்துக்களை அவர்களிடமிருந்து அறியலாம். அவர்கள்

உற்பத்தி செய்யும் சாமான்களை, வண்டிகளில் எடுத்துச் சென்று சமவெளியில் உள்ள ஊர்களில் விற்கலாம். அதனால் பழங்குடிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். அவர்களுடைய கைத்தொழில் ஓங்கும். பொருளாதார நிலையும், வாழ்க்கைத் தரமும் உயரும்.

இப்பழங்குடி மக்கள் காடுகளிலும் மலைகளிலும் பல நூற்றுண்டுகளாக வசித்து வந்திருக்கிறார்கள். இக்காடுகளிலிருந்து நமது அரசாங்கத்தாருக்கு நல்ல வருமானம் வருகிறது. ஆனால் காட்டில் வசிக்கும் பழங்குடிகளுக்குப் போதிய வருமானம் கிடைப்பதில்லை.

இதற்கு முக்கிய காரணம் காட்டிலாகா அதிகாரிகள் அனுசரிக்கும் கண்ட்ராக்டர் முறைதான். காட்டில் வசிக்கும் பழங்குடிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகுதான் அரசாங்கத்தார் வருமானத்தைப் பற்றி எண்ண வேண்டும். கண்ட்ராக்டர் முறையை அறவே ஒழித்தால்தான் இது கை கூடும். இந்தக் கொள்கையை பம்பாய் அரசாங்கத்தார் 1947—ம் வருஷத்தில் ஏற்றுக் கொண்டு பழங்குடி மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலமாகப் பழங்குடி மக்களுக்குப் வேலையும், நல்ல வருமானமும் கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள். 1953—ம் வருஷத்தில் 118 காட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் 6 லட்ச ரூபாய் லாபம் அடைந்தன. காடுகளில் வேலை செய்யும் பழங்குடி மக்களின் கூலியும் கணிசமாக அதிகரிக்கப் பட்டிருக்கிறது. அதனால் அவர்களது வருமானமும் அதிகரித்திருக்கிறது. பழங்குடி மக்கள் முன்னேறக் கூட்டுறவு முறையைக் காட்டிலும் கை கண்ட வேறு முறை கிடையாது.

காட்டில் வசிக்கும் பழங்குடிகளின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் தடையாயிருப்பது அவர்களின் விவசாய முறை. அதற்குப்

'புனம்' என்று பெயர். அதை இடம் மாற்றிப் பயிர் செய்தல் எனவும் சொல்லலாம். இந்த விவசாய முறை பழங்குடிகள் வசிக்கும் காடுகளிலெல்லாம் உண்டு. அந்த விவசாய முறை பின்வருமாறு:—

காட்டில் ஒரு தகுந்த இடத்தைப் பார்த்து குளிர் காலத்தில் அங்குள்ள மரங்களை வெட்டித் தள்ளுவார்கள். பெரிய கட்டைகளை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு இலைகளையும், கிளைகளையும் இரண்டு மூன்று நாட்கள் உலற வெயிலில் போட்டு விடுவார்கள். மழை வருவதற்கு முன்பு, உலர்ந்த இலைகளையும், கிளைகளையும் எரித்து விடுவார்கள். எரிந்த சாம்பலை எருவாக உபயோகித்து, மழைக்குப் பின் விதை விதைப்பார்கள் சாதாரணமாக, ஒரே இடத்தில் அடுத்தடுத்து மூன்று வருஷங்கள் வரை விவசாயம் செய்யலாம்.

இந்த முறையைக் காட்டிலாகா அதிகாரிகள் விரும்புவதில்லை. இதனுல் காடுகளுக்குச் சேதமும், நெருப்பினுல் ஆபத்துமுண்டாகும் என்பது அவர்களுடைய எண்ணம். ஆனுல் பழங்குடி மக்களின் நன்மையைக் கவனிக்கும் போது, அப்படிச் சேதம் நேராதபடி, சாகுபடி செய்ய வழி தேடவேண்டியது அவசியம். இதைக் காட்டிலாகா அதிகாரிகள் அனுமதித்தால் பழங்குடி மக்களின் பொருளாதார நிலைமை மேம்பாடடையும், அவர்களும் நாகரிக வாழ்க்கையை நடத்துவார்கள்.

சில பழங்குடி மக்கள் அனுசரிக்கும் விவாக முறை விசித்திரமானது. பலதரப்பட்ட சகோதரர்கள் ஒரு பெண்ணை மனைவியாகக் கொண்டு இல்லறம் நடத்தல் (Polyandry) ஒருவன் பல மனைவிகளோடு இல்லறம் நடத்தல் (Polygamy) சகோதரர்கள் தங்களுக்குள் தத்தம் மனைவிகளை மாற்றிக் கொள்வது (Polygyny) சகோதரி

களும், தங்களுக்குள் தத்தம் புருஷர்களை மாற்றிக் கொள்ளல் (Sorovate) என இவ்வாறு பலவகை மணமுறையை அவர்கள் அனுசரிக்கிறார்கள். இப்போது நாடெங்கும் ஒரு தார முறையே அமலில் இருப்பதால், இப் பழங்குடிகளும், ஒருதார முறையே அனுசரிப்பது நலம். இப்போது பல பழங்குடி மக்கள் ஒரு தார முறையே அனுசரித்து வருகிறார்கள்.

மற்றொரு கெட்ட வழக்கம் அஸ்ஸாமிலுள்ள பழங்குடிகளிடம் குடி கொண்டிருக்கிறது. அந்தமான் நிக் கோபார் தீவுகளிலுள்ள பழங்குடிகளிடமும் அவ்வழக்கம் ஓரளவு உண்டு. அதுதான் பிறரைக் காரணமின்றிக் கொல்லும் வழக்கம். அஸ்ஸாமிலுள்ள அங்காமி நாகர் ஜாதியினர் எந்த அந்நியனைக் கண்டாலும் அவனது தலையையும், கை கால்களையும் வெட்டி அவற்றை வயல் களில் கட்டி விடுவார்கள். இப்படிச் செய்தால் நல்ல விளைவு உண்டாகுமாம். இதற்கு மற்றொரு காரணம் சொல்லுகிறார்கள். அவர்கள் மேல் கோபங்கொண்டு அவர்களுக்குத் துன்பத்தை விளைவித்து வரும் கொடூர மான தேவதை சாந்தமடைந்து விடுமாம். வேறொரு முக்கியமான காரணமும் உண்டு. ஒருவனின் வீரம் சமூகத்தில் செல்வாக்கு அவன் வெட்டின தலைகளைப் பொருத்ததாம். பெண்களும் அம்மாதிரி தலைகளை வெட்டினவனைத்தான் மணப்பார்களாம். நாகர்கள் பிரதேசத்தில் இன்றைக்கும் உள்ள நிலைமை இது.

இவர்களது நிலைமையை அறிந்து வரச்சென்ற ஒரு அரசாங்கக் கோஷ்டியை ஒருமுறை இந்நாகர்கள் கொன்று விட்டார்கள் என்பதை யாவரும் அறிவர். இந்தப் பழக்கத்தை நாகர்கள் கைவிடவேண்டியது அவசியம். இப்படி, ஒரு பாவமும், குற்றமும் செய்யாத வர்களின் தலையை வாங்குவது குற்றம் என்று சட்டம் இயற்றி அப்படித் தலை வாங்குபவர்களைத் தக்கபடி தண்டிக்கவும் வேண்டும்.

பழங்குடிகள் முன்னேற, என்னென்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனிப்போம்.

1. அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு நல்ல பாதைகள் வேண்டும்.

2. காடுகளிலிருந்தே இன்னும் அதிகமான வருவாய் கிடைக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கண்ட்ராக்டர் முறையை ஒழிக்க வேண்டும்.

3. விவசாயம் செய்ய, வீடுகட்ட பால்பண்ணை நடத்த நிலங்களைப் பிரித்துக் கொடுத்துப் பண உதவியும் செய்யவேண்டும்.

4. அவர்களது பரம்பரைக் கைத்தொழில்களான, தேனீ வளர்த்தல், ஆட்டுமந்தை, மாட்டு மந்தை வளர்த்தல், கூடை பின்னுதல், இரும்புத்தொழில், துணி நெய்தல், தச்சுவேலை, ஓவியம் தீட்டல், சிற்ப வேலை முதலியவற்றை ஆதரித்து அவர்களது வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

5. எங்கே பத்துக் குழந்தைகளிருக்கின்றனவோ அங்கே இலவசமாக அவர்களுக்கு ஒரு சாப்பாட்டு விடுதியோடு பள்ளிக் கூடமும் நடத்த வேண்டும். கூர்த்த அறிவு கொண்ட குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து மேல் படிப்புக்கு வசதியளிக்க வேண்டும்.

6. முதியோர் கல்வி, ஸ்தாபனங்கள் நடத்தல் வேண்டும்.

7. பழங்குடிகளின் பாட்டுக்கள்' விளையாட்டுக்கள், கூத்துக்கள், நாடகங்கள், புதிர்கள், பழமொழிகள், பண்டிகைகள், திருவிழாக்கள் இவை அழிந்து போகாமல் பராமரித்தல் வேண்டும்.

8. சுகாதார வசதிகளான குடி தண்ணீர், சாக்கடை வசதி, கக்கூஸ் ஆஸ்பத்திரி வசதிகள், போன்றவைகளை அளித்தல் வேண்டும்.

9. இவர்களின் நலத்திற்காகக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி இவர்களது சமூக, சுகாதார, பொருளாதார, சீரான வாழ்க்கைக்கு ஆதரவளிக்க வேண்டும். இவை போன்ற பல நடவடிக்கைகள் வாயிலாக நாம் இவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலாம்.

567.2
N83

எல்லாவற்றையும் விட அவர்களுக்கு முக்கியமாக 'உழைப்பேதான் முன்னேற்றத்தை அளிக்கும். உழைப்பாளிகளுக்குத்தான் சுகம். மற்றவர்களுக்குக் கிடையாது' என்பதை நன்கு உணர்த்தவும் வேண்டும்.

உண்மையைச் சொன்னல் நாம் எல்லோருமே பழங்குடிகள்தான். காலத்தின் போக்கிலே பலர் பல விதமாக மாறியிருக்கிறோம். ஒவ்வொருவரிடமும் தனிப் பண்பும், கலாசாரமும் உண்டு. ஆனல் சமூக வாழ்க்கையிலும், பொது வாழ்விலும் எவ்விதமான வித்தியாசத்திற்கோ, ஏற்றத் தாழ்வுக்கோ இடமில்லை. முற்போக்கடைந்தவர்கள், பிற்போக்கானவர்களுக்குத் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை தார்மீகப் பயிற்சியை, கலாசாரப் பண்பை அளிக்க வேண்டும். பழங்குடிகளிடமிருந்து முற்போக்கடைந்தவர்கள் அவர்களின் பண்பு கலாசாரத்தை விருப்பு வெறுப்பின்றி அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்த நாகரிகப் பயிற்சி பழங்குடி மக்களுக்கு மாத்திரமல்ல, அவர்களோடு நெருங்கிப் பழகும் எல்லோருக்கும் அவசியமே.

13523

## திரு. சி. ரா. வேங்கடராமன் B.A., B.L.,

பிறந்த ஆண்டு 1899. சிங்காநல்லூர் திரு. ராமகிருஷ்ண ஐயரின் புதல்வர்; இந்திய ஊழியர் சங்கத்தின் செயலாளராயிருந்து பழங்குடி மக்களுக்குப் பலவகையிலும் தொண்டாற்றியவர்; சாரணர் இயக்கத்திலும் ஈடுபட்டுத் தலைமைக் கமிஷனராய் இருந்து பணி புரிந்தவர்; GUILD OF SERVICE வழியாக ஹரிஜனங்களுக்குப் பலவாறு தொண்டு புரிந்தவர்.

இவர் எழுதிய பிற நூல்கள்; இந்திய சாரணீயம், பழங்குடி மக்களைப் பற்றிப் பல கட்டுரைகள், நேருஜியின் கடிதங்கள் (மொழி பெயர்ப்பு), பல தலைமுறைகளில் ஹரிஜனங்கள் (ஆங்கிலம்)